விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 14 வியாழக்கிழமை (30.07.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 223




## போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான

# ஐ.நாவின் நீதி சந்தேகமே!

## சனல் 4 ஊடகம் கவலை வெளியீடு




(லண்டன்)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகத்தால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் ஊடாக உண்மையான நீதி கிடைக்குமா? என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக பிரித்தானியாவின் சனல் 4 ஊடகம் தெரிவித்துள்ளது. (24ஆம் பக்கம் பார்க்க)

## பேரறிவாளன், முருகன், சாந்தனின் மரண தண்டனை இரத்து சரியே!

மத்திய அரசின் மனுவை நிராகரித்தது நீதிமன்றம்



(டில்லி)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன், முருகன் மற்றும் சாந்தன் ஆகியோரின் மரண தண்டனை

24 ஆம் பக்கம் பார்க்க

## தேர்தல் வன்முறைகள் 700ஆக அதிகரிப்பு - கபே

(கொழும்பு)

தேர்தல் வன்முறைகள் மற்றும் விதிமுறை மீறல்கள் தொடர்ந்து அதிகரித்து வருவதாக கபே அமைப்பு கவலை வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு இரண்டு வார காலத்துக்கும் சற்று கூடுதலான நாட்களே இருக்கும் நிலையில் இதுவரை 700 முறைப்பாடுகள்

24 ஆம் பக்கம் பார்க்க













நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவணா ரெக்ஸ்
SARAVANA TEX
நல்லூரில் மட்டும்தான் சரவணா ரெக்ஸ் உள்ளது



நல்லூரில் மட்டும்தான்
ஆடித்தள்ளுபடி
ஆகஸ்ட் 18 வரை

நீங்கள் ஒரு சாறி
வாங்கும் பணத்துக்கு
இரண்டு சாறி வாங்கலாம்

வேறு எங்கும்
கிளைகள் இல்லை

ஆடி சேல்
அதிர்ஷ்ட சேல்

526, 529.
பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(சிவன்கோயில் அருகாமை)
யாழ்ப்பாணம்.

(சி-1687)


# யாழில் கடந்த ஆறு மாதங்களில்

# 311 வழக்குகள் பதிவு

# ரூ. 1,231,000 தண்டப்பணம்

## நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை தகவல்

யாழ். மாவட்டத்தில் கடந்த ஆறு மாதங்களில் மட்டும் 311 நுகர்வோர் தொடர்பான வழக்குகள் பதியப்பட்டுள்ளதாக யாழ். நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட இணைப்பதிகாரி த.வசந்தசேகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

காலாவதி பொருள் விற்பனை, விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாமை, உற்பத்திப் பொருள தொடர்பான விபரம் உரிய முறையில் காட்சிப்படுத்தாமை, நுகர்வோரை சிறியளவில் ஏமாற்றியமை வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்ட பொதிகள் சேவைகள் உரியவர்களிடம் கிடைக்கப் பெறாமை போன்ற காரணங்களுக்காக இவ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

மேலும் அரையாண்டு காலப்பகுதியில் ஏப்ரல் மாதம் அதிக பட்ச வழக்காக 82 வழக்குகள் பதியப்பட்டு ஒரு இலட்சத்து 9ஆயிரம் ரூபாய் தண்டப்பணமாக அறவிடப்பட்டது எனவும் ஜனவரி மாதம் 24 வழக்குகளுக்கு ஒரு இலட்சத்து 39 ஆயிரத்து 500 ரூபாயும், பெப்ரவரி மாதம் 45 வழக்குகளுக்கு 92ஆயிரத்து 500 ரூபாயும், மார்ச் மாதம் 56 வழக்குகளுக்கு 3 இலட்சத்து 35 ஆயிரத்து 500 ரூபாயும், மே மாதம் 53 வழக்குகளுக்கு 2 இலட்சத்து 51ஆயிரத்து 500 ரூபாயும், ஜூன் மாதம் 51 வழக்குகளுக்கு 3 இலட்சத்து 3ஆயிரம் ரூபாயும் என கடந்த ஆறு மாதங்களில் 311 வழக்குகளுக்கு 12 இலட்சத்து 31 ஆயிரம் ரூபாய் தண்டப்பணமாக அறவிடப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-12)

## குருதி தட்டுப்பாடு: வழங்க கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் சகல இரத்த வகைகளுக்கும் தட்டுப்பாடு நிலவுவதாக அறியப்பட்டுள்ளது.

எனவே இரத்ததானம் செய்யவுள்ள குருதி கொடையாளிகள் அதனை வழங்கி உதவுமாறு யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி கேட்டுள்ளார். (எ-12)


கண்ணீர் அஞ்சலி

அமரர் மார்க்கண்டு நவரத்தினம்

எமது கல்லூரியில் அலுவலக உதவியாளர்
திரு.கணேசராஜா
அவர்களின் அன்பு மாமனார்
அமரர் மார்க்கண்டு நவரத்தினம்
அவர்கள் 21-07-2015 அன்று காலமாகிவிட்டார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு ஆத்மசாந்தி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

(C-1694)

அதிபர்,
ஆசிரியர்கள்
யா / கோண்டாவில் இந்துக் கல்லூரி

6 மாதங்களில் வெளிநாட்டு விசா
& தொழில் ஏற்பாட்டுடன்
SIKARAM
Get Set for Careers & Take off Your Dreams
Business &
Hotel Management
புதிய பிரிவு ஆரம்பம் - செவ்வாய், வியாழன் 10.00 am
Call:077 36 16 798
Sikaram (Pvt) Ltd.
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம்) Tel: 021 222 00 11

DMI
COMPUTER EDUCATION
Diploma in
Auto CAD
2D & 3DModeling
புதிய பிரிவுகள் ஆரம்பம்- சனி, ஞாயிறு 9.30-
DMI COMPUTER EDUCATION
113, கன்னாதிட்டி வீதி யாழ்ப்பாணம். Tel:. 021 222 4403

வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

நம்பிக்கை இழக்காதீர்கள், அக்கறை காட்ட நாங்கள் இருக்கின்றோம்...

நானும் ஒரு தந்தை - உங்களின் வலி எனக்குத்தெரியும்

யாழ் நகரம் யுத்த, வன்முறை, ஆக்கிரமிப்புக்களால் அடையாளங்களைக் கடந்த காலங்களில் பெற்றிருந்தது. எம் பிரதேச மக்களின் இன்றைய பிரச்சினைகளில் காணாமல் போனவர்கள் பற்றிய பிரச்சினை அதிகம் மனதை உலுக்கும் பிரச்சினையாகவும், தீராது வடியும் கண்ணீராகவும் இருக்கின்றது. அம் மக்களின் பிரச்சினைகளை புரிந்து கொண்டு அம் மக்களுக்கு கௌரவ ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஊடாக தீர்வைப் பெற்றுக் கொடுத்துள்ளேன். மிக விரைவில் உங்கள் பிள்ளைகளின் நிலையை அறியத்தருவேன்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு



(சி-280)

அங்கஜன் இராமநாதன்

புதிய நாடு புதிய தலைவர் புதிய தலைமுறை புதிய எதிர்பார்ப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email: Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

## சம்பந்தன் உட்பட நால்வருக்கு விசேட பாதுகாப்புச் சலுகை

### தேர்தல்கள் ஆணையாளர் உத்தரவு

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளருமான இரா. சம்பந்தன் உள்ளிட்ட நான்கு வேட்பாளர்களுக்கு, தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய விசேட சலுகைகளை வழங்கியுள்ளார்.



எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும்

23ஆம் பக்கம் பார்க்க....

## ஆதரவு வழங்க மாட்டேன்

## தேர்தலில் நடுவுநிலை

முதல்வர் பளிச்

### "உங்கள் பிரதிநிதிகளை நீங்களே தெரிவு செய்யுங்கள்"



(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பாராளுமன்ற பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்ற எந்தத் தரப்பினருக்கும் நான் பாரபட்சமாக ஆதரவு வழங்கப் போவதில்லை என தெரிவித்துள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், உங்களுக்கான உங்களின் பிரதிநிதிகளை நீங்களே சரியாக அறிந்து தெரிவு செய்யுங்கள் என அறிவித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## யாழ். நீதிமன்றத் தாக்குதல்; இருவருக்கு பிணை அனுமதி

### ஏனைய 27 பேர் தொடர்ந்தும் மறியலில்

நீதிமன்றத்தை தாக்கியமை, சிறைச் சாலை வாகனத்தை அடித்து சேதப் படுத்தியமை மற்றும் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பிலான சந்தேகநபர்கள் இருவருக்கு பிணை வழங்கியதுடன 27 பேரை தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம உத்தரவிட்டுள்ளது.

நீதிமன்றம் தாக்குதல் தொடர்பிலான வழக்கு யாழ். நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் பி.சிவகுமார் முன்னிலையில் நேற்று விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே மேற்கண்ட உத்தரவைப் பிறப்பித்தார்.

பிணையில் செல்ல அனுமதிக் கப்பட்ட இருவரும் 5 இலட்சம் ரூபாய பெறுமதியான ஐந்து ஆட்பிணையில் செல்ல அனுமதி வழங்கியதுடன் ஏனைய 27 பேரையும எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார். (செ-12)

## யாழ். பரீட்சை மண்டபங்களுக்கு 24 மணி நேர பொலிஸ் பாதுகாப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் க.பொ.த உயர்தர பரீட்சை நிலையங்களை கொண்ட அனைத்து பாடசாலைகளுக்கும் இம்முறை பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப் படவுள்ளனர் என யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி யு.கே.வூட்லர் தெரிவித்தார்.

இதற்கான கலந்துரையாடல் நேற்று காலை வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலையில் இடம்பெற்றது. இதுகுறித்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் ஓகஸ்ட் 4ஆம் திகதி க.பொ.த உயர்தரப்பரீட்சை ஆரம்பமாகவுள்ளது. இதேவேளை 23ஆம திகதி புலமைப்பரிசில் பரீட்சையும் இடம்பெறவுள்ளது.

மீண்டும் பரீட்சைகள் அனைத்தும் செப்ரெம்பர் 08ஆம் திகதி முடிவுக்கு வருகின்றது. இந்தநிலையில், நடைபெறவுள்ள பரீட்சையில்

23ஆம் பக்கம் பார்க்க....

## அமெரிக்க முகாம்; ஐ.தே.க இணக்கம்?

(கொழும்பு)

ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் பாதுகாப்புக்காக அமெரிக்க இராணுவ முகாம் ஒன்றை இலங்கையில் ஸ்தாபிக்க ஐக்கிய தேசியக் கட்சி இணங்கியுள்ளதோ என்ற சந்தேகம ஏற்பட்டுள்ளதாக லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊட

23ஆம் பக்கம் பார்க்க....

## பயணப் பொதிக்குள் பெண்ணின் சடலம்





(கொழும்பு)

கொழும்பு பெஸ்டியன்மாவத்தை தனியார் பேருந்து தரிப்பிடத்தின் அநுராதபுர பேருந்துகள் நிறுத்தும இடத்தில், பயணப் பொதி ஒன்றில்

23ஆம் பக்கம் பார்க்க....

## சுதந்திரக் கட்சியின் மத்திய குழு கூடுவதற்கான இடைக்கால தடையை நீடித்தது நீதிமன்றம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அனுமதியின்றி மத்திய செயற்குழுவை கூட்டுவதற்கு விதிக்கப்பட்டுள்ள இடைக்கால தடையை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் மேலும் நீடித்து உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவரின் அனுமதி இன்றி மத்திய செயற்குழுவை கூட்ட அனுமதி வழங்கக் கூடாது என அக்கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர பிரசன்ன சோலாங்காராச்சி மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார். இந்த மனுவை பரிசீலித்த கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று புதன்கிழமை வரை தடையுத்தரவு பிறப்பித்திருந்தது.

இந்நிலையில் இந்த மனு மீதான விசாரணை நேற்று மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்ட போது, இது தொடர்பில் எதிர்ப்பு இருப்பின் அடுத்த மாதம் 7ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்குமாறு மனுவின் பிரதிவாதியாக பெயரிடப்பட்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அநுர பிரியதர்ஷன யாப்பாவுக்கு நீதிமன்றம் பணித்தது.

அத்துடன், அதுவரை பிறப்பிக்கப்பட்டுள்ள இடைக்காலத் தடை நீடிக்கப்படுவதாக கொழும்பு மாவட்ட நீதிபதி ஹர்ச சேதுங்க அறிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யாப்



பின் பிரகாரம் கட்சியின் மத்திய செயற்குழுவை கூட்டும் அதிகாரம் கட்சியின் தலைவருக்கு உண்டு என பிரசன்ன சோலங்காராச்சி

23ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கை வருகிறார் ரொனி பிளேயர்

(லண்டன்)

பிரித்தானிய முன்னாள் பிரதமர ரொனி பிளேயர் அவரது குடும்பத்தினருடன் அடுத்த மாதம் 11 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதாக வெளிவிவகார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரித்தானிய முன்னாள் பிரதமருடன் அவரது பாரியார் மற்றும் இரண்டு புதல்வர்களும் இலங்கை வரவுள்ளனர்.

நாட்டில் இரண்டு வாரங்கள் தங்கியிருக்கும் இவர்கள். அநுரா

23ஆம் பக்கம் பார்க்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 247

## அஹங்காரத்தை விடுதல்

...இன்னொரு பக்கம் உங்கள் அஹங்காரத்தால் நிறைந்திருப்பீர்களானால் உங்களால் படைக்க இயலாது; அவ்வாறு படைத்தாலும் உங்கள் படைப்பு ஒரு உயிரற்ற படைப்பாகவே இருக்கும். இது ஒரு பிளாஸ்டிக் ரோஜாவைப் போல இருக்கும்; எல்லாம் சரியாகக் காணப்பட்டாலும் அதில் மணமோ, உயிரோ இருக்காது. ஒரு படைப்பாளி அன்பினால் படைக்கும் பொழுது அவனால் படைப்புக்கு ஏதோ ஒரு சிறப்பான தன்மையைத் தர முடியும். ஆனால், அஹங்காரத்தினால் படைக்கும்பொழுது படைப்பில் உயிர் இருக்காது.

நீங்கள் பிரபஞ்ச இருப்புத் தன்மையுடன் இசைவாக இல்லாத பொழுது அதன் நறுமணத்தைத் தவறவிட்டு விடுவீர்கள். அது நீங்கள் ஒரு அற்புதமான நறுமணத்தால் சூழப்பட்டிருக்கும் பொழுது உங்கள் நாசியை நாற்றமெடுக்கும் விரல்களால் மூடிக் கொண்டு இருப்பதைப் போல இருக்கிறது. இதுதான் அஹங்காரம். நீங்கள் பிரபஞ்சத்தின் நறுமணத்தை உணரும் பொழுது அதன் ஒரு மித்த நிகழ்வையும் உணர ஆரம்பிப்பீர்கள்.

நீங்கள் முழு பிரபஞ்ச இருப்புத் தன்மையுடனும் ஒத்திசைவாக இருப்பீர்கள். ஒவ்வொரு இலையும் சிறு கிளையும் பிரபஞ்ச இருப்புத் தன்மையின் அல்லது கடவுளின் வெளிப்பாடே என்பதை உங்களால் காண முடியும். இந்த நிலையில் இருக்கும் பொழுது நீங்கள் தேடுவது அனைத்தும் கிடைக்கும்; ஏனெனில், நீங்கள் பிரபஞ்ச இருப்புத் தன்மையுடன் இசைந்து சென்று கொண்டிருக்கிறீர்கள். அப்பொழுது வாழ்க்கையே ஒரு அற்புதமாகிவிடும்! இதைத்தான் நாம் பிரபஞ்ச இருப்புத்தன்மையின் ஒருமித்த நிகழ்வு என்கிறோம்.



மேலும் ஒரு விடயத்தைப் புரிந்து கொள்ளுங்கள்.... நீங்கள் பிரபஞ்ச இருப்புத் தன்மையுடன் ஒத்திசைவுடன் இருக்கும்பொழுது பேராசையுடன் எதையும் தேடிக் கொண்டிருக்க மாட்டீர்கள். வெறுமனே, பிரபஞ்ச இருப்புத் தன்மையே நீங் கள் தேடுவதற்கும் முன்பே, உங்க ளுக்கு அந்தக் கணத்திற்கு என்ன தேவையோ, அதைக் கொடுத்துக் கொண்டே இருக்கும். நீங்கள் தேடுவது கிடைக்கும் என்று நான் சொன்னது இதைத் தான்.

பிரச்சினை என்னவென்றால் நமது மூலமும் நமக்குள் வெகு ஆழுத்தில் பொதிந்து கிடப்பதுமான பிரபஞ்ச இருப்புத் தன்மையில் இருந்து நம்மை தூரப்படுத்திக்கொண்டுவிட்டோம்.

அதனால் அதைத் தொடர்ந்து ஞாபகப் படுத்திக்கொண்டே இருக்க வேண்டிய தேவை இருக்கிறது. முதலில் நம்மைச் சுற்றியிருக்கும் அழகை ஆராதிப்பதன் மூலமும் பாராட்டுவதன் மூலமும் நமது அஹங்காரத்தை விட ஆரம்பிக்க முடியும். அதுவே உருமாற்றத் திற்கான விதையை உங்களுக்குள் விதைக்கத் தொடங்கிவிடும். அதுவே உங்களுக்கு உங்களுடைய அஹங்காரத்தை விட பலம் பொருந்திய உயிர்ச் சக்தி ஒன்று இந்தப் பிரபஞ்சத்தை வழி நடத்திக்கொண்டிருக்கிறது என்பதைப் புரிய வைத்துவிடும்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி




### கடவுளை விடிய விடிய மனம் உருகி கண்ணீருடன் வழிபட்ட குரங்கு

வைத்தீஸ்வரன் கோயிலில் குரங்கு ஒன்று பத்ரகாளியம்மனை வழிபட்டது பொது மக்களை ஆச்சர்யம் அடைய வைத்துள்ளது.

நாகை மாவட்டத்தில் உள்ள வைத்தீஸ்வரன் கோயிலின் பின் பிரகாரத்தில் உள்ள பத்ரகாளியம்மன் கோயிலில் கடந்த சில தினாங்களுக்கு முன், மாலை 3 மணிக்கு வந்த குரங்கு, அம்மன் கருவறை எதிரே அமர்ந்துகொண்டது.

இதையடுத்து பக்தர்களுக்கு தீபத்தை காட்டிய சிவாச்சாரியார்கள், குரங்குக்கும் காட்டிய போது சாமியின் தரிசனத்தை ஏற்றுக்கொண்ட குரங்கு, அங்கேயே அமர்ந்துகொண்டு ஆழ்ந்த வழிபாட்டில் ஈடுபட்டது.

அப்போது, கண்களில் கண்ணீர்விட்டு பத்ரகாளியம்மனை வழிபட்டுக் கொண்டிருந்ததை பார்த்து சிவாச்சாரியார்கள் ஆச்சர்யம் அடைந்தனர்.



அம்மனை வழிபட வருபவர்கள் யாரையும் குரங்கு எந்த தொந்தரவும் செய்யவில்லை.

இரவு 9 மணி வரை பத்ரகாளியம்மனை தரிசித்த குரங்கு, கோயில் ஊழியர்கள் இரவு 9 மணிக்கு கோயிலை பூட்டிய போதும் குரங்கு வெளியில் செல்ல வில்லை. மறுநாள் காலை கோயில் ஊழியர்கள் சன்னதியை திறந்த போதும் குரங்கு அங்கே தொடர்ந்து வழிபாட்டில் இருந்ததால் கோயில் அறங்காவலர் குழுவினரிடையே பெரும் ஆச்சர்யத்தை ஏற்படுத்தியுள்ளது.




### தேங்காய்ப்பால் குழம்பு



**தே.பொருட்கள்:**

தேங்காய் - 1,
உருளைக்கிழங்கு - 4 (நறுக்கியது),
கத்திரிக்காய் - 4 (நறுக்கியது),
கரட் - 1 (நறுக்கியது),
முருங்கைக்காய் - 1 (நறுக்கியது),
எலுமிச்சை - 1/2,

பூண்டு - 1, வெங்காயம் - 1 (நறுக்கியது), மிளகாய் - 4, மல்லி - 2 டீஸ்பூன், சீரகம் - 2 டீஸ்பூன், சோம்பு - 1/2 டீஸ்பூன், பட்டை - 1, கிராம்பு - 2, ஏலக்காய் - 2, கறிவேப்பிலை - சிறிது, எண் ணெய் - தேவையான அளவு.

**செய்முறை:-**


முதலில் மிக்ஸியில் மிளகாய், மல்லி, சீரகம் ஆகியவற்றை சேர்த்து, தண்ணீர் ஊற்றி பேஸ்ட் செய்து கொள்ள வேண்டும். பின்னர் தேங்காயை துருவி, மிக்ஸியில் போட்டு, சிறிது தண்ணீர் ஊற்றி நன்கு அரைத்து, வடிகட்டி பால் எடுத்துக் கொள்ள வேண்டும். பின் மீண்டும் அதில் தண்ணீர் ஊற்றி, தனியாக ஒரு பாத்திரத்தில் இரண்டாவது பால் எடுத்துக் கொள்ள வேண்டும். அடுத்து அந்த இரண்டாவது பாலில் அரைத்து வைத்துள்ள பேஸ்ட்டை சேர்த்து கலந்து கொள்ள வேண்டும்.

பின்பு அதில் காய்கறிகளை சேர்த்து, உப்பு சிறிது தூவி, அடுப்பில் வைத்து வேக வைக்க வேண்டும். காய்கறிகளானது வெந்ததும், அதில் முதல் தேங்காய் பாலை ஊற்றி, மஞ்சள் தூள் சேர்த்து கொதிக்க விட வேண்டும். பிறகு மற்றொரு அடுப்பில் ஒரு பாத்திரத்தை வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், வெங்காயம், சோம்பு, பட்டை, கிராம்பு, ஏலக்காய், கறிவேப்பிலை சேர்த்து தாளித்து, பின் குழம்பில் கொட்ட வேண்டும். இறுதியில் அதில் எலுமிச்சையை பிழிந்து இறக்கினால், தேங்காய் பால் குழம்பு ரெடி!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மண்டைதீவு- வேப்பந்திடல் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய இரதோற்சவ சிறப்புமலர்- 30.07.2015


ஆசி வழங்கிய அந்தணச் சிவாச்சாரியர்கள்



மஹோற்சவ பிரதம குரு சிவஸ்ரீ மங்களேஸ்வரக் குருக்கள்



கும்பாபிஷேக பிரதம குரு சிவஸ்ரீ பாலசுப்பிரமணிய குருக்கள்




ஆலயத்தின் முகப்புத் தோற்றம்


ஆசி வழங்கிய சமயத் தலைவர்கள்




நல்லை ஆதீன முதல்வர்



சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்கள்




கலாநிதி ஆறுதிருமுருகன்



ஜாக்கிரத சைத்தன்ய சுவாமி

## ஆலய பரிபாலன சபையினரின் வாழ்த்து




போசகர் திரு. க.சிவராஜா.



தலைவர் செ.அ. ஸ்ரீபத்மராஜா



செயலாளர் திருமதி: த. மாலினிதேவி



பொருளாளர் ஜெ.பிரேமகாந்தன்

30.07.02015
தேர்த்திருவிழா
***காலை 6.00 மணி***
பூஜை ஆரம்பம்
***காலை 8.00 மணி***
வசந்த மண்டபப் பூசை
***காலை 10.00 மணி***
அம்பாள் தேரில்
ஆரோகணம் செய்தல்

## வானுறையும் தெய்வங்களின் ஆசி



சிவஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவக் குருக்கள்



சிவஸ்ரீ ஸ்கந்த பாலசுப்பிரமணியக் குருக்கள்



ஸ்ரீமான் க. அம்பலவாணர்



ஸ்ரீமான் நா. தாமோதரம்பிள்ளை



ஸ்ரீமான் சி.நல்லையா



ஸ்ரீமான். ச. சிவப்பிரகாசம்



திருமதி அருந்ததி சிவப்பிரகாசம்

## அன்னை முத்துமாரி

பூத்தவளே புவனம் பதினான் கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின் கரந்தவளே கறைக் கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்த ர்க்கு இளையவளே
மாத்தவளே உன்னை அன்றி மற் றோர் தெய்வம் வந்திப்பதே

– அபிராமி பதிகம்–

இந்துமா கடலின் நித்திலமென விளங்கும் ஈழத்திருநாட்டின் வடக்கே அதன் சிரமாக விளங்குவது யாழ்ப் பாணம் எனும் நகரமாகும். அதன் சப்ததீவுகளில் தலையாய விளங்கும் மண்டைதீவு நாற்புறமும் கடலால் சூழப்பெற்று வான்தவழும் பனை மரமும் வளமும் வளமான தென்னைகளும் தேன்சொரியும் கனிமரங்களும் குறையாத நெல்வளமும் பூவ கையும் புகையிலையும் கடல் படு திரவியங்களையும் நிறைவாகக் கொண்டு விளங்குகிறது.

இத்தீவின் மேற்றிசையில் சிவ னும் கீழ்த்திசையில் சக்தியும் கோயில் கொண்டெழுந்தருளி இருப்பது மகிமை பொருந்தியது. போர்ச்சூழ்நிலை காரணமாக பூஜைகள், பிரார்த்தனைகள் இலக்குமி இல்லாமை போன்ற சில காரணங்களால் இப்பகுதி பொலிவிழந்து பிரகாசமற்றுக் காணப்பட்டது.

வேப்பந்திடலில் கோயில் கொண்டு எழுந்தருளி இருந்து அண்டசராசரங்களை எல்லாம் அருள்பாலித்து ஆட்சி செய்கின்ற அன்னை எனது காணாமல் போன மகனைத்தேடி அலைந்து இறு தியில் முத்துமாரி தாயிடம் அதே தஞ்ச மென வாசல் படியிலேயே தலைவைத் தேன். என் வேண்டுதலுக்கு கருணை கொண்டு மகனை கோவிலுக்கே கொண்டு வந்து சேர்த்தமை பலருக்கும் தெரியும்.

இவ்வாலயம் இறுதிக்காலத்தில் இந்து சமய பீடாதிபதியாக இருந்தவ ரும் ஆரம்பத்தில் இவ்வாலய அர்ச்ச கராக இருந்தவருமான சாம்பசிவ குருக்கள் காலத்தில் மிகவும் எழுச்சிக ரமாக இருந்தது. சாம்பசிவக்குருக்கள் அவர்கள் குடும்பத்தோடு ஆலய வளா கத்திலேயே குடியிருக்க ஆலய முகா மையாளர் சகல வசதிகளையும் செய்து கொடுத்திருந்தார். அவர் மாலை வேளைகளில் இப்பகுதி மாணவச் செல்வங் களை அழைத்து சைவவினாவிடை யையும் சைவ மதத்தைப் பற்றியும் போதித்தவர். அத்தோடு கார்த்திகேய வித்தியாசாலை அதிபர் வேலுப்பிள்ளை அவர்களின் அனுமதியோடு காலை யில் பாடசாலை மாணவர்களை அழை த்து பஜனை வைத்ததோடு பிரசாதங்களும் வழங்கி வைத்தார். அதுமட்டு மன்றி வெள்ளிக்கிழமை மாலை வேளை தோறும் அம்பாளை எழுந்தருளிவித்து ஆலய வாசலிலேயே வைத்து பிரசங்கங்களை நடத்தினார். அவ்வேளைகளில் திரு.மு.பரமானந்தம் ஆசிரியர் வீணை வாசிக்க திரு.செ. இராமலிங்கம் ஆசிரியர் மிருதங்கம் வாசிப்பார். மகோற்சவத்தின் போது தீர்த்த உற்சவ திருவிழாவை தானே பொறுப் பேற்றுச் செய்தார். இவர் அப்படி அம்பாளுக்கு செய்த தொண்டுகளும் பணிகளும் ஏராளம். அவரது உடன் பிறப்பான பாலசுப்பிரமணிய குருக்கள் தொடர்ந்து 35 வருடங் களுக்கு மேல் மிகக் குறைந்த வேதனத்தோடு அம்பாளுக்கு சேவை செய்து வந்தமையும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கதாக உள்ளது.

சிவசக்தி இந்து இளைஞர் மன்றத்தினர் சகல வழிகளிலும் எம் கிராமம் பூராகச் சென்று பல அளப்பரிய தொண்டுகளையும் பணிகளையும் ஆலயங்களி லும் பாடசாலைகளிலும் பொது நிறுவனங்களிலும் முன்னின்று செய்து வருவதை நாம் எல்லோரும் பாராட்ட வேண்டும்.

இத்தோடு பொதுமக்களோடு சேர்ந்து இம்மன்றத்தினர் முன்னின்று இவ்வாலயத்திற்கு செய்த சிரமதானங்கள் மிகமிகப் பெறுமதி வாய்ந்தவை. எம் ஆலயத்திற்கு இன்னும் பல முக்கியமான தேவைகள் மிக விரைவாகச் செய்யப்பட வேண்டியுள்ளது.

அவையாவன, பின்மண்டபம், கொடித்தம்ப வேலை, தேர் சப்பரம் பீடம் போன்ற செயற்பாடுகள் ஆகும்.

இவ்வா லயத்திற்கு தொண்டு புரிந்த, புரிகின்ற, புரியப்போகின்ற அத்தனை தொண்டர்க ளுக்கும் அம்பாளின் அனுக்கிரகம் எல்லோ ருக்கும் கிடைக்கவேண்டும் என அவளது பாதார விந்தங்களைப் பணிகின்றேன்.

கு.க. நடராசா, மண்டைதீவு.

## திருவிழா உபயகாரர்களின் வாழ்த்து



திரு. [illegible]



செல்வி. சி.தயாநிதி



செல்வி. க. பாக்கியலட்சுமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் மறைவுக்கு அஞ்சலியும் அனுதாப பதிவும் நேற்று முன்தினமும் நேற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத்தூதரகத்தில் நடைபெற்றது. (படங்கள்: பொ.சோபிகா)

## சட்டத்தை மீறும் தனியார் பேருந்துக்களால்

# இ.போ.சவுக்கு பாரிய நட்டம்

## வடக்கு மாகாண சாலை முகாமையாளர்கள் வருத்தம்

(யாழ்ப்பாணம்)

**சட்டத்தை மீறுகின்ற வகையில் செயற்படும் தனியார் போக்குவரத்து பேருந்துகளினால் இலங்கை போக்குவரத்து சபைக்கு பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டியுள்ள வடக்கு மாகாண சாலை முகாமையாளர்கள் இது தொடர்பில் உடனடியாக வடக்கிலுள்ள அரச அதிபர்கள், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

கோண்டாவிலில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்து சபையின் வடபிராந்திய பிரதான முகாமையாளர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர். இச்சந்திப்பில் இலங்கை போக்குவரத்து பேருந்து சேவையின் போது எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் சம்பந்தமாகவும், எதிர்கால சேவைகள் தொடர்பிலும் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கப்பட்டிருந்தன.

வடக்கு மாகாணத்தில் தனியார் பேருந்து போக்குவரத்து பேருந்து சேவை, இலங்கை போக்குவரத்து பேருந்து சேவை என்பன 60:40 எனும் அடிப்படையிலேயே இடம்பெறுகின்றன. தனியார் போக்குவரத்து சேவை 60 வீதமாகவும் இலங்கை போக்குவரத்து சேவை 40 வீதமாகவும் உள்ளது. இது முதலில் மாற்றி அமைக்கப்பட வேண்டும். ஏனைய மாகாணங்களில் 50:50 என்ற வீதத்திலேயே சேவைகள் இடம்பெறுகின்றன.

வடக்கில் சேவையில் ஈடுபடுகின்ற தனியார் பேருந்துகள் ஐம்பதுக்கும் மேற்பட்ட பேருந்துகள் அனுமதிப் பத்திரம் இல்லாத நிலையிலேயே சேவையில் ஈடுபடுகின்றன. மற்றும் கணிசமானவை தற்காலிக அனுமதிப் பத்திரத்துடனேயே சேவையில் ஈடுபடுகின்றன. இந்த பேருந்துகள் அனைத்தினதும் சேவைகள் முதலில் இரத்து செய்யப்படல் வேண்டும். தனியார் பேருந்துகள் சரியான நேர அட்டவணை அடிப்படையில் சேவையில் ஈடுபடாத காரணத்தினால் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகள் பெரும் நட்டங்களை எதிர்நோக்கி வருகின்றன.

யுத்த காலத்தின் போது இலாபம் பாராது சேவையாற்றிய நாம் தனியார் பேருந்துகளின்சட்டவிரோத செயற்பாடுகளினால் தற்போது பெரும் நட்டங்களை எதிர்நோக்கி வருகின்றோம். உள்ளூரில் சேவையில் ஈடுபடுகின்ற பேருந்துகளில் பெரும்பாலானவை உரிய கட்டணத்தை அறவிடாமல் பற்றுச்சீட்டினையும் வழங்காமல் சேவையில் ஈடுபடுகின்றன. இதனால் அரச போக்குவரத்து சேவைகள் பெரிதும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளன.

இது தவிர அரச போக்குவரத்து பேருந்து இனந்தெரியாத நபர்களினால் தாக்கப்பட்ட சம்பவங்களும் தொடரச்சியாக நடைபெற்று வருகின்றன. இவை தொடர்பில் பொலிஸாரிடமும் முறையிடப்பட்டும் பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் தொடர்ந்தும் இருந்து வருகின்றனர். இது தவிர தனியார் போக்குவரத்து சபையினரின் சட்டவிரோத போக்குவரத்து நடவடிக்கைகள் தொடர்பில் வடக்கில் உள்ள அரச அதிபர்களிடம் முறையிடப்பட்டும் எவ்வித பிரயோசனமும் இல்லை.

இவ்வாறு இவை தொடர்பில் அனைத்து தரப்பும் எமது விடயத்தில் மௌனம் சாதித்தே வருகின்றனர் என அவர்கள் தெரிவித்தனர். இலங்கை போக்குவரத்து சபையின் பிரதம செயலாற்று அத்தியட்சகர் உபாலி கிரிபத்தொடுவ தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பில், பிராந்திய செயலாற்று முகாமையாளர் கே.கேதீசன், பிராந்திய பொறியியல் முகாமையாளர் எஸ்.பாஸகரன், பிராந்திய கணக்காய்வாளர் ஆர்.செல்வராசா, பிராந்திய கணக்காளர் கே.அழகேசர் ஆகியோரும்,

யாழ்.சாலை முகாமையாளர் செ.குலபாலசெல்வம், கிளிநொச்சி சாலை முகாமையாளர் எஸ்.ஜீவானந்தம், மன்னார் சாலை முகாமையாளர எச்.சாஜி, காரைநகர் சாலை முகாமையாளர் ஆர்.ஜெயராஜா, வவுனியா சாலை முகாமையாளர் எச். எம்ஜேசொய்ஸ், பருத்தித்துறைசாலை முகாமையாளர் கே. கந்தசாமி, முல்லைத்தீவு சாலை முகாமையாளர் கே.சீனிவாசகம் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (இ-4)

## வட இ.போ.ச முகாமையாளர்களின் அசமந்தப் போக்கு கண்டிக்கத்தக்கது

வடமாகாணத்திலுள்ள மக்களுக்கு உரிய தரமான போக்குவரத்து சேவையினை வழங்க இலங்கை போக்குவரத்துச் சபையின் முகாமையாளர்கள் முன்வராமையும் அசமந்தப்போக்குடன் செயற்படுவதும் கண்டிக்கத்தக்க விடயம் என வடக்கு மாகாண போக்குவரத்து துறை அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகளும் தனியார்பேருந்துகளும் இணைந்த நேர அட்டவணை தொடர்பான தீர்மானம் எடுப்பதற்கான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் யாழ். பொது நூலகத்தில் நடைபெற்றது. இக் கலந்துரையாடலின் பின்னர் ஊடகவியலாளரிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாணத்தில் போக்குவரத்து தொடர்பான பல பிரச்சினைகள் நீண்டகாலமாக இருந்து வருகின்றது. இ.போ. ச பேருந்துகள், தனியார் பேருந்துகள் இணைந்த நேர அட்டவணையை கடைப்பிடிக்காததால் மக்கள் பல அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றார்கள்.

எனவே போக்குவரத்து ஒழுங்குகளை சீரமைத்து




மக்களுக்குதரமானசேவையை வழங்கும் நோக்குடன் கடந்த 2 ஆம் மாதத்தில் இருந்து 60:40 என்ற போக்குவரத்து சேவை வீதத்தினை வலுவாக அமுல்படுத்த திட்டமிட்டு வடமாகாணத்தில் ஒவ்வொரு மாவட்டங்களிலும் உள்ள அரச அதிபர்களின் தலைமையில் கலந்துரையாடலை நடத்தியிருந்தேன். அக் கலந்துரையாடல் குறித்த மாவட்டத்தில் உள்ள பிரதம கணக்காளர் தலைமையில் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர், இ.போ.ச. சாலை முகாமையாளர்கள், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு உறுப்பினர்கள், பொலிஸார் உள்ளிட்ட 9 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. யாழ் மாவட்டத்தில் 13 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது.

5 மாவட்டங்களிலும் உள்ள குழுக்கள் தமது பிரச்சினைகளை பேசி இரு தரப்பினருக்கும் சாதகமான முறையில் நேர அட்டவணையை தயாரித்திருந்தார்கள்.

அந்த நேர அட்டவணையை கொண்டு ஒழுங்குமுறையான சேவையை வழங்குவது தொடர்பான தீர்மானம் எடுப்பதற்கு கடந்த 16 ஆம் திகதி கலந்துரையாடல் ஒன்றினை ஒழுங்குபடுத்தி இருந்தோம். தவிர்க்க முடியாத காரணத்தால் அக் கலந்துரையாடல் நேற்று முன்தினத்திற்கு பிற்போடப்பட்டது.

அதில் ஒரு இ.போ.ச. சாலை முகாமையாளர்கள் எவரும்கலந்து கொள்ள வில்லை. மத்திய அமைச்சில் இருந்தும் நாம் அமைத்தகுழுவில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் ஒத்துழைப்பு வழங்கும் அதே நேரம் இ.போ.ச. சாலை முகாமையாளர்கள் இக் கலந்துரையாடலை புறக்கணித்துள்ளார்கள்.

நேர அட்டவணை வழங்குவதற்கு ஒத்துழைப்பு வழங்கியவர்கள் அதை நடைமுறைக்கு கொண்டுவருவதற்கு பின்னிற்பது வருந்தத்தக்க விடயம் ஆகும். அவர்களுடைய இந்த செயற்பாடு மகளுக்குதரமான சேவையை வழங்க விரும்பவில்லை என்றே என்னால் கருத முடியும்.

இ.போ.ச. நேரடியாக மத்திய அமைச்சின் கீழ் இருந்தாலும் வட மாகாணத்துக்குள் சேவையை வழங்க நேர அட்டவணையை தயாரித்து அமுல் படுத்தும் அதிகாரம் எனது அமைச்சுக்கு உண்டு. அதை அதிகாரிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

வெகு விரைவில் 60:40 என்ற சேவை வீதம் தயார் செய்யப்பட்டு 5 மாவ ட்ட அரசஅதிபர்களுக்கும்இ.போ.ச. முகா மையாளர்களுக்கும், பொலிஸாருக்கும் அனுப்பி வைக்கப்படும். நேர அட்டவணை அமுல் படுத்தப்பட்ட பின்னர் மக்களுக்கு தரமான சேவையை ஒழுங்கு முறையில் வழங்கவில்லை என்றால் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். சட்ட நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என்றால் பின்பற்ற வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் அதிகரிப்பு

யாழ்.தென்மராட்சி வரணிப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளதாக பொதுமக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து காணப்படுவதால் இங்குள்ள பொதுமக்கள் வீதியால் செல்வதற்கு அச்சமடைந்துள்ளனர்.

இக்கட்டாக்காலி நாய்களின் கடிக்கு தினமும் பொது மக்கள் உள்வாங்கப்படுகின்றார்கள்.

நாய்க்கடிக்கு பாடசாலை மாணவர்களே அதிகம் உள்ளாக்கப்படுவதாக பாதிக்கப்பட்ட மாணவர்களது பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர். இதற்கமைய கடந்த திங்கட்கிழமை பாடசாலை மாணவர் ஒருவரும் குடும்பப் பெண் ஒருவரும் கட்டாக்காலி நாய்க்கடிக்கு உள்ளாகி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவ்வாறாக கவனிப்பாரன்றி வீதிகளில் திரியும் நாய்கள் தொடர்பாக உரிமையாளர்களால் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

நாய்களை வீட்டில் வளர்ப்போர் நாய்களுக்கு விசர் நோய் தடுப்பூசி என்பவற்றை ஏற்றி பாதுகாப்பாக வளர்த்து வருகின்றனர். ஆனால் வீதிகளில் திரியும் கட்டாக்காலி நாய்களுக்கு வழங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றப்படுவதில்லை.

இதனால் அந்நாய்கள் பொது மக்களை கடித்தவுடன் அதன் விசம் மனிதரின் உடல் முழுவதும் பரவி உயிர் ஆபத்தையே ஏற்படுத்தி விடுகின்றன.

எனவே இவ்வாறாக வீதிகளில் அலைந்து திரியும் கட்டாக்காலி நாய்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொதுமக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அந்திரான் ஜனசக்தி தோற்பொருள் உற்பத்தியாளர் விற்பனை கூட்டுறவுச் சங்கம் (வ.து)
## பதவி வெற்றிடம்

மேற்படி சங்கத்தின் இறப்பர் பாதணிகள் உற்பத்தி நிலையத்திற்கான பொதுமுகாமையாளர் பதவிக்கு தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்**

1.18வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல்
2.க.பொ.த.உயர்தரத்தில் மூன்று பாடங்கள் சித்தி.
3.முகாமைத்துவ துறையில் முன்னனுபவத்தை கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.
3.கணனி மற்றும் ஆங்கில அறிவு உடையவராக இருத்தல் விரும்பத்தக்கது.
4.நிர்வாக ஒழுங்கமைப்பு மற்றும் வியாபார திட்டமிடலுக்கு ஏற்றவரான புதிய உத்திகளை முன்னெடுக்கும் திறன்களை கொண்டிருத்தல்.

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கான வெற்றிடங்கள் ஒப்பந்த அடிப்படையில் உள்ளடக்கப்படுவதுடன் சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 05/08/2015 இற்கு முன் கீழே உள்ள முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடவும்.

தலைவர்,
அந்திரான் ஜனசக்தி தோற்பொருள் உற்பத்தியாளர்
விற்பனை கூட்டுறவுச்சங்கம்(வ.து),
வட்டு கிழக்கு,சித்தங்கேணி.
(1257)

## நுழைவாயில் முகப்பு திறப்புவிழா

கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலய அமரர் மகாலிங்கம் சிவஞானசுந்தரம் மகாலிங்கம் மகாராஜா ஞாபகார்த்த நுழைவாயில் முகப்புத் திறப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் த. தயானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.ஈஸ்வரநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யாழ். மகாஜனக் கல்லூரி ஓய்வு நிலை உப அதிபர் திருமதி பாகீரதி கணேசதுரை, கௌரவ விருந் தினர்களாக மா. விஜயகுமார், திருமதி. தே. சிவஞானசுந்தரம், திருமதி சத்தியசீலன் மதிவதனி, க.அருள்லிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## இரத்ததான முகாம்

யாழ். இந்துக் கல்லூரியின் 2001ம் ஆண்டு உயர்தர கணித பிரிவு மாணவனான அமரர் சோமசுந்தரம் சஞ்சீவனின் 15 ஆம் ஆண்டு ஞாபகார்த்தமாக இரத்ததான முகாம் ஒன்றையும், நினைவுப் பிரார்த்தனையையும் யாழ் இந்துக் கல்லூரி 2001 ஆம் வருட உயர்தர மாணவர்கள் யாழ் இந்துக் கல்லூரியில் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் 12 மணி வரை ஏற்பாடு செய்துள்ளனர்.(இ-9)

## தேர்த்திருவிழா இன்று

உடுவில் கிழக்கு கற்பகப் பிள்ளையார் கோவில் மஹோற்சவத்திருவிழாவில் இன்றுவியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு தேர்த்திருவிழா இடம்பெறவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளது.(இ-5)

## 31 ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்



### அமரர் செல்லத்துரை நிதாசன் (பாபூஜி)

கடந்த 01/07/2015 அன்று இறைபதமடைந்த எமது சகோதரனின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு எல்லாவகையிலும் அனுதாபம் தெரிவித்து இறுதிவரை இணைந்து நின்ற உற்றார்,உறவினர்கள்,நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். நாளை 31.07.2015 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(1242)

இல.102,அண்ணா வீதி,
ஆனந்தபுரம்,கிளிநொச்சி.

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 30 12 1952

இறப்பு 09 08 2014

### திருமதி கமலராணி விமலதாசன்

ஆண்டொன்று கடந்தாலும்
ஆறாத உங்கள் நினைவுகள்-எம்
நெஞ்சங்களில் தினந்தோறும் அலைமோதும்-அவை
அழியாத நினைவுகளாய் நீங்கள்
அரவணைத்து அன்பு செய்த் காலங்களை
மறந்திடத்தான் முடிந்திடுமோ?
மறு ஜென்மம் உண்டென்றால்
மண்ணில் பிறந்திடம்மா நாம் மகிழ்ந்திருக்க

இல.29, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

(237)

குடும்பத்தினர்.




உ
தர்ம சாஸ்தாவே சரணம்

## அனலையம்பதி ஐயனார் ஆலயத்தில் இன்று இரதோற்சவம்

அந்தப்பதியில் கண்ணனும் நீ! கணபதியும் நீ! கந்தனும் நீயே! எங்கள் காவல் தெய்வம் பரமசிவன் விஷ்ணுவும் நீயே!
அண்டமெல்லாம் காத்தருளும் சக்தியுமாகிய எண்ணியதைத் திண்ணமுறச் செய்திடும் என்றும் உள்ள பரம்பொருள்
இனியவன் கருணைக்கடல் மணிகண்டன் ஆரோகணித்து அதி உயர் உன்னத தேரில் ஏறி நாதஸ்வர தவில் மேதைகள்
மங்கள வாத்தியங்கள் முழங்க மக்கள் போடும் சரணகோஷம் வானத்தைப் பிளக்க
மக்கள் பக்தி வெள்ளத்தில் மிதந்து வந்து அருள் மழை பொழியும் கண்கொள்ளாக் காட்சியைக் காண வாரீர்!

"எத்தனை கண்கள் இருந்தாலும் அத்தனை கண்களும் போதாது அனலைதீவு ஐயனார் எழில் காண"

ஆக்கம்: கலாநிதி லயன் கனகசபை சுந்தரலிங்கம், சமாதான நீதவான் (காரை மணிகண்டன்)



## ராசி பலன்

30.07.2015
(ஆடி 14, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
சதுர்த்தி முன்னிரவு 7.00 மணிவரை
பூராடம் நண்பகல் 12.03 மணிவரை
இராகுகாலம் 1.33-3.03 மணிவரை
சுபநேரம்-7.33-9.03 மணிவரை
பட்டினத்தடிகள் குருபூசை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | செவ் |
| | மாலை 5.45ற்கு மகர-சந் | | சூரி புதன் |
| | | | குரு சுக் |
| சந் | | சனி | ராகு |

**மேடம்** எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம்,தொழிலில் சரீரப்பிரயாசை காட்டுவீர்கள்,அஜீரணம் சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்,திடீர் பயணங்களால் நன்மையுண்டு.

**இடபம்** எடுத்த காரியங்களை முடிப்பதில் சில சிரமங்கள் ஏற்படலாம்,மனதில் இனம் புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும்,ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

**மிதுனம்** மனோதைரியம் கூடும்,நடக்கவிருந்த காரியமொன்று மாலை நேரம் தாமதமாகலாம், தனவரவுகள் திருப்திகரமாக அமையும்,பயணங்கள் கைகூடும்.

**கடகம்** ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள்,பகைவரால் நன்மையுண்டு,தொழிலில் ஆர்வத்துடன் செயற்படுவீர்கள்,வாக்கு மேன்மையுண்டு.

**சிம்மம்** அஜீரணம் சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்,பணக்குறைவுண்டு,முயற்சிகளில் தாமதங்கள் உருவாகலாம்,தொழில் சம்பந்தமாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**கன்னி** உறவினர்கள் வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம்,எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்,ரோக பயமுண்டு, தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது.

**துலாம்** மனோதைரியம் கூடும்,மாதர் நட்புண்டு,மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், செய்தொழில் நன்மையுண்டு, முயற்சிகளில் முன்னேற்றமுண்டு.

**விருச்சிகம்** தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது,போசன சுகக் குறைவுகளுண்டு,செலவுகள் அதிகமாகும்,ரோக பயமுண்டு,எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**தனுசு** வெகுமானங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு,மாதர் நட்புண்டு, அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, கற்பனை மிகுதியான நாள்,போசன சுகமுண்டு.

**மகரம்** பிறருக்கு உதவ முற்படுவீர்கள், சோம்பலை விலக்குவது நல்லது,சுபசெலவுகள் அதிகரிக்கலாம், மனச்சஞ்சலங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.

**கும்பம்** தனதானியச் சேர்க்கையுண்டு, உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்,காரிய அனுகூலமுண்டு,போசன நன்மையுண்டு.

**மீனம்** பெரியோரால் மதிக்கப்படுவீர்கள்,ஆரோக்கியமான நாள், உங்களின் நிர்வாகத்திறமை வெளிப்படும் நாள்,மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் உற்பத்திகளை பெருக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்

## கிளிநொச்சியில் ஜனாதிபதி தெரிவிப்பு

(கிளிநொச்சி)

யாழ்ப்பாணம்,கிளிநொச்சி ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் விவசாயத்தில் அதிகளவு நாட்டம் கொண்டவர்கள். அவர் களுக்கான ஊக்குவிப்புக்களை வழங்கி உள்ளூர் உற்பத்திகளைப் பெருக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள இலங்கை ப.நோ.கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நான் செல்லுமிடம் எங்கும் விவசாயம் தொடர்பான பிரச்சினைகள்,கல்வி,சுகாதாரம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முக்கிய தேவைகள் இருப்பதை உணர்ந்து கொண்டுள்ளேன்.


இந்த விற்பனை நிலையத்தைப் பார்த்த போது பருப்பு எமது உணவில் முக்கிய பொருளாகக் காணப்படுகின்றது.

பருப்புவகைகள் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது.

அதேவேளை இங்கு பயறு,கௌபி போன்ற தானிய வகைகள் இருப்பதை அவதானித்தேன்.

இவைகளும் கூட வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன.

நாம் அரசாங்கத்தை பொறுப்பேற்று குறுகிய காலமே என்பதால் நிலையான அரசு அமையப்பெற்றதன் பின்னர் விவ்சாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்து உள்ளூர் உற்பத்தி பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு எம்மால் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது. எனவே அனைத்து மக்களும் நீதியாகவும் சுபீட்சமாகவும் வாழ்வதற்கு வழிவகை விரைவில் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்றார். (2-254)






வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரனினால் வடக்கு மாகாணத்திலுள்ள சிறையில் வாடும் அரசியல் கைதிகளின் குடும்பங்களுக்கான வாழ்வாதார திட்டத்தின் கீழ் ஏனைய மாகாணங்களிலும் உள்ள குடும்பங்களுக்கும் தலா 50 ஆயிரம் ரூபா வழங்க அமைச்சர் அறிவித்ததற்கு அமைய நேற்று முற்பகல் 10 மணியளவில் மன்னாரில் உள்ள அமைச்சரின் உப அலுவலகத்தில் ஏனைய மாகாணங்களை சார்ந்த குடும்பங்களுக்கான விசேட ஒன்றுகூடல் இடம்பெற்றுள்ளது. இவ் விசேட ஒன்றுகூடலில் பல மாவட்டங்களைச் சேர்ந்த பல குடும்பங்கள் கலந்து தம்மை பதிவு செய்தமை குறப்பிடத்தக்கது.

# ஓவியவிழா 2015-2016 விண்ணப்பம் கோரல்

(மல்லாவி)

இலங்கைக்கான யுனெஸ்கோவின் தேசிய ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் மிட்சுபிஷி ஆசிய நாடுகளின் பிள்ளைகளினது ஓவிய விழா -2015 -2016 நடத்துவதற்கு இலங்கை மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக இலங்கைக்கான யுனஸ்கோவின் தேசிய ஆண்ணக்குழுவின் செயலாளர் நாயகம் தம்மிகா விஜயசிங்கா அறிவித்துள்ளார்.

விண்ணப்பங்கள் அனைத்தும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 14 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

ஜப்பான் நாட்டின் யுனெஸ்கோ சங்கங்களின் பேரவை மற்றும் மிட்சுபிஷி பொதுகுழு இலங்கைக்கான யுனெஸ்கோவின் தேசிய ஆணைக்குழு என்பன இணைந்து ஏற்பாடு செய்யும் ஆசிய நாடுகளின் பிள்ளைகளினது ஓவியப்போட்டிக்கு இலங்கையிலுள்ள மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்போட்டியானது இரு கட்டங்களாக நடைபெறும்.

இதில் முதலாவது மாணவர்கள் பிரிவினரால் சமர்ப்பிக்கப்படும் ஆக்கங்களில் இருந்து 300 ஓவியங்கள் தெரிவு செய்யப்பட்டு அந்த ஓவியங்களில் இருந்து இரண்டாவது கட்டத்துக்கான 8 ஓவியங்கள் தெரிவு செய்யப்படும்.

ஆரம்ப கட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 300 ஓவியங்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படுவதுடன் அதற்கான ஓவியர்கள் கொழும்பிற்கு அழைக்கப்பட்டு ஓவியப்போட்டி தொடர்பாக மேலதிக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்ட பின்னர் அன்றைய தினமே அவர்க ளின் ஊடாக ஓவியம் ஒன்று வரையப்படவு ள்ளது.

இரண்டாம் கட்டப்பிரிவில் இருந்து இறுதிச் சுற்றுக்குத் தெரிவாகும் ஓவியர்கள் 8 பேரில் ஒவ்வொருவரும் மாபெரும் இறுதிப்போட்டிக்கு சமர்ப்பிப்பதற்காக தனது அன்றாட வாழ்க்கை பற்றி 5 ஓவியங்களை வரைதல் வேண்டும்.

ஆரம்ப கட்டத்திற்கான தங்களது ஓவியங்களில் கூறப்படும் நிபந்தனைக்குட்பட வரைந்து எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 14 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர் நாயகம், இலங்கைக்கான யுனெஸ்கோவின் தேசிய ஆணைக்குழு 5 ஆம் மாடி கல்வி அமைச்சு, இசுறுபாய, பத்திரமுல்லை, கொழும்பு எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.

மேற்படி போட்டி தொடர்பான விபரங்கள் வலயக்கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேலதிக தகவல் தேவைப்படுவோர், 011 217 7002 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

## காணிக்கச்சேரி

(முள்ளியவளை)

முள்ளியவளை கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் வசிக்கின்ற மக்களுக்கான காணிக் கச்சேரி இன்று வியாழக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை முள்ளியவளை கிழக்கில் அமைந்துள்ள பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறும்.

இதற்கு வருகை தருகின்ற பொது மக்கள் குடும்பப்பதிவு அட்டை, குடும்பத் தலைவரின் தேசிய ஆள் அடையாள அட்டை இணைப்பு, (நான்கு) பற்றுச்சீட்டு ஆகியவற்றுடன் தவறாது சமூகம் தருமாறு கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் தி.திரேஸ் குமார் அறிவித்துள்ளார். (2-302)

# வாசகமாக்கும் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான மாகாண மட்ட போட்டி

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வித்திணைக்களத்தின் கீழ் இயங்கும் பாடசாலைகளில் இருந்து நடப்பாண்டில் க.பொ.த. (சா/த) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு இடையே கல்வி தொடர்பான விழிப்புணர்வை தூண்டும் வகையில் அனைத்து மாணவர்களும் பங்கேற்கும் "வாசகமாக்கும் போட்டி " ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய துணுக்காய் கல்வி வலய மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ள மாணவர்களின் விபரங்களை துணுக்காய் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய வாசகமாக்கும் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

யோ. கானுஜா (மு/யோகபுரம் மகாவித்தி, ஸ்ரீ.ஆதவன் (மு/ஒலுமடுதமிழ்வித்தி, யோ. சுகிதா (மு/முத்தையன்கட்டு வலது கரை மகாவித்தி.

மாகாண மட்ட போட்டியில் கலந்து கொள்ளவுள்ள 12 கல்வி வலயங்களிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான போட்டியில் மாகாண மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப்பெறும் ஆக்கங்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் பாடசாலைகளுக்கு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-15)

# மக்கள் குடியேறாத காணியில் இருந்து வெடிபொருள் மீட்பு

(மல்லாவி)

மக்கள் குடியேறாத குடியிருப்பு காணியின் பற்றைகளை தொழிலாளி ஒருவர் துப்புரவு செய்த வேளை வெடி பொருளின் மீது மண்வெட்டி பட்டபோது அது வெடிக்காமையால் தெய்வாதீனமாக அசம்பாவிதங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

ஏ-9 வீதியிலுள்ள மாங்குளத்தின் 222 ஆவது கிலோமீற்றர் மைல்கள் பகுதியிலுள்ள மக்கள் குடியேறாத குடியிருப்பு காணியில் நேற்று முன்தினம் முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்றது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

குறித்த பற்றைகளை தொழிலாளி ஒருவர் துப்புரவு செய்த வேளை அவரது மண்வெட்டியின் மீது உலோகப்பொருள் ஒன்று பட்டுள்ளது.

இதனை அவதானித்த தொழிலாளி அதனை எடுத்து பார்த்த போது அது வெடிக்காத நிலையிலுள்ள வெடிபொருள் என்பதைக் கண்டுள்ளார்.

இதனை அடுத்து அவர் மாங்குளம் நகரப் பகுதியில் அமைந்துள்ள இராணுவத்தினரின் பொதுமக்கள் தொடர்பு காரியாலயத்திற்கு சென்று முறையிட்டுள்ளார்.

இதனையடுத்து அக்காணி அமைந்துள்ள பகுதிக்கு விரைந்த சிவில் பாதுகாப்பு படையினர் வெடிக்காத நிலையில் இருந்த வெடிபொருட்களை மீட்டெடுத்துச் சென்றனர்.

வெடிபொருட்கள் தொடர்பாக பொது மக்களை அவதானத்துடன் செயற்படுமாறு பல தரப்பினராலும் அறிவுறுத்தப்பட்டுள்ள நிலையில் இவ்வாறான சம்பவங்களும் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 29 செவ் 2 ல்<br>உயரம்: 168cm<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/979 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 40 சூரிசெவ் 8 ல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: G/1746 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்:திருவோணம்<br>கி.பா: 32 சூரிசெவ் 7 ல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்<br>தொ.இ: B/981 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 29 செவ் 1 ல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ ஆசிரியர்<br>தொ.இ: G/1750 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 30<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: MSC/ ஆசிரியர்<br>தொ.இ: B/988 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 20 சூரிசெவ் 11 ல்<br>தகைமை/தொழில்: BA/ அரச தொழில்<br>தொ.இ: G/1753 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 49<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: MBA/ கனடா PR<br>தொ.இ: B/990 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 40 செவ் 1 ல்<br>உயரம்: 4'6"<br>தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/1754 |


**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



பாராளுமன்ற பொதுத் தேர்தல்–2015
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்

4
காசிப்பிள்ளை குலசேகரம்
B.A. Dip-in Ed, MEd
தமிழர் விடுதலைக் கூட்டணி
X 4
(020)
இல்லாமை இல்லாத சமூகத்தை உருவாக்குவோம்



பாராளுமன்றத் தேர்தல் – 2015
யாழ்.மாவட்டம்

5
ந.மதிஅழகராசா (மதி)
வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர்
X 5
தமிழர் விடுதலைக் கூட்டணி
(சி–268)
வெறும் பேச்சுக்களை நம்புபவன் தமிழன் அல்ல...


# அடிப்படை உரிமையினை மீறும் செயல் இலங்கை ஆசிரியர் சங்கம் அதிருப்தி!

(யாழ்ப்பாணம்)

இம்முறை கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான கருத்தரங்குகளுக்கும், செயலமர்வுகளுக்கும் பரீட்சைகள் ஆணையாளரால் விதிக்கப்பட்டுள்ள தடை தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கம் அதிருப்தி வெளியிட்டுள்ளது. மேலும் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களை சேர்ந்த மாணவர்களுக்கு இது பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

பரீட்சைகள் ஆணையாளரினால் விதிக்கப்பட்டுள்ள இந்த தடையால் இம்முறை பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களின் அடிப்படை உரிமை மீறப்படுவதாக சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இம்முறை உயர் தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பகுதிநேர வகுப்புக்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளை நேற்று முன்தினம் நள்ளிரவுடன் நிறுத்த வேண்டும் என பரீட்சைகள் ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த தடை செப்டெம்பர் எட்டாம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என. ஜே.புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இந்த நடவடிக்கை மாணவர்களுக்கு அநீதி இழைக்கும் செயற்பாடாகும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் சுட்டிக்காட்டியுள்ளார். பரீட்சைகளுக்கு மாணவர்களை தயார்படுத்துவதற்கே இவ்வாறான கருத்தமர்வுகள், செயலமர்வுகள் நடத்தப்படுகின்றன. ஆனால் பரீட்சை திணைக்களம் அவற்றை தடுத்து மாணவர்களுக்கு அநீதி இழைத்துள்ளது எனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

வர்த்தமானி அறிவித்தல் மூலம் கடந்த காலங்களிலும் இந்த நடைமுறை பின்பற்றப்பட்டதாக தெரிவித்துள்ள கல்வி அமைச்சின் செயலாளர் உபாலி மாரசிங்க இந்த தீர்மானத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு இல்லை எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-4)


**வீடுவளவு விற்பனைக்கு!**

மீசாலை வடக்கு, வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கு அருகாமையில் சகல வசதிகளுடன், உடன் குடியேறக்கூடிய, நல்ல நிலையில் உள்ள 4 பரப்பு காணி வளவு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : நவா : 0766 686740
0061 3425808199
தவம் : 0775 977210






# டுபாய் வேலைவாய்ப்பு

| தொழில் | எண் | சம்பளம் (DHS) |
|---|---|---|
| ஆங்கிலம் தெரிந்த உதவியாளர்கள் (Helpers) | 10 | 1000 |
| விற்பனை பிரதிநிதிகள் (Sales Executive) | 30 | 3000 - 4000 |

நிபந்தனைகள்
- ஒப்பந்த காலம் 2 வருடம் ■ தங்குமிடம், போக்குவரத்து, வைத்திய வசதி நிறுவனத்தினால் வழங்கப்படும். ■ வயதெல்லை 20-35.
- ஒப்பந்த கால முடிவின் போது திரும்பி வருவதற்கான விமான டிக்கட் வழங்கப்படும் ■ உணவுக்கான கொடுப்பனவு வழங்கப்படாது
- சேவை நேரம் கிழமைக்கு 48 மணித்தியாலம் ■ ஏனைய நிபந்தனைகள் அந்நாட்டு சட்டத்திட்டத்திற்கமைய இடம்பெறும்.

L.L.No.-1216
20 வருட கால அனுபவத்தை கொண்ட
SIO INTERNATIONAL
Recruitment Agency
No. 77, First Floor, People Park Shopping Complex,
Gas Work Street, Colombo-11, Sri Lanka.
T.P : +94 11 5330032, Fax: +94 11 2332977


Hotline
0727 977 977
0722 364 655

யாழ்ப்பாணத்தில் தொடர்புகொள்ள
072 2269876
072 2269874

CV Collection Only
No Chargers Taken.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவின் விடாப்பிடி!



வரலாற்று ரீதியாக நோக்கில், அம்பாந்தோட்டை துறைமுகமானது கிழக்காசிய கடற் செயற்பாடுகள் மற்றும் ஆபிரிக்கா அல்லது மத்திய ஆசியாவிற்கான வர்த்தக சார் கப்பல் போக்குவரத்தின் கேந்திர முக்கியத்துவம்மிக்க மையமாகக் காணப்படுகிறது.

இவ்வாறு The Diplomat ஊடகத்தில், Ankit Panda எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் புதிய வசதிகளை நிர்மாணிப்பதற்கான திட்டம் ஒன்றை சீனத் துறைமுக பொறியியல் நிறுவனம் (China Harbour Engineering Company -CHEC) முன்மொழிந்திருக்கிறது. இந்த நிறுவனமானது சீன அரசிற்குச் சொந்தமான சீன தொடர் பாடல்கள் கட்டுமான நிறுவனத்தின் துணை நிறுவனமாகும்.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் புதிய கப்பல் கட்டுமானத் தளம் ஒன்றை அமைக்கவுள்ளதுடன் அங்கு ஏற்கனவே உள்ள கப்பல் தரிப்பிடத்தையும் செப்பனிடுவதே CHEC நிறுவனத்தின் பிரதான திட்டமாகும். இத்திட்ட வரைவானது அம்பாந்தோட்டைத் துறைமுகக் கட்டுமானத்தின் மூன்றாம் கட்டத் திட்டமாகும்.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவால் மேற்கொள்ளப்பட்ட ஊழல் மோசடிகள் தொடர்பான விசாரணையில் CHEC நிறுவனமும் உட்படுத்தப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். ராஜபக்ச தொடர்ந்தும் இலங்கையின் ஜனாதிபதி பதவி வகிப்பதற்காக ஊழல் செயற்பாட்டில் ஈடுபட்டதாக CHEC நிறுவனம் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்திற்காக CHEC நிறுவனம் 1.4 பில்லியன் ஒப்பந்தத்தை மேற்கொண்டிருந்தது.


இத்திட்டமானது மைத்திரிபால சிறிசேன இவ்வாண்டின் ஆரம்பத்தில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து இடைநிறுத்தப்பட்டது. தற்போது இத்திட்டம் தொடர்பாக மீளாய்வுகள் இடம்பெற்று வருகின்றன.

மகிந்த ராஜபக்ச நிதி மோசடிகளில் ஈடுபடுவதற்கு தான் எவ்விதத்திலும் துணைபோகவில்லை எனவும் இது தொடர்பான செய்திகள் 'உண்மைக்குப் புறம்பானவை எனவும் பொய்யானவை எனவும்' CHEC நிறுவனம் அறிவித்திருந்தது.

'இது தொடர்பான இலங்கை அதிகாரிகள் மற்றும் தரப்பினர் எமது நிறுவனத்தின் செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் தவறான புரிந்துணர்வைக் கொண்டிருக்க வேண்டாம்.

சீனா மற்றும் ஏனைய நாடுகளிலிருந்து இலங்கையில் முதலீடு செய்வதற்காக முன்வரும் முதலீட்டாளர்களுக்கு இவ்வாறான பொய்க் குற்றச்சாட்டுக்கள் மூலம் பிழையான சமிக்கையை வழங்க வேண்டாம்' என CHEC நிறுவனம் தனது அறிக்கை ஒன்றில் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிறுவனத்திற்கு எதிராக இலங்கையில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும், அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் மூன்றாம் கட்டத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூற்று அறிக்கையைத் தயாரிப்பதற்கான அனுமதியை இலங்கை அரசாங்கம் தற்போது வழங்கியுள்ளதாக கடந்த வாரம் வெளியிடப்பட்ட அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.




அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் கப்பல் தரிப்பிடத்தின் செயற்பாடுகளை முகாமை செய்வதற்கான அனுமதியைப் பெற்றுள்ளதாக CHEC நிறுவனம் தெரிவித்துள்ளது. இதனை இலங்கை துறைமுக அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

இலங்கைத் தீவின் தென கரையோரத்தில் அமைந்துள்ள அம்பாந்தோட்டையானது இலங்கையின் மிகமுக்கிய துறைமுக நகரமாகும்.

வரலாற்று ரீதியாக நோக்கில், இத்துறைமுகமானது கிழக்காசிய கடற் செயற்பாடுகள் மற்றும் ஆபிரிக்கா அல்லது மத்திய ஆசியாவிற்கான வர்த்தக சார் கப்பல் போக்குவரத்தின் கேந்திர முக்கியத்துவம் மிக்க மையமாகக் காணப்படுகிறது.

ஜனவரி 2008 இல் ஆரம்பிக்கப்பட்ட அம்பாந்தோட்டைத் துறைமுக நிர்மாணத்திலும் இந்த நிறுவனம் முக்கிய பங்கு வகித்துள்ளது. இத்துறைமுகத்திற்கு மாகம்புர மகிந்த ராஜபக்ச துறைமுகம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இத்துறைமுகமானது சீனாவின் CHEC மற்றும் சீன அரசிற்குச் சொந்தமான Sinohydro என்கின்ற நிறுவனம் ஆகியவற்றால் நிர்மாணிக்கப்பட்டது.

இத்துறைமுகத்திற்கான மூன்று கட்டத் திட்டங்களும் நிறைவுற்ற பின்னர் தென்னாசியாவின் மிகப் பெரிய துறைமுகமாக அம்பாந்தோட்டைத் துறைமுகம் அமைந்திருக்கும். இத்துறைமுகமானது 4000 ஏக்கரில், 33 கப்பல்கள் ஒரே நேரத்தில் தரித்து நிற்கக் கூடிய வசதியுடன் அமைக்கப்படுகிறது.

இலங்கையில் சீனாவால் அம்பாந்தோட்டைத் துறைமுகம் கட்டப்படுவதானது இந்திய மாக்கடலில் சீனா தனது செல்வாக்கை விரிவுபடுத்துவதற்கு துணை போவதாக இந்திய ஆய்வாளர்கள் விமர்சித்துள்ளனர். இது சீனாவின் முத்துமாலை மூலோபாயத்தின் ஒரு பகுதியாகும் என இந்திய விமர்சகர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இலங்கையின் கொழும்புத் துறைமுகத்தில் சீனாவுக்குச் சொந்தமான போர்க்கப்பல் மற்றும் நீர்மூழ்கிக்கப்பல் தரித்து நின்றமை தொடர்பில் இந்தியா ஏற்கனவே தனது அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தது. இந்நிலையில் இவ்வாண்டின் ஆரம்பத்தில் இலங்கையைப் பொறுப்பெடுத்துக் கொண்ட சிறிசேனவின் அரசாங்கமானது சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் இலங்கைத் துறைமுகங்களில் தரித்து நிற்பதற்குத் தடைவிதித்துள்ளது. இதன்மூலம் சிறிசேன அரசாங்கம் இந்தியாவின் நற்பெயரைச் சம்பாதித்துக் கொள்வதற்கு முயன்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளின் ராஷ்டிரபதி!



'உலகுக்கு உண்மையான அமைதியைக் கற்பிக்க வேண்டும் என்று நாம் விரும்பினால், குழந்தைகளிடமிருந்துதான் அதைத் தொடங்க வேண்டும்' என்றார் காந்தி.

குழந்தைகளின் உலகோடு எப்போதுமே நெருக்கமாகத் தன்னை வைத்துக் கொண்டவர் அவர். நாட்டின் முதல் பிரதமரும் தொலைநோக்காளருமான நேருவிடமும் அந்தப் பண்பு இருந்தது.

குழந்தைகள் மீது அவர் காட்டிய அளப்பரிய நேசம், அவர்களுடைய எதிர்காலம் மீதான அவருடைய கனவுகள ஆகியவற்றின் வெளிப்பாடுகளில் ஒன்றுதான், நாடு முழுவதும் திறக்கப்பட்ட பொதுப் பள்ளிகளில் தொடங்கி எய்ம்ஸ், ஐ.ஐ.டி. ஐ.ஐ.எம். வரை நீண்டது.

உண்மையில், சுதந்திர இந்தியாவின் முன்னோடிகள் நமக்கு அற்புதமான ஒரு முன்னுதாரணத்தையும் கலாச்சாரத்தையும் உருவாக்கித் தந்துவிட்டுத்தான் போயிருக்கிறார்கள். ஆனால், அதற்குப் பின் அந்த மரபு எங்கே அறுபட்டுப்போனது?

பிரதமர், முதல்வர்கள் இருக்கட்டும் இன்றைக்கெல்லாம் எத்தனை அமைச்சர்களை மக்களால் நேரடியாக அணுக முடியும்! மூத்தவர்களுக்கே இதுதான் கதி என்றால், சாமானியர்களின் குழந்தைகளையும் பொருட்படுத்துபவர்கள் இருக்கிறார்களா என்ன? முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமிடம் சமகால இந்திய அரசியல் வர்க்கம் ஏதேனும் கற்றுக்கொள்ளப் பிரியப்பட்டால், அந்த வரிசையில் முதலாவது இது: குழந்தைகளுக்கு அவர் கொடுத்த முக்கியத்துவம்.

அப்துல் கலாம் மறைவுக்கு அஞ்சலி தெரிவித்து, சமூக வலைதளங்களில் பகிரப் படும் பதிவுகளைப் பார்த்தவர்கள் ஒரு விடயத்தைக் கவனித்திருக்க முடியும். பலர் தங்களுடைய பதிவுகளோடு கூடவே கலாமுடன் அவர்கள் இருக்கும் படத்தையும் பகிர்ந்திருந்தார்கள். நம் காலத்தில் அவ்வளவு எளிமையாக அணுகக் கூடியவராக இருந்த ஒரே பிரபலம் கலாம்.

உலகின் மிகப் பெரிய ஆட்சியாளர் மாளிகையான, 370 ஏக்கர் ராஷ்டிரபதி பவனில் அதிகமான பொதுமக்கள் உள்ளே நுழைய முடிந்த காலகட்டம், கலாமுடைய காலகட்டமாகவே இருக்கும். பெரும்பகுதி விருந்தினர்கள் குழந்தைகள் - மாணவர்கள். அவரைச் சந்தித்துவந்த பலர் அவருடன் தொடர்ந்து தொடர்பில் இருக்க முடிந்தது. அவருடன் தொலைபேசியில் பேச முடிந்தது. மின்னஞ்சல் அனுப்பிப் பதில் பெற முடிந்தது. அவருக்குக் கடிதம் எழுதினால், நிச்சயம் பதில் வரும்.

குழந்தைகள் மீதும் இயல்பாகவே அவருக்கு மிகப் பெரிய அன்பு இருந்தது. அதனால்தான் தன்னுடைய வாழ்வின் மைல்கற்களாக அவர் குறிப்பிடும் நான்கு சாதனைகளில் ஒன்றாக - செயற்கைக்கோள் ஏவுகலன (எஸ்எல்வி), அக்னி, பொகரான் அணுகுண்டு சோதனை ஆகியவற்றுக்கு இணையானதாக - ஊன முற்ற குழந்தைகளுக்கான எடை குறைந்த செயற்கைக் கால்கள் வடிவமைப்பை அவரால் செயற்படுத்த முடிந்தது.

ஒரு ஊருக்கு அவர் வருகிறார் என்றால், நிச் சயம் அவருடைய நிகழ்ச்சி நிரலில் பள்ளி- கல்லூரிகள் நிகழ்ச்சிகளுக்கு ஒரு இடமேனும் இருக்கும். ஒருகட்டத்தில் அவரைப் பொது நிகழ்ச்சிகளுக்கு அழைக்க ஒப்புதல் பெற வேண்டும் என்றால், கூடவே பள்ளி - கல்லூரி நிகழ்ச்சிகளுக்கான திட்டங்களையும் முன்மொழிந்தால், ஒப்புக் கொள்வார் என்ற சூழல்கூட உருவானது. இப்படிக் கல்வி நிலையங்களைத் தேடி வரும்போதெல்லாம், தான் மேடையில் நின்று பேச ஏனையோர் கீழே அமர்ந்து கேட்டுக் கை தட்டல் பெற வேண்டும் என்று விரும்பிய வர் அல்ல அவர். மாறாக, குழந்தைகள் மத்தியில், அவர்களில் ஒருவராகக் கலந்துரையாடியவர். குழந்தைகளை அதிகம் பேசவைத்துதான் கை தட்டியவர். கல்வி நிலையங்களுக்குச் செல்லும்போதும் கூடவே, தாமதமாகச் செல்லும் கலாச்சாரத்தையும் கூட்டிவந்து, குழந்தைகளைக் கடும் வெயிலில் கால் கடுக்க நிற்கவைத்து வதைக்கும் நம்முடைய அரசியல்வாதிகள் மத்தியில், கால தாமதமாகச் செல்வதைக் குற்றமாகக் கருதியவர். "குழந்தைகள் நமக்குத் தெரியாமலே நம்மிடமிருந்து நிறையக் கற்றுக்கொள்கிறவர்கள் நாம் அறியாமலே நமக்கு நிறையக் கற்றுக் கொடுப்பவர்கள் நாம் ரொம்பவே மதிப் போடும் ஜாக்கிரதையோடும் அணுக வேண்டியவர்கள்" என்பார்.

அவர் செல்லுமிடங்களிலெல்லாம் 'கனவு காணுங்கள்' என்று போதிப்பதைப் பின்னாளில் மோசமாகப் பகடிசெய்தவர்கள் உண்டு. குழந்தைகளின் கனவுகளை வெறும் பிழைப்புக்கான தேடலாக மட்டுமே உருமாற்றிவிட்ட இந்தக் காலகட்டத்தில், அவர் விதைத்த சமூகப் பெரும் கனவுகள் அர்த்தமுடையவையாகவும் முக்கியமானவையாகவுமே தோன்றுகின்றன.


கலாமுக்குள் எப்போதும் ஓர் ஆசிரியர் இருந்தார். எப்போதும் ஒரு மாணவரும் இருந்தார். இதுபற்றிப் பேசிக்கொண்டிருந்த போது ஒருமுறை சொன்னார்:

"என்னை எப்போதும் வழிநடத்தும் கவிதை வரிகள் இவை. நான் சின்ன வயதில் படித்தவை:

**'உனது எல்லா நாட்களிலும்**
**தயாராக இரு**
**எவரையும் சம உணர்வுடன் எதிர்கொள்**
**நீ பட்டறைக் கல்லானால்**
**அடிதாங்கு**
**நீ சுத்தியலானால்**
**அடி!' "**

குழந்தைகளின் உலகோடு நெருக்கமானவர்களுக்குத்தான் இது சாத்தியம்!

(இணையம்)



# கருவாச்சி காவியம்



## வைரமுத்து–199

...அவ உள்ளங்கால் பள்ளத்துல குறுகுறுன்னு என்னமோ ஊருது.

பயமா? கூச்சமா? புடிபடல ஒண்ணும்.

வா தாயி! வலது கால எடுத்து எட்டு வச்சு வா.

யாத்தே இது சடையத்தேவன் குரலா? பித்துப்புடிச்சு நிக்கிறவ காதுல முப்பத்தேழு வருசத்துக்கு முன்ன கேட்ட குரல் கேக்குது. மனுசனோ மனுசியோ மறந்தாலும் மனசு மறக்குதா?

தலைவாசக் கதவத் தள்ளுனா.

க்றீச்

துருப்பிடிச்சு இறுகிப்போன கதவு எண்ணெய்க்குக் கத்துது.

தலவாசப் படிக்கல்லத் தாண்டி உச்சுனாப்புல ஒரு கால எடுத்து உள்ள வச்சுப் போனா இங்க நான் தான் இருக்கேங்குது இருட்டு. இந்த வீட்ல மிச்சமிருக்கிற சீவராசி நான் தாங்குது வலங்கத்துன ஒரு பல்லி.

வாக்கப்பட்ட வீட்டுக்கே வந்துட்டியா... வா..ன்னு அவ மூஞ்சிய ஒரசிப் படக்குன்னு றெக்கையடிச்சுக் கடக்குன்னு கடந்து போகுது ஒரு வெளவால்.



ஒரு தடவை கண்ண இறுக்கி மூடிப் பளிச்சுன்னு முழிச்சா எப்பிடியாப்பட்ட இருட்டும் பழகிப்போயிரும். ரெண்டு தடவ கண்ண மூடி மூடி முழிச்சா. கண்ணு தெரியாத இருட்டு இப்பக் கால் வெளிச்சமாகிப்போச்சு.

நெறஞ்ச வீடு இப்ப நெறங் கொலஞ்சு கெடக்கு.

பிஞ்சுபோன பஞ்சாரம்- ஓட்டச் சாலு- இத்ததோலு- கட்டு அவுந்து குச்சிகுச்சியாக் கெடக்கூற வெளக்கமாறு- எல்லாம் திண்ணையில கெடக்கு. கிறுக்குப்பய பிச்சுப்போட்ட தலகாணி மாதிரி உள்வாசல் பூரா குப்பை கூளம்- ஆட்டுப் புழுக்கை- மாட்டுச் சாணி.

இது வீடா? வெட்டியான் மட்டும் வெட்டியான் மட்டும் குடியிருக்கிற இடுகாடா?

கட்டையன வெளிய காங்கல. தரையத் தட வித் தடவி எட்டு வச்சா. யாத்தேன்னு காலத் தூக் கிக்கிட்டா. ஈக்கி ஒண்ணு கிழிச்சிருச்சு பெருவிரல் இடுக்குல.

என்னமோ ஒரு வீச்சம் கொடலப் பெரட்டுது. மனுசக் கழிவும் மாட்டுக் கழிவும் ஒண் ணாச் சேந்த மாதிரி ஒரு நாத்தம் உள்ள போயி மூச்சு முட்டுது.

தடவித் தடவி வந்து சேந்துட்டா கட்டையன் சாத்தியிருந்த உள்வீட்டுக் கதவுப்படிக்கு.

தொறக்குமா? தொறக்கணுமா?


தள்ளிப் பாத்தா; தொறக்கல.

உள் தாப்பாப் போட்டிருக்கு; ஒண்ணும் அசையல.

முப்பத்தேழு வருசமா நெஞ்சாங் குழியில செத்துக் கெடந்த சொல்லு இப்ப உசுர்புடிச்சு ஓடி வருது தொண்டைக்கு. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் வியூகம்



## உரிமைகளை வென்றெடுக்க

# கூட்டமைப்புடன் அணி திரளுங்கள்

### மாவை சேனாதிராசா அழைப்பு

**60 ஆண்டு காலமாக உரிமைகளுக்காகப் போராடி வரும் தமிழ் மக்களின் இலட்சிய வேட்கை இன்றும் தொடர்ந்த வணணம் இருக்கின்றது. அந்த இலட்சியத்தை அடைவதற்கு தமிழத் தேசியக் கூட்டமைப்புடன் தமிழ் மக்கள் அணிதிரள வேண்டுமென யாழ்.மாவட்டத்தின் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் மாவை.சேனாதிராசா தெரிவித்துள்ளார்.**



சாவகச்சேரி நகரத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ஈழத்துக் காந்தி செல்வநாயகத்தின் தலைமையில் அகிம்சை ரீதியில் தமிழ் மக்களுக்கான உரிமைப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சிங்களப் பேரினவாதிகள் எம்முடன் ஒப்பந்தங்களைக் கைச்சாத்திட்டு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டபோதும் அவற்றையெல்லாம் திட்டமிட்ட முறையில் அவர்களே மீறி வந்தார்கள். தமிழ் மக்களை அடக்குமுறைக்குள் வைத்து பேரினவாத ஆட்சியை முன்னெடுக்க முனைந்தார்கள்.

இதனால் 80 களில் அகிம்சை ரீதியிலான உரிமைப் போராட்டம் ஆயுத வடிவத்திற்கு மாற்றமடைந்தது. இன்று மீண்டும் எமது அடையாளங்களை உறுதிப்படுத்தி எமது மண்ணில் நாம் பண்பாட்டு ரீதியான வரலாற்று ரீதியான பூர்வீக இனம் என்பதை நிலை நிறுத்துவதற்காக அகிம்சை ரீதியில் போராடுவதற்கு கடமைப்பட்டுள்ளோம்.

எமது உரிமைகளை வென்றெடுத்து தமிழ் மக்கள் தமது சொந்த மண்ணில் அடையாளங்களை உறுதிப்படுத்தும் வகையில் கௌரவமாக தலைநிமிர்ந்து வாழ வேண்டும். அதுவரையில் எமது உரிமைப் போராட்டம் தொடர்ந்து கொண்டே இருக்கும்.


இதுவே எமது இலட்சியம். எமக்குச் சொந்தமான மண்ணில் இருந்து இராணுவம் வெளியேற்றப்படவேண்டும். இதனை நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம்.

உயர் பாதுகாப்பு வலயங்களையும் இராணுவ ஆக்கிரமிப்புக்களையும் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமுடியாது. எமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக நாம் பல்வேறுபட்ட நிலைகளில் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். சர்வதேசம் இன்று எமது பிரச்சினைகளை நன்குணர்ந்துள்ளது. அவற்றிற்குத் தீர்வைப் பெற்றுத் தரவேண்டுமென்ற நிலையிலுள்ளது. நாம் குடும்ப ஆட்சியை ஒழித்து நல்லாட்சியை உருவாக்கினோம். எமது பலத்தையும் பேரம்பேசும் சக்தியையும் தென்னிலங்கை உணர்ந்துள்ளது.

இந்நிலையில் எமது உரிமைப் போராட்டத்தை வென்றெடுக்கும் இலட்சியத்தை அடைவதையே அன்று முதல் இன்றுவரை கொள்கையாகக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பொது மக்கள் அணி திரள வேண்டும் என மேலும் தெரிவித்தார். (இ-7)

# தமிழ்க்கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் தமிழரசுக் கட்சியின் எதேச்சதிகாரமே பிரதிபலிப்பு!

### ஜனநாயகப் போராளிகள் கட்சி சுட்டிக்காட்டு



தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனமே அக்கட்சிக்குள் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் எதேச்சதிகாரத்தை வெளிக்காட்டப் போதுமானது என முன்னாள் போராளிகளை ஒன்றிணைந்து அமைத்திருக்கும் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் ந.வித்தியாதரன் தெரிவித்தார். யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் சுயேட்சைக் குழு 4 இல் சிலந்திச் சின்னத்தில் களமிறங்கியிருக்கும் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைமை வேட்பாளரான வித்தியாதரன் இது தொடர்பாக மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு,

தலைவர் பிரபாகரனினால் வழிநடத்தப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராளிகளை ஜனநாயக அரசியலில் ஒன்றிணைக்க மறுத்து, அவர்களை உதைத்துத் தள்ளி, புறம் ஒதுக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இன்னும் தங்களின் அரசியல் பிரசாரத்துக்கும், ஆதரவு திரட்டலுக்கும் தலைவர் பிரபாகரனின் நாமத்தையும் அவர வழியில் தங்களை அர்ப்பணிக்க முன்வந்த போராளிகளின் ஈகங்களையும் பயன்படுத்த முற்படுவது அரசியல் பிற்போக்குத்தனமாகும். மக்களை முட்டாள்களாகக் கருதி ஏமாற்றும் எத்தனமாகும். திம்புக் கோட்பாடு, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தவிர்ந்த ஏனைய மிதவாதக் கட்சிகளினாலும் போராளிகள் இயக்கங்களினாலும் ஒன்றிணைந்து முன்வைக்கப்பட்டது. தமிழர் தரப்பால் அங்கு முன்வைக்கப்பட்ட மூன்று பிரதான அம்சங்களும் அப்போதைய ஜே.ஆர். அரசினால் நிராகரிக்கப்பட்டன.

எனினும் அந்தக் கோட்பாடுகளில் முதல் இரண்டும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலமும், மூன்றாவது கோட்பாடு ஒஸ்லோ அறிக்கை மூலமும் பின்னர் சர்வதேச பங்களிப்புடன் இலங்கை அரசினால் ஏற்று அங்கீகரிக்கப்பட்டன. அந்த மூன்று கோட்பாடுகளும் இலங்கையில் ஆட்சியிலிருந்த அரசுகளினால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்குக் காரணமாக இருந்தது விடுதலைப் புலிகளின் அர்ப்பணிப்பு மிக்க போராட்டம்தான்.

அந்தக் கோட்பாடுகளின் அடிப்படையில் தீர்வு காணுதல் குறித்துத் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அந்தக் கோட்பாடுகளின சரித்திரப் பின்னணிகளையும் அதில் தொட்டுக் காட்ட முயன்றுள்ளது. அந்தக் கோட்பாடுகளை சர்வதேச பங்களிப்புடன் இலங்கை அங்கீகரிக்க வைத்ததில் விடுதலைப் புலிகளின் பிரதான பங்களிப்பை தமிழ்க் கூட்டமைப்பு மறைத்துப் பேசியிருப்பதில் வியப்பில்லை.

புலிகள் போராளிகள் ஜனநாயக வழிக்குத் திரும்புவதற்கே ஆப்பு அடிக்கும் அவர்கள் அப்படித்தான் நடந்து கொள்வார்கள். ஆனால், அந்தக் கோட்பாடுகளை எட்டுவதற்குக் காரணமாக இருந்த மற்றைய தரப்புக்களான ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட், ரெலோ போன்ற சகோதரக் கட்சிகளின் பங்களிப்பை முழுமையாக இருட்டடிப்புச் செய்துவிட்டு வெறுமனே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மகத்துவம் பற்றி மட்டுமே அந்த விஞ்ஞாபனம் பேசிநிற்கின்றது. அதுபோலவே தமிழர் விடுதலைக் கூட்டணி, அதன் வரலாற்றுப் பிறப்பாக்கத்துக்குக் காரணமாக இருந்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், அந்தக் கட்சிகள் எல்லாம் இணைந்து முன்வைத்த வட்டுக்கோட்டைத் தீர்மானம், அதன் பெயரால் தமிழ் இளைஞர்களுக்குத் தாங்கள் வழங்கிய உசுப்பேற்றல் போன்ற எல்லாவற்றையும் மறைத்துவிட்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சுயபுராணமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் மலர்ந்திருக்கின்றது. இந்த ஒரு தலைப்பட்ச - எதேச்சதிகார - போக்கிலிருந்து கூட்டமைப்பு விடுபட வேண்டும். அப்போதுதான் ஒட்டு மொத்த தமிழினத்துக்கான விடிவை நோக்கி நாம் நகர முடியும். தலைவர் பிரபாகரனின் ஆசீர்வாதத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்டமை ஒட்டுமொத்த தமிழரின் விடிவுக்காகவேயன்றி, தனித்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அதிகாரத் தோறணையை நிலை நிறுத்துவதற்கல்ல. கூட்டமைப்பின் ஏனைய அங்கத்துவக் கட்சிகள் இந்தக் கட்டத்திலேனும் இது குறித்து சிந்திக்க வேண்டும் தீர்மானம் எடுத்து செயறபட முன்வரவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஜனநாயகப்படுத்தி, எதேச்சதிகாரப் போக்கிலிருந்து அதனை விடுவித்து, ஒட்டுமொத்த தமிழர்களின் நலனை மட்டும் மையப்படுத்திச் செயற்படுத்தும் ஒரு கட்டுக்கோப்பாக மாற்றும் போராட்டத்தில் தேர்தலின் பின்னராவது எங்களுடன் ஒன்றிணையுங்கள் என்று கூட்டமைப்பின் மற்றைய கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கிறோம் என மேலும் தெரிவித்தார். (இ-7)

# உரிமையுடன் கூடிய அபிவிருத்தியே நிரந்தரமானது

### சிறீதரன் தெரிவிப்பு



உரிமையுடன் கூடிய அபிவிருத்தி எம் மக்களுக்கு நிரந்தரமானது என இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் வேட்பாளர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார். வேரவில்கலைமகள் விளையாட்டுக்கழகம், வி.என் ஏற்றுமதி இறக்குமதி தனியார் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்

மனதுக்கும் உடலுக்கும் ஆரோக்கியம் தரும் வகையில் கிராமங்களில் சிந்திக்கும் இத்தகைய நிகழ்வுகள் எமது இளைய சமுதாயத்திற்கு நல்வழியையும் எதிர்காலம் பற்றிய நல்ல சிந்தனையையும் கொடுக்கும். நமது கடந்த போர்க்காலங்களில் மாணவர்கள் சிறந்த ஒழுக்கத்துடனும் சீரிய சிந்தனையுடனும் வாழ்ந்திருந்தார்கள் .இலட்சிய வேட்கை அவர்களிடம் இருந்தது. ஆனால் போருக்குப்பிறகு எமது இளம் சமுதாயம் திட்டமிட்டு சமுதாயசீரழிவுக்குள் தள்ளப்பட்டு அவர்களின் பண்பாட்டையும் இலட்சிய வேட்கையையும் அழிப்பதற்கு அந்நிய சக்திகளும் சிங்கள இனவாதிகளும திட்டமிட்டு ஆற்றிய வேலைகளில் நாம் எமது பகுதிகளில் ஏராளம் சமூகச்சீரழிவுகளை சந்தித்துக்கொண்டிருக்கின்றோம். இவற்றைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை நமது வடக்குமாகாண சபையிடம் இன்னும் வழங்கப்படவில்லை .பொலிஸ் அதிகாரம், காணி அதிகாரம் எம்மிடம் இல்லை. இந்த வீதிகளும் மின் விளக்குகளும் அபிவிருத்திகளும் நிரந்தர மற்ற சுகங்களைத்தருமே தவிர எமது பண்பாட்டையும் ஒழுக்கத்தையும் கல்வியையும் காக்கப்போவது இல்லை. ஆகவே தான் முதலில் வடக்குக் கிழக்கு இணைந்த நமது தேசத்தில் எமக்கு உரித்தானசுயநிர்ணய உரிமை எமக்கு வழங்கப்பட்டு அதனூடாக மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திகள் என்றும் எமது மக்களுக்கு சுபீட்சமும் நிம்மதியும் தரும் வாழ்க்கையை தரும். நாம் எம்மைஆளும் உரிமை என்பது எமது நிரந்தரமான வாழ்வுக்கான அத்திபாரம் போன்றது என மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வுகளில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளையும் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தார். (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடமைப்பு, சமுர்த்தி அமைச்சினால் 435மில்லியன் ரூபா நிதிஒதுக்கீடு

## யாழ்.அரச அதிபர் தகவல்

**யாழ்.மாவட்டத்தில் கிராமத்துக்கு ஒரு மில்லியன் என்ற திட்டத்தின் கீழ் வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சினால் 435 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பல்வேறு வேலைத் திட்டங்கள் நடைபெற்று வருவதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பாகஅவர்மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாவட்டத்தில்உள்ள15பிரதேசசெயலகங்களின் ஊடாக ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுக்கும் ஒரு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அந்தவகையில் இது 100 நாள்வேலைத்திட்டத்தில்இணைத்து கிராமங்களை அபிவிருத்தி செய்யும் திட்டமாகும்.

இத்திட்டத்தின் கீழ் யாழ். மாவட்ட செயலகத்தினால் 664 வேலைத்திட்டங்கள்நடைமுறைப் படுத்தப்பட்டுவருகின்றது. அதில் கிராம மக்களின் பங்களிப்புடன் பாதை புனரமைப்பு, முன்பள்ளிகளை மேம்படுத்தல், பாடசாலைகளில் அடிப்படைவசதிகளைஏற்படுத்துதல், போதைப் பொருள் விழிப்புணர்வு நடவடிக்கை ,பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு கைத்தொழில் பயிற்சிகள் போன்ற பல்வேறு வேலைத் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்த வருடம் நடைமுறைப் படுத்தப்பட்ட இந்த வேலைத் திட்டங்கள் 70வீதம் நிறைவு செய்யப்பட்டுள்ளன. நடைபெற்றுவரும் வேலைத்திட்டங்கள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 30ஆம் திகதிக்குள் நிறைவு செய்யப்படவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# யார் என்ன சொன்னாலும் மகிந்தவை பிரதமராக பதவியில் அமர்த்துவோம்!

## சாலிந்த திஸாநாயக்க தெரிவிப்பு

யார் என்ன சொன்னாலும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் பதவியில் அமர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாலிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செய்த மிகப்பெரிய தவறு, சிறுபான்மை பலமுடைய தரப்பிற்கு அரசாங்கம் அமைக்க சந்தர்ப்பம் வழங்கியதாகும்.

மைத்திரி கடந்த காலங்களில் அரச தலைவர் ஒருவர் ஆற்றக்கூடிய வகையிலான உரைகளையா ஆற்றினார்.

ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதற்காக எல்லாவற்றையும் அவ்வாறு செய்ய முடியாது.

யார் என்ன சொன்னாலும் நாட்டின் அடுத்த பிரதமர் மகிந்த ராஜபக்ஷவேயாகும்.

அவரை எவ்வாறு பிரதமராக்க வேண்டும் என்பது எங்களுக்குத் தெரியும் என சாலிந்த திஸாநாயக்க தம்புத்தேகமவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார். (இ-7)

# இலங்கை அகதிகள் 45 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இலங்கை அகதிகளில் மேலும் 45 பேர் நேற்றுமுன்தினம் இலங்கைக்கு திரும்பினர்.

இவர்கள் திருச்சி, திண்டுக்கல், கன்னியாகுமரி, விலுப்புரம், தூத்துக்குடி, சிவகங்கா, புதுக்கோட்டை, மதுரை, திருநெல்வெலி மற்றும் ராமநாதபுரம் ஆகிய இடங்களில் தங்கியிருந்தவர்களாவர்.

இவர்கள் தொடர்பில் எவ்வித குற்றச்செயல் முறைப்பாடுகளும் இல்லை என்று முகாம் அதிகாரிகள் உறுதிப் படுத்தியமையை அடுத்தே 45 பேரும் நேற்று இலங்கை நோக்கி திருச்சியின் ஊடாக புறப்பட்டதாக இந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதிய அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னர் ஏற்கனவே கடந்த மேமாதத்தில் 41பேரும் கடந்த மாதத்தில் 46பேரும் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு திரும்பினர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 100 | 60 | 100 | 90 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 70 | 80 | 90 | 80 |
| பச்சைமிளகாய் | 300 | 200 | 200 | 30 | 250 | 250 |
| தக்காளி | 140 | 140 | 120 | 140 | 140 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 50 | 60 | 60 | 60 |
| கோவா | 50 | 80 | 100 | 80 | 80 | 80 |
| கரட் | 100 | 120 | 140 | 200 | 120-200 | 100 |
| பூசணி | 40 | 40 | 30 | 60 | 40 | 40 |
| புடோல் | 40 | 30 | 40 | 60 | 40 | 40 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 60 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 120-160 | 120 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 100 | 120 | 120 | 100 |
| பாகற்காய் | 160 | 140 | 140 | 120 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 40 | 30 | 60 | 100 | 40 | 50 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 100 | 50 | 80 | 60 | 60 | 80 |
| லீக்ஸ் | 100 | 80 | 110 | 120 | 160 | 80 |
| பீற்றூட் | 50 | 80 | — | 100 | 60 | 80 |
| கறிமிளகாய் | 100 | 150 | 160 | 160 | 140 | 140 |
| முருங்கைக்காய் | 100 | 150 | 120 | 120 | 100 | 150 |
| போஞ்சி | 200 | 140 | 180 | 160 | 180 | 160 |
| கத்தரிதம்புள்ள | 30 | 80 | 50 | 80 | — | 70 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 40 | 60 | 60 | 80 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25-40 | 40 | 35-40 | 30-40 | 50 | 50 |
| இராசவள்ளி | 200 | 150 | 100 | — | — | 120 |
| வெங்காயப்பூ | 100 | 160 | — | 200 | 120 | 160 |
| முள்ளங்கி | 40 | 30 | 80 | 60 | 60 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 30 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 10 | 20 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 447

Search for people, places and things Nagendram Home

செல்வா செல்வகுமார்




கிரி கிரியன்




சிவா கணேஸ்




அன்ரோ மெரீனா




அபி அபிதா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.

அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1201

# பண்புள்ள சிறுவன்

ஏழூர் என்ற ஊரில் ராமசாமி என்ற விறகுவெட்டி இருந்தான். நல்ல ஊழைப்பாளி. அவனுக்கு அன்பு என்ற பையன் இருந்தான். அவன் அரசு பள்ளியில எட்டாவது வகுப்பு படித்துக் கொண்டு இருந்தான். அவன நன்றாக படிக்கக்கூடியவன்.

அன்பு! பேருக்குத் தகுந்தாற்போல் அனைவரிடத்திலும், அன்பாகவும், பணிவாகவும் இருப்பான். படிப்பை தவிர மற்றவர்களுக்கு என்ன தேவையோ உதவி செய்வான்.

அன்பு பள்ளிவிட்டு வந்தவுடன், அம்மாவிற்குத் தேவையான உதவி செய்துவிட்டு, பின்னர் இரவு பத்து மணி வரை தெருவிளககில் படித்துவிட்டு, தூங்கச்செல்வான். அவன் படிப்பில் முதல் மாணவனாக திகழ்ந்தான். அவன அம்மா அவனிடம் அடிக்கடி நமக்கு பணவசதி கிடையாது, நன்றாக உழைத்துப் படித்தால் பிற்காலத்தில் நல்ல வசதியுடன் வாழலாம் என்று சொல்லுவார்.

அவன் அப்பா பள்ளி விடுமுறை நாட்களில் அவனுக்கு நீதி போதனைக் கதைகளைக் கூறுவார். இவனுடன் படிக்கும் மாணவர்கள் எல்லாம் நல்ல வசதியுடன் இருந்தனர்.

இவனுடைய ஊருக்கு ஒரு மருத்துவமனை கட்டுவதற்கும், பழைய கோவிலைப் புதுபிக்கவும், இவனுடைய பள்ளி மேல்நிலைப் பள்ளியாக மாறுவதற்கும் ஒரு விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்த விழாவிற்கு அடிக்கல் நாட்ட ஒரு மகானை அழைத்து வருவதாக செய்தி வந்தது.

அந்த மகான் வந்தால் ஊருக்கு நல்ல அதிர்ஷ்டம் வரும் என்று மக்கள் நம்பினர்.

யாராருக்கு எவ்வளவு நன்கொடைகள் கொடுக்க முடியுமோ அவர்கள் எல்லாம் அந்த ஊர் தலைமையாளிடம் கொடுக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது. மக்களும் அவரவர் சக்திக்குத் தகுந்த நன்கொடைகளைக் கொடுத்தனர்.

ஆனால் அன்பு அப்பா ஒரு விறகுவெட்டி என்பதால், ஒருநாள் சாப்பாடு சாப்பிடுவதே பெரிய கஷ்டம். இதில் நன்கொடை எங்கே கொடுப்பது என்று மிகவும் கவலைபட்டார்.

அன்புக்கு நம்மால் பணம் கொடுக்க இயலாது. ஆனால் பணத்தைத்தவிர வேறு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று மனதில் நினைத்தான்.

நாட்களும் கடந்தன. இரண்டு நாட்கள் இருக்கும் நிலையில், ஊரில் மகானை வரவேற்பதற்காக எல்லாரும் ஒற்றுமையாக வேலை செய்து கொண்டிருந்தனர்.

அவனுடைய கிராமத்தில் பழைய கோவிலைச் சுற்றி புதுப்பிக்கப்பட்டது. அன்பு நினைத்தான், பெரியவர் வருவதற்கு ஒற்றையடிப் பாதை மட்டும் சுத்தம் செய்யப்பட்டது. மீதியுள்ள இடங்களில் தேவையில்லாத செடி, கொடிகள் படர்ந்து இருந்தன. இவற்றை நாம் சுத்தம் செய்தால் என்ன என்று தோன்றிற்று.



அதனால் இரவு பகல் பார்க்காமல் மும்முரமாக அவன் நெருஞ்சி முட்கள் நிறைந்த பகுதி எல்லாம் அழகாக சுத்தம் செய்து, ஒருவழிப் பாதையாக அல்லாமல், எந்தப் பக்கம் வந்தாலும், மக்கள் வருவதற்கு அழகானப் பாதையை ஏற்படுத்தி இருந்தான்.

இவன் இவ்வளவு சுத்தமாக செய்ததைப் பற்றி யாரும் புகழ்ந்து சொல்லவில்லை. ஏன் என்றால், மகான்வருவதற்கு யார்யாரோ என்னவெல்லாம் செய்யும் பொழுது, இந்த வேலை மற்றவர்களுக்கு ஒரு பெரிய விடயமாக தெரியவில்லை.

மகானும் வந்தார். கோவிலை அழகாகப் புதுப்பிக்க ஏற்பாடு செய்ததை மிகவும் மகிழ்ச்சியுடன் பார்த்தார். மருத்துவமனை கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார். மக்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் இருந்தனர்.

கடைசியாகப் பள்ளிக்கு வந்தார்.

அந்த ஊரில் உள்ள அனைவருக்கும் அருள் என்ற வியாபாரி அன்னதானம் அளிக்க முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டதால் அனைவருக்கும் சாப்பாடு போடப்பட்டது.

அனைவரும் சாப்பிட்ட பிறகு பள்ளி மைதானத்தில் கூடினர்.

மகான் சொன்னார், எந்த ஒரு விடயத்திற்கும் ஊர் கூடி செய்யும் பொழுது, அதன் பலன் பலமடங்கு அதிகமாகும். இந்த ஏழூர் மக்கள் இவ்வளவு ஒற்றுமையாக செய்தது மனதிற்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

அந்த ஊர் மக்களுக்கு நல்ல அறிவுரை வழங்கினார். அப்பொழுது அந்த ஊர் தலைவர் யார் யார் அதிக தொகை கொடுத்துள்ளார்களோ, அவர்கள் பெயர்களை வாசித்தார். அவர்களுக்கு எல்லாம், அந்த மகான் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்.

இந்த பொன்னாடை போர்த்திய போது, அன்புவிற்கு, மனதில் சிறிது வருத்தம் இருந்தது. அவனுடன் கூடப் படிக்கின்ற பையன்களின் பெற்றோர்கள் எல்லாம், அந்த மகானிடம் ஆசி வாங்கினர்.

நம்மால் இந்தக் கிராமத்திற்கு சிறிய நன்கொடையைக்கூடக் கொடுக்க முடியவில்லையே என்று மனதில் ஆதங்கம் எழுந்தது.

இதனிடையில் அனைவரது பெயரும் வாசித்து முடிந்தபோது, மகான் அவர்கள் ஒரு காசோலையை இந்தக் கிராமத்திற்காக வழங்கினார். இந்த ஏழூர் கிராம் நல்ல செல்வச் செழிப்போடும், மன நிம்மதியோடும் மக்கள் வாழ வேண்டும் என இறைவனை பிரார்த்திக்கின்றேன் என்று சொன்னார்.

கோவில், மருத்துவமனை, பள்ளி ஆகிய மூன்று இடத்திற்கும் பணம் கொடுத்தாகிவிட்டது. இன்னும் ஒரு காசோலை இருக்கிறது. அது தகுந்த இடத்திற்கு செல்ல வேண்டும். எந்த இடம் என்று மக்களால் யூகிக்க முடிகிறதா என்று ஒரு கேள்வி கேட்டார்.

மக்கள் அனைவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு விழித்தனர்.

அப்பொழுது அந்த மகான், மைக்கில் அன்பு என்ற பையன் யார்?. அவன் எங்கு இருந்தாலும், உடனே வரவேண்டும் என்று கூறினார். அன்பிற்கும், அவன் பெற்றோருக்கும் ஒன்றுமே புரியவில்லை.

ஒரு வழியாக அன்பு அவர் இருக்கும் இடத்திற்குச் சென்றான். அவரை விழுந்து வணங்கினான்.

அப்பொழுது அந்த மகான் சொன்னார். இரண்டு நாட்கள் முன்பு என்னுடைய சீடனை இந்தக கிராமத்தின் நிலவரத்தைப் பற்றி அறிய அனுப்பிவைத்தேன். இந்த அன்பு என்ற மாணவன் தனி ஒரு ஆளாக அனைத்து நெருஞ்சி முட்களையும் வெட்டிப் பாதையை அழகாக சரிசெய்து கொண்டிருந்தான். இவ்வளவு சிறிய வயதில், தன்னம்பிக்கையுடன் அந்த வேலையை முடித்து இருப்பதாக என் சீடன் சொன்னான்.

இந்தச் சிறுவனிடமிருந்து நாம் ஒரு பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். தன்னால் பணத்தால் முடியாததை, தன் மன பலத்தால் உடல் உழைப்பால் செய்துள்ளான். இது மிகப்பெரிய நன்கொடை. வழியில் ஒரு சிறு முள் இருப்பதைப் பார்த்து அதை எடுத்து ஒரு ஓரமாகப் போடாமல், அப்படியே விட்டுவிட்டால், யார் காலிலாவது குத்திப் புண்ணாக்கிவிடும். என்று தெரிந்த போதும் அந்த முள்ளை எடுத்து ஓரமாகப் போட விரும்பாமல் பார்த்துக் கொண்டே செல்லும் நிலையில்தான் பலர் இருக்கின்றனர். ஆனால் இந்த ஊரில் உள்ள தேவை இல்லாத முட்கள் அனைத்தையும் இந்தச் சிறுவன் அகற்றி விட்டான். இது பணத்தால் செய்த நன்கொடைக்கு மேலானது. நல்மனத்தால் செய்த இந்தச் செயல் சிறப்பானது.

இந்தக் காசோலையை இந்த அன்பின் படிப்புச் செலவிற்காக நன்கொடையாக அளிக்கிறேன். அன்பிற்கும், அவனது பெற்றொருக்கும், மனது மிகவும் சந்தோஷமாக இருந்தது.



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1502 - கிறிஸ்தோபர் கொலம்பஸ் தனது நான்காவது கடற்பயணத்தின் போது கொந்துராசை அடைந்தார்.
- 1629 - இத்தாலியில் நேப்பிள்சில் இடம்பெற்ற நில நடுக்கத்தில் 10,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1733 - ஐக்கிய அமெரிக்காவில் முதலாவது விடுதலைக் கட்டுநர் லாட்ஜ் ஆரம்பிக்கப்பட்டது.
- 1756 - ரஷ்யாவின் அரசி எலிசபெத்தின் வேண்டுதலுக்கிணங்க கட்டடக் கலைஞர் பார்த்தலோமியோ ராஸ்ட்ரெல்லி கத்தரீன் அரண்மனையைக் கட்டி முடித்தார்.
- 1825 - பசுபிக் கடலில் மால்டன் தீவு கண்டுபிடிக்கப்பட்டது.
- 1930 - உருகுவே முதலாவது உதைபந்தாட்ட உலகக்கிண்ணப் போட்டி இறுதி ஆட்டத்தில் ஆர்ஜெண்டீனாவை 4-2 கணக்கில் தோற்கடித்து உலகக்கிண்ணத்தை வென்றது.
- 1932 - கலிபோர்னியாவில் 10 ஆவது ஒலிம்பிக் விளையாட்டுக்கள் ஆரம்பமாயின.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானிய நீர்மூழ்கிக் கப்பல் ஐ-58 அமெரிக்காவின் கடற்படைக் கப்பலை மூழ்கடித்ததில் 883 கடற்படையினர் கொல்லப்பட்டனர்.
- 1954 - எல்விஸ் பிறீஸ்லி முதற்தடவையாக பொது மேடையில் பாட ஆரம்பித்தார்.
- 1966 - உதைபந்தாட்ட உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் இங்கிலாந்து அணி மேற்கு ஜேர்மனியை 4-2 என்ற கணக்கில் வென்றது.
- 1971 - அப்பல்லோ 15 இல் சென்ற டேவிட் ஸ்கொட் மற்றும் ஜேம்ஸ் ஏர்வின் இருவரும் லூனார் ரோவர் வாகனத்துடன் சந்திரனில் இறங்கினர்.
- 1971 - ஜப்பானில் இரண்டு விமானங்கள் வானில் மோதிக் கொண்டதில் 162 பேர் கொல்லப்பட்டனர்.
- 1980 - பிரான்ஸ், மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகியவற்றிடம் இருந்து வனுவாட்டு விடுதலை பெற்றது.
- 1997 - அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் "திரெட்போ" என்ற இடம்பெற்ற மண்சரிவில் 18 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

- 1818 - எமிலி புறொண்டி, ஆங்கில நாவலாசிரியர் (இ. 1848)
- 1863 - ஹென்றி ஃபோர்ட், அமெரிக்கத் தொழிலதிபர் (இ. 1947)
- 1947 - ஆர்னோல்ட் ஸ்வார்செனேகர், நடிகர், அரசியல்வாதி

### இறப்புகள்

- 1969 - இ. சி. இரகுநாதையர், இலங்கையில் வாக்கிய பஞ்சாங்கம் கணித்து வெளியிட்டவர்
- 2003 - கே. பி. சிவானந்தம், வீணை வாத்திய கலைஞர் (பி. 1917)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது லம்போகினியை என்னிடமே தாருங்கள்

## அடம்பிடிக்கிறார் நாமல்

தான் நாட்டிற்கு கொண்டு வந்த லம்போகினி எங்கே என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கேள்வியெழுப்பியுள்ளார்.

சூரியவெவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவ்வாறு சுமத்தப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுகளும் போலியானதென்பது தனக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளாமையின் மூலம் உறுதியாகியுள்ளது.

முதுகெலும்பை நேராக வைத்துக்கொண்ட காலம் போய் முதுகெலும்பை மடக்கிக்கொண்டு இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளிடம் மண்டியிடும் யுகம் உருவாகியமையே மாற்றத்தின் பின் சென்றவர்களுக்கு கிடைத்த ஒரே மாற்றம்.

கடந்த 10 வருடத்தினுள் நாங்கள் முதுகெலும்பை நேராக வைத்துக்கொண்டு செயற்பட்டோம்.

உலகத்தின் மிக கொடிய தீவிரவாதத்தை ஒழித்தோம். பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியடைய வேலைத்திட்டங்களை மேற்கொண்டோம். அபிவிருத்திகளை மேற்கொண்டோம்.

கடந்த நாட்களில் வேட்டையாடும் ஆட்சியை ஆரம்பித்தார்கள். விமல் வீரவன்சவின் மனைவியை விசாரணைக்கு அழைத்து சென்றார்கள், மஹிந்தானந்தவின் மகனை கொண்டு சென்றார்கள்.

என்னை எனது அம்மா, தம்பி என அனைவரையும் விசாரணைக்கு அழைத்து சென்றார்கள்.

அழைத்து சென்று கூறுகின்றார்கள், நாமலுக்கு விமானம் உள்ளது லம்போகினி உள்ளதென. அவை எங்கே என்னிடம் அதனை தாருங்கள் என நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். (இ-7)

## குறைக்கப்படவில்லை

# ஊழல் ஒழிப்பு



## நிதி அமைச்சர் தெரிவிப்பு

நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் ஊழல் குறைக்கப்படவில்லை ஒழிக்கப்பட்டுள்ளதாகவும், ஊழல் திட்டங்களுக்கு பயன்படுத்தப்பட்ட பணம் மக்களுக்கு சென்றடைவதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவிஸாவெல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட நிதி அமைச்சர்,

அன்று வெள்ளை வான், வாழ்க்கை செலவு குறித்து அச்சம் இன்று இல்லை. இன்று மக்களின் சிரிப்பில் ஜனநாயகம் உறுதி செய்யப்பட்டுள்ளதனை காண முடிகின்றது.

100 வாக்குறுதிகளை வழங்கினோம். அவற்றில் 81 வாக்குறுதிகள் என்னுடைய அமைச்சின் ஊடாகவே நிறைவேற்றப்பட்டன.

நாங்கள் அதனை எவ்வாறு செய்தோம் என்று தற்போது அனைவருக்கும் பிரச்சினையாக உள்ளது.

நாங்கள் ஊழல்களை குறைக்கவில்லை ஒழித்துவிட்டோம். போலியான திட்டங்கள் எங்களிடம் இல்லை. நாங்கள் அதனை மக்களுக்கு நிவாரணமாகவே வழங்குவோம்.

நாங்கள் 10 இலட்ச வேலை வாய்ப்புகளை வழங்குவோம். இலங்கை முதலீடுகளை அதிகரித்த பின்னரே நாங்கள் வெளிநாட்டு முதலீடுகளை கொண்டு வருவோம்.

எங்கள் அரசாங்கத்தில் வீண் செலவுகள் இல்லை. எந்த ஒரு நாடும் எங்கள் அரசாங்கத்தை பணத்திற்கு பெற்றுக்கொள்ள முடியாதென நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க மேலும் தெரிவித்தார். (இ-7)

# கூகுள் நிறுவனத்துடன் ஒப்பந்தம்

கூகுள் நிறுவனத்துடன் இணைந்து முழு இலங்கையும் உள்ளடங்கும் வகையில் இணைய வசதி வழங்கப்பட இருப்பதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார். இது தொடர்பாக கூகுள் நிறுவனத்துடன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தம் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டது.

கூகுள் லூன் ஊடாக நாட்டின் சகல பிரதேசங்களும் உள்ளடங்கும் வகையில் இணையத்தள வசதி வழங்கப்பட இருப்பதோடு முழுநாட்டையும் உள்வாங்கும் வகையில் இணையத்தள வசதி வழங்கும் முதலாவது நாடாக இலங்கை வரலாற்றில் பதியப்படுகிறது. கூகுள் நிறுவனத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் கருத்துத் தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, இலங்கை நீண்ட காலமாக உலகநாடுகளுடன் தொடர்புகளை பேணி வருகிறது.

இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ள இலங்கையினூடாக கிழக்கையும் மேற்கையும் இணைக்கும் பிரதான வர்த்தக மார்க்கம் அமைந்துள்ளது. வர்த்தக மற்றும் கலாசார பரிமாற்றம் மற்றும் சுற்றுலா கைத்தொழில் தொடர்பான நீண்ட வரலாறு இலங்கை துறைமுகங்களுக்கும் நகரங்களுக்கும் இருக்கிறது. இலங்கை என்பது கருத்து, பொருள் மற்றும் மனிதர்கள் சுதந்திரமாக பரிமாறப்படும் உலகத்துடன் சிறந்த தொடர்புகளை பேணும் நாடாகும்.

ஆனால் கடந்தகால இலங்கை குறித்து அவ்வாறு கூற முடியாது. கடந்த இரு தசாப்தங்களுக்கு முன்னர் வரை ஒவ்வொரு அலுவலகமாக சென்று பல ஆவணங்களை நிரப்பி தொலைபேசி இணைப்பு கிடைக்கும் வரை பல வருடங்கள் காத்திருக்க நேர்ந்தது. தொலைபேசி கட்டணங்கள் அன்று அதிகமாக காணப்பட்டன. வசதியுள்ள, பலம் படைத்தோருக்கே அது மட்டுப்படுத்தப்பட்டது.

டெலிகொம் நிறுவனம் தனியார் மயப்படுத்தப்பட்டபின் போட்டித் தன்மையுடன் சம அவகாசத்துடன் கூடிய புதிய யுகம் ஆரம்பிக்கப்பட்டது. நாட்டின் சகல பிரஜைகளும் தாங்கக் கூடிய உயர் தரத்தினாலான கைபேசி வலையமைப்பை அறிமுகப்படுத்தவும் இதனூடாக வாய்ப்பு ஏற்பட்டது.

21 ஆம் நூற்றாண்டில் எமது வாழ்வில் சகல அம்சங்களும் இணையத்தளத்துடன் பின்னிப் பிணைந்துள்ளன. இருந்தாலும் பல இலங்கை [illegible] இணைய [illegible] (இ-7)

# இன்று ஒரு தகவல்

## இதமும் பிரியமும்

இதமாகப் பேசுவதற்கும் பிரியமாகப் பேசுவதற்கும் வித்தியாசம் உண்டா? என்று கேட்டால் "உண்டு" என்கிறார்கள் பெரியவர்கள்.

பிரியமாகப் பேசுபவர்கள் பலபேர் இருப்பார்கள். ஆனால், இதமாகச் சொல்பவர்கள் சிலபேர்தான் இருப்பார்கள். இப்பொழுது நான் உங்களிடம் பேசுகிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள்.

"உங்களுக்கு கேட்பதற்கு எது இன்பமாக இருக்குமோ" அதாவது உங்களுக்கு எதைச் சொன்னால் பிடிக்குமோ அதைச் சொல்வது பிரியம்!

உங்களுக்கு எதைச் சொன்னால் நன்மையோ அதைச் சொல்வது இதம்! நாம் இதமாகப் பேசினாலும், பிரியமாகப் பேசினாலும் அதனால் ஆகப் போவது ஒன்றுமில்லை. ஆனால், ஒரு பெரிய பொறுப்பில் உள்ளவர்கள்... அதாவது ராஜா என்று வைத்துக் கொண்டால் அவருக்கு ஆலோசனை சொல்லக் கூடிய அமைச்சர்கள் அல்லது அதிகாரிகள் எப்படி இருக்க வேண்டும் தெரியுமா? இதமாகச் சொல்பவர்களாக இருக்க வேண்டும். பிரியமாக மட்டும் பேசுபவர்களாக இருந்துவிடக் கூடாது!

ஒரு அரசனிடம் பேசும் போது அவனுக்கு எது நன்மையோ அதைச் சொல்லவேண்டும். ஆனால், அரசனுக்கு என்ன பிடிக்குமோ அதைப் பேசுபவர்கள்தான் அதிகம். ஏன் அப்படி பேசுகிறீர்கள் என்று கேட்டால்? "அப்படிப் பேசினால் தான் அவர் எங்களின் சம்பளத்தை உயர்த்துவார்!" என்று சொல்வார்கள்.

"இதம்" என்பது பலசமயங்களில் கசப்பாகத்தான் இருக்கும். அதனால் அதைச் சொல்பவர்களை யாருக்கும் பிடிக்காது. அதனால்தான் விபீசனனை இராவணனுக்குப் பிடிக்காமல் போயிற்று! ஒரு நாள் இராவணன் தனது அமைச்சர்களையெல்லாம் அழைத்து, யோசனை கேட்டான்.

"வெற்றிக்கு" மூல காரணம் அமைச்சர்களின் நல்ல ஆலோசனை என்று பெரியவர்கள் சொல்வார்கள். அதனால் எனக்கு நல்ல ஆலோசனை சொல்லுங்கள்! என்று கேட்கிறான். ஆனால், அவர்கள் இராவணனுக்கு எதைச் சொன்னால் பிடிக்குமோ அதைச் சொன்னார்கள்.

"சீதையை நீயே வைத்துக்கொள்... இராமனை நாங்கள் கொன்று விடுகிறோம்! "என்றார்கள்.

ஆனால், விபீசனனோ, "தனியாக நின்று இராமனை நாம் ஜெயிக்க முடியுமா? அதனால் சீதையைத் திருப்பிக்கொடுத்து விட்டு மன்னிப்புக்கேள்!" என்றான்.

இந்த இதம் இராவணனுக்கு கசப்பாக இருந்தது. விபீசனன் சொன்ன வார்த்தைகள் இராவணனிடம் எடுபடவில்லை.

"**புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருள் எனப் போயிற்று!**" இந்தக் காதால் வாங்கி அந்தக் காதால் விட்டுவிட்டான். அதனால்தான் அழிந்தான்.

நம்மிடம் யாராவது வந்து ஒரு யோசனை சொன்னால் கூட அந்த யோசனைக்குப் பின்னால் இருப்பது பிரியமா? இதமா? என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

நல்ல யோசனை, அதேசமயம் நமக்குப் பிடிக்கவில்லை என்றால் கூட அதை நாம் அலட்சியப்படுத்தக் கூடாது!

ஒரு ராஜாவுக்கு பிரியமாகவும் இதமாகவும் பேசக் கூடிய அமைச்சர் ஒருவர் இருந்தார்.

ஒரு நாள் எதிரி நாட்டு அரசன் வந்து ராணியைத் தூக்கிக்கொண்டு போய் விட்டான். அதாவது சிறை எடுத்துக் கொண்டு போய்விட்டான். இந்த விடயத்தைக் கேள்விப்பட்ட அமைச்சர் "அரசே! அந்நிய நாட்டு மன்னன் இங்கு வந்து அரசியைத் தூக்கிக் கொண்டு போய்விட்டான். இப்ப என்ன செய்யலாம்?" என்று கேட்டார்.

"உடனே அந்த மன்னன் எங்கிருந்தாலும் கண்டு பிடித்துக் கொண்டு வாருங்கள்!" என்றார் ராஜா.

"ஏன்?" என்று கேட்டார் அமைச்சர்.

"அவனுக்குப் பாராட்டு விழா நடத்தி பத்தாயிரம் பொற்காசுகள் பரிசு கொடுத்து அனுப்ப வேண்டும்" என்றாராம் ராஜா.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியில் வருவான்.... விரைவில் வருவான்!

## அற்புதம்மாள் நம்பிக்கை!


அற்புதம்மாள்

தூக்கு மேடையில் நின்றுகொண்டு இருக்கிறார்கள் பேரறிவாளன், சாந்தன், முருகன்!

ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்றவர்களை ஆயுள் தண்டனையாகக் குறைத்து தமிழக அரசு முடிவெடுத்தது. ஆனால், அதனை மத்திய அரசு ஏற்கவில்லை. இது தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தின் அரசியல் சாசன அமர்வில் விசாரணையில் இருக்கிறது. 'சி.பி.ஐ விசாரிக்காத வழக்குகளில் வேண்டுமானால் மாநில அரசு முடிவெடுக்கலாம்' என்பது மாதிரி கருத்துச் சொல்லிக்கொண்டிருக்கிறது மத்திய அரசு. இறுதித் தீர்ப்பு எப்படி அமையுமோ என்ற நிலையில் பேரறிவாளனின் அம்மா அற்புதம்மாளை சந்தித்தபோது....

"தூக்குத்தண்டனை பெற்ற மூவர் வழக்கு மிகமிக முக்கியமான கட்டத்தில் இருக்கிறது. 25 ஆண்டுகளாக என் மகன் சிறையில் இருக்கிறான். என்ன சொல்வது என்றே எனக்குத் தெரியவில்லை.

ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டபோது, சி.பி.ஐ அதிகாரிகள் என் மகனிடம் விசாரிக்க வேண்டும் என்று கேட்டு அவனை அழைத்துப் போனார்கள். என் மகன் எந்தத் தவறும் செய்யாததால், நாங்கள் அவனை அதிகாரிகளோடு தைரியமாக அனுப்பி வைத்தோம். அப்போது, எங்கள் அக்கம் பக்கத்தினர், நண்பர்கள், உறவினர்கள் எல்லாம் என் கணவரைத் திட்டினார்கள். 'பொலீஸ் வந்து கேட்டால், நீ பிள்ளையை அனுப்பலாமா?' என்றார்கள்.

பெரியார் கொள்கைகள், உண்மை, பகுத்தறிவு, சேவை என்பதையே மனதில் வைத்துக்கொண்டு வாழ்ந்த என் கணவர், 'நாம் தவறு செய்யாதபோது எதற்கு பயப்பட வேண்டும்?' என்று அப்போது அவர்களுக்குப் பதில் சொன்னார். மறுநாள் காலையில் 6 மணிக்கு நான் மல்லிகை அலுவலகம் சென்று என் பிள்ளையை அழைத்து வரப்போனேன். ஆனால், அங்கு அவனை பார்க்கவேவிடவில்லை. அதன்பிறகுதான், எங்களுக்குப் பயம் வரத் தொடங்கியது. என் மகன் படித்த படிப்பே, அவன் மேல் கொலைப்பழி விழுவதற்குக் காரணமாக அமைந்தது. என் மகன் டிப்ளமோ இ.சி.இ படித்திருககிறான். அதனால், இவனுக்கு வெடிகுண்டின் சர்க்யூட் தெரியும் என்று சொல்லி ஒரு நீதிபதி தீர்ப்பு வழங்கியபோது, எங்களுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

ராஜீவ் காந்தி என்ற ஒரு பெயர் இந்த வழக்கில் இருப்பதால், இதில் எல்லாமே தலைகீழாக நடக்கிறது. பாதிக்கப்பட்டவர்களுக்குக் கருணை காட்ட வேண்டிய நீதிமன்றம், கருணை காட்டவில்லை. உண்மையாக இந்தக் கொலையைத் தூண்டியவர்களை நோக்கி ஒரு கேள்விகூட இன்னும் கேட்கப்படவில்லை. ஆனால், அப்பாவிகள் 25 ஆண்டுகளாகச் சிறைக்குள் கிடந்து அவதிப்படுகிறார்கள். என் பையன் யார் மனம நோகவும் பேசத் தெரியாதவன். ஆனால், கொலைப்பழியைச் சுமந்துகொண்டு, கடந்த 25 ஆண்டுகளாக அவனைக் கொலைகாரன்... கொலைகாரன்... என்று சொல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. இப்படிப்பட்ட சிக்கலான வழக்கில் நம் பிள்ளையைக் கொண்டு போய் நாமே தள்ளிவிட்டோமே என்று வேதனைப்பட ஆரம்பித்தோம். இன்றைக்கும் என் கணவருக்கு அந்தக் குற்ற உணர்ச்சி இருக்கிறது.

இறந்த உயிர் பெரிய உயிர்... அதனால் அதில் யாரையாவது சிலரைத் தண்டித்தேயாக வேண்டும் என்று சொல்கிற சட்டத்தை நாம் எப்படிக் கேள்வி கேட்கப் போகிறோம். பாதிக்கப்பட்டவர்கள் கீழ்மட்டத்தில் இருக்கிறவர்கள். பொருளாதாரம், அரசியல் என்று எதைச் சார்ந்தும் உயரத்தில் இல்லாதவர்கள். அவர்களுக்கு எப்படி நீதியை வாங்கித் தரப்போகிறோம் என்பதுதான் நான் கேட்க விரும்புகிற கேள்வி.

இன்றைக்கு சட்டங்கள் எல்லாம் மிகவும் கொடுமையாக மாறி வருகின்றன. ஆயுள் தண்டனை என்றால், சாகும் வரை சிறையில் இருக்க வேண்டும் என்று இப்போது மத்திய அரசு வற்புறுத்துகிறது. இது மிகவும் கொடுமையானது, ஆபத்தானது. இப்படிப்பட்ட சட்டங்களைக் கொண்டு வருகிறவர்கள், இந்தக் கொடுமையை நாம் எப்போதும் அனுபவிக்க மாட்டோம் என்று நினைக்கிறார்கள். இதையெல்லாம் வெறுமனே, நாம் கேள்வி கேட்கும் நிலையில்தான் இருக்கிறோம். ஏனென்றால், எந்தக் கொலை வழக்கிலும் பாதிக்கப்படுபவர்கள், எல்லோருமே கீழ் மட்டத்தில் உள்ளவர்கள் அல்லது அப்பாவிகள்தான்.

சி.பி.ஐ அதிகாரி தியாகராஜன், 'நான் பேரறிவாளனின் வாக்குமூலத்தை அப்படியே பதிவு செய்யவில்லை. கொஞ்சம் திருத்தித்தான் பதிவு செய்தேன். நான் அப்படிச் செய்யாமல் இருந்திருந்தால், இன்று பேரறிவாளன் விடுதலையாகி வெளியில் உலாவிக் கொண்டிருப்பார்' என்கிறார் இப்போது. இதைப் பார்த்து வேதனைப்பட்ட பலர், என்னைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு, 'அந்த அதிகாரி மீது வழக்குப் போடுங்கள்' என்கிறார்கள். இப்போது அவர் மீது வழக்குப் போடுவதால் என்ன பயன்? என் மகனின் வாழ்க்கை போய்விட்டது, இளமை போய்விட்டது, எல்லாமே போய்விட்டது.

ஒரு மனிதனுடைய வாழ்க்கை எங்கு மாறுகிறது என்றால், ஒரு வழக்கில் ஒரு காவலர் குற்றம்சாட்டப்பட்டவர் மீது போடுகிற செக்ஷனில்தான் மாறுகிறது. ஒரு காவலர் நினைத்தால், ஒரு நிரபராதியை நிஜக் குற்றவாளியாக்க முடியும். நிஜமான குற்றவாளியை நிரபராதியாக்க முடியும். அதுதான் நடந்தது ராஜீவ் கொலை வழக்கிலும். இந்த வழக்குத் தொடர்பாக நாங்கள் சொன்ன உண்மைகளை யாருமே கேட்கவில்லை. ஏனென்றால் இறந்தது ராஜீவ் காந்தி. அவருடைய மரணத்தில் பல்வேறு சந்தேகங்கள் இருக்கின்றன. அதனைக் கண்டுபிடிக்காமல் அப்பாவிகளை தூக்கிலிட்டு வழக்கை முடிக்க நினைக்கிறார்கள்.

கொலைகாரர்கள் நிறைய பேர் வெளியில் வசதியாக உள்ளனர். ஆனால், அப்பாவிகளும் ஏழைகளும் அநாதைகளும்தான் சிறைக்குள் இருக்கின்றனர். சிறை என்பது சீர்த்திருத்தும் கூடமாக இருக்க வேண்டும். பழி வாங்கும் ஓர் இடமாக இருக்கக் கூடாது.

இன்றுவரை சிறையில் என் மகன் நல்லவனாகவே இருக்கிறான். தன்னடக்கமாக வாழ்கிறான் தன்னளவில் எல்லா உதவிகளும் செய்கிறான். சிறைக்குள் தனி கம்ப்யூட்டர் அறை உருவாக்கி இருக்கிறான். நான் அவனைப் பார்க்க போகும் போது அவன் சொல்வதெல்லாம், 'சிறைக்குள் இருப்பவர்கள் எல்லாம் அப்பாவிகள். வாழ வேண்டியவர்கள். நான் சிறைக்குள் இருந்து வெளியில் வந்தாலும் சிறைவாசிகளின் குரலாகத்தான் இருப்பேன் அம்மா' என்பதுதான். அவன் நிச்சயம் வெளியில் வருவான், விரைவில் வருவான்!" என்றார் அற்புதம்மாள்!

யூனியர் விகடன்


### "சிறை வைப்பதால் என்ன நம்பிக்கையை ஏற்படுத்த முடியும்?"

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்றுள்ள நளினி, முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகியோரில் நளினியின் மரண தண்டனை, கடந்த தி.மு.க ஆட்சியில் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. மற்றவர்களின் மரண தண்டனையை உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி சதாசிவம் அமர்வு, கடந்த 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி 18 ஆம் திகதி ஆயுள் தண்டனையாகக் குறைத்தது. இதையடுத்து, அதற்கு மறுநாளே (பெப்ரவரி 19 ஆம் திகதி) குற்றவியல் நடைமுறைச் சட்டம் 432, 433 இன் படி தமிழக அரசு விடுதலை செய்தது.


உச்ச நீதிமன்றம் ராஜீவ் கொலையாளிகளின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்ததை எதிர்த்தும் தமிழக அரசு அவர்களை விடுதலை செய்ததை எதிர்த்தும் மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தில் இரண்டு மனுக்களைத் தாக்கல் செய்தது. இரண்டு மனுக்களின் மீதான விசாரணையும் தற்போது உச்ச நீதிமன்றத்தில் தொடங்கிவிட்டது. உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி தத்து, நீதிபதிகள் இப்ராகிம் கலிபுல்லா, பினாகி சந்திரகோஷ், ஏ.எம்.சப்ரே, யு.யு.லலித ஆகியோர் அமர்வில் பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரை ஜெயலலிதா விடுதலை செய்ததை எதிர்க்கும் மனு மீதான விசாரணையும் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி தத்து, டி.எஸ்.தாகூர், அனில் ஆர்.தவே, ரஞ்சன் கோகாய், சிவகீர்த்திசிங் ஆகியோர் அடங்கிய அமர்வின் முன், தூக்குத்தண்டனையை ரத்து செய்ததை எதிர்க்கும் மனு மீதான விசாரணையும் நடைபெற்று வருகிறது.

மத்திய அரசு வழக்கறிஞர் மேக்னா, சி.பி.ஜ விசாரித்த வழக்குகளில் தண்டனை பெற்ற குற்றவாளிகளை விடுதலை செய்ய மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை என்று தன்னுடைய வாதத்தை எடுத்து வைத்திருந்தார். தமிழக அரசு சார்பில் வாதிட்ட வழக்கறிஞர், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி ஆயுள் தண்டனைக் கைதிகளை விடுதலை செய்யும் மாநில அரசின் அதிகாரத்தை விட்டுத்தர முடியாது என்று தன்னுடைய வாதத்தில் தெரிவித்திருந்தார்.

இந்த மனுக்கள் மீதான விசாரணையின்போது கருத்துத் தெரிவித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள், "வாழ்நாள் முழுவதும் சிறையில் இருக்கும் தண்டனையை விட மரண தண்டனை மேலானது. ஒருவனை வாழ்நாள் முழுவதும் சிறையில் வைப்பதன் மூலம் அவனுக்கு என்ன நம்பிக்கையை ஏற்படுத்த முடியும்? அப்படிச் செய்வதன் மூலம், எதற்காக நாம் திருந்த வேண்டும் என்ற அவநம்பிக்கைதான் கைதியின் மனதில் தோன்றும். விடுதலை பெறுவோம் என்ற நம்பிக்கை இருந்தால்தானே குற்றவாளிக்குத் திருந்தி வாழ வேண்டும் என்ற எண்ணம் தோன்றும்" என்கிறார்கள். விசாரணை தொடர்கிறது.


முருகன்


சாந்தன்


பேரறிவாளன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன கடற்படை போர்ப்பயிற்சி அமெரிக்கா கடும் எதிர்ப்பு

## தென்சீன பிராந்தியத்தில் பதற்றநிலை

(பீஜிங்)

தென் சீன கடல் பகுதியில் உரிமை கொண்டாடுவதில் சீனா, ஜப்பான், கொரியா நாடுகளுக்கு இடையே பிரச்சினை நிலவிவருகிறது.

இப்பகுதி தங்களுக்கு மட்டுமே சொந்தம் என சீனா உரிமை கொண்டாடுகிறது. இதனால் அப்பிராந்தியத்தில் பதற்றம் நிலவுகிறது.

இதற்கு அமெரிக்கா உள்ளிட்ட மற்ற நாடுகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. இந்த நிலையில் அங்கு சீனாவின் கடற்படை போர் பயிற்சி மேற்கொண்டுள்ளது.

அதில்100 போர்க்கப்பல்கள், 50-க்கும் மேற்பட்ட போர் விமானங்கள், ஏராளமான ஏவுகணைகள் பயன்படுத்தப்படுகின்றன. மற்றும் பல்லாயிரக கணக்கான கடற்படை வீரர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இப்போர் பயிற்சி கடந்த சில நாட்களாக இங்கு நடந்து வருகிறது. இதனால் இங்கு பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகளுக்குசீன இராணுவ அமைச்சக செய்தி தொடர்பாளர் லியாங் யாங் விளக்கம் அளித்துள்ளார்.

அதில்சர்வதேச விதிமுறைகள் மற்றும் நடைமுறைகளுக்கு ஏற்ப சீன கடற்படை வழக்கமான போர்ப் பயற்சி மேற்கொண்டுள்ளது. இனி வரும் காலங்களில் இது தொடரும். எனவே சர்வதேச நாடுகள் தேவையின்றி தலையிடுவதை தவிர்க்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (3-7)

# கடாபியின் மகனுக்கு மரண தண்டனை

## மேலும் எட்டு பேருக்கும் தண்டனை

(டிரிபோலி)

லிபியாவில்1969-ம்ஆண்டு முதல் 2011-ம் ஆண்டு வரை கிளர்ச்சிப்படையினரால் வீழ்த்தப்படுகிறவரை சர்வாதிகாரியாக இருந்து ஆட்சி செய்தவர் கடாபி.

பதவியில் இருந்து விரட்டப்பட்டதை தொடர்ந்து அவர்கிளர்ச்சிப்படையினரால் பிடிக்கப்பட்டு, சுட்டுக்கொல்லப்பட்டார்.

அவரது மகன் சயீப் அல் இஸ்லாம். இவர்மீதும்மேலும் பலர் மீதும் 2011-ம் ஆண்டு நடந்த கிளர்ச்சியின்போது போர்க்குற்றம் செய்ததாக லிபிய நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

இந்தவழக்கில்விசாரணை நடத்திய நீதிமன்றம், சயீப் அல் இஸ்லாமுக்கும், மேலும 8 பேருக்கும் மரண தண்டனை விதித்து நேற்று முன்தினம் பரபரப்பு தீர்ப்பு அளித்தது.

வழக்கின் தீர்ப்புக்காக அவர் நீதிமன்றில் நேரில் ஆஜர்படுத்தப்படவில்லை. வீடியோ கான்பரன்ஸ் முறையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

கடாபி ஆட்சிக்காலத்தில் உளவுத்துறை தலைவராக இருந்த அப்துல்லா அல் செனோயுசி என்பவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தண்டிக்கப்பட்டவர்கள் இந்த தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (3-7)


**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
**உப அலுவலகம் ஆனைக்கோட்டை**
**ஆதன பெயர் மாற்ற அறிவித்தல்**

**மானிப்பாய் கிராம உப அலுவலகம்,**
**வட்டாரம் :- 08**
**ஆதன இலக்கம் : 25/29 (புதிய பதிவு)**
**காக்கைதீவு றோட்**

வட்டாரம் 08 காக்கைதீவு றோட், ஆதன இலக்கம் 25/29 இல் அமைந்துள்ள உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோவில்பற்று ஆனைக்கோட்டை இறை "பருத்தியடைப்பும் மண்ணிக் காடும்" என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 03 குளி 16.50 கொண்ட இவ்வாதனமானது சிவசம்பு அம்பிகைபாலன் ஆகிய இவர்களால் அறுதி உறுதி மூலம் சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டைய்ய சேர்ந்த ஜெகநாதன் பெண் லிங்கேஸ்வரி என்ப வருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் திரு.மா.தியாகராசா முகதாவில் நிறைவேறிய 3820 ஆம் இலக்க 22.06.2000 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். "பருத்தியடைப்பும் மண்ணிக் காடும்" நிலப்பரப்பு 03 குளி 16.50 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள் கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் ஜெகநாதன் பெண் லிங்கேஸ்வரி என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன். **தவிசாளர் : வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.**



**பணிநிலை வெற்றிடம்**

1. வரவேற்பாளர்
   - கல்வித்தகைமை O/L
   - ஆளுமை மிக்க இருபாலாரும்
2. விமான பற்றுச்சீட்டு உத்தியோகத்தர்
   - முன்அனுபவம் 2 வருடம் உள்ள இருபாலாரும்
   - A/L சித்தி
   - அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் டிப்ளோமா கற்கைநெறி
3. கணக்காளர்
   - 5 வருட முன் அனுபவமுள்ள இருபாலாரும்
4. மூலிகை சேகரிப்பாளர்
   ஆயுள்வேத வைத்தியர்களுடன் சேவையாற்றிய முன்அனுபவம் அல்லது ஆயுள்வேத மருந்துதயாரிப்பாளர்களுடன் வேலை செய்த முன் அனுபவம்.
5. உதவியாளர்
6. சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் இரண்டு வருட அனுபவம்.

**நேர்முகத் தேர்வு**

திகதி - 01.08.2015 மாலை 2.30 - 5.30 வரை
- 02.08.2015 காலை - 10.00 - 2.00 மணி

இடம் - தேசிய தொழில் வங்கி
இல. 128, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(C-1686)

தொலைபேசி இல : 071 092 0920 Email :- online@nationtravels.com


## ஒருநாள் கூட விடுமுறை எடுக்காமல் 12 வருடம் பாடசாலை சென்ற மாணவி



(லண்டன்)

இங்கிலாந்தின் பிளாக் பூல் நகரத்தைச் சேர்ந்த எமிலி பிளாட் (வயது-16) என்ற மாணவி, அனைத்து ஆசிரியர் மற்றும் பெற்றோரின் கனவை நிறைவேற்றிய நல்ல மாணவி என்ற பெயரை பெற்றுள்ளார்.

எமிலி தனது பன்னிரெண்டு ஆண்டு கால பாடசாலைப் படிப்பில் ஒருநாள் கூட விடுப்பு எடுக்காமல் பள்ளிக்கு சென்றிருக்கிறார்.

இதுபற்றி அவர் கூறும் போது 'நான் ஒன்றும் பெரிய சாதனைகள் செய்ய வில்லை. மாணவர்களுக்குரிய கடமையை சரியாக செய்தேன், அவ்வளவுதான்' என்கிறார் தன்னடக்கத்துடன்.

இவர் படித்த மோண்ட் கோமெரி பாடசாலையின் அதிபர் கூறுகையில், 'இந்த காலத்தில் விடுப்பே எடுக்காமல் எல்லா நாளும் வந்திருக்கும் எமிலி, எமது பாடசாலைக்கு பெருமை சேர்த்துளளார்.

இதன்மூலம் மற்ற மாணவர்களுக்கு உதாரணமாக இருக்கிறார். இவரைப்போன்று எல்லா பிள்ளைகளும் ஒழுங்காக பாடசாலைக்கு வர வேண்டும்' என்று கூறினார். (3-7)


**வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும் நன்றி நவிலலும்**

**சு.பொ.நடராஜா (அதிபர், அண்ணா தொழிலகம், இணுவில்)**



எமது குடும்பத்தலைவர் திரு.சு.பொ.நடராஜா அவர்களின் மறைவுச் செய்து கேட்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி தெரிவித்தவர்களுக்கும் மலர்மாலை சூடியோருக்கும் மலர் வளையம் வைத்தோருக்கும் மலர் அஞ்சலி செலுத்தியோருக்கும் இறுதிக் கிரியைகளின் போது கலந்து கொண்டு அனுதாபத்தை தெரிவித்தோருக்கும் இறுதி நிகழ்வின் போது அஞ்சலி உரை நிகழ்த்தியோருக்கும் எமது நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இறுதி அஞ்சலி செலுத்திய இணுவில் இந்துக் கல்லூரி மாணவ மாணவிகளுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பொது நூலகத்தினருக்கும் அறிவாலயத்தினருக்கும் எமது நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கின்றோம். எமது ஸ்தாபனத்தின் ஊழியர்கள் சகல பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், ஆசிரியைகள் உட்பட உறவினர்கள், நண்பர்கள் யாவருக்கும் எமது நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இறுதி நிகழ்வின் போது தமது இறுதி அஞ்சலி செலுத்திய பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள், வங்கி உத்தியோகத்தர்கள் மற்றும் பெரும் மக்கள் யாவருக்கும் எமது நன்றி அறிதலை தெரிவித்துக்கொள்கின்றோம்,

**அண்ணா குடும்பத்தினர்**

எமது தந்தையின் அந்தியேட்டி கிரியைகள் இன்று 30.07.2015 வியாழக்கிழமை கீரிமலை தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வையொட்டி நடைபெறும் மதியபோசன வைபவம் 02.08.2015 ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்திலும் இடம்பெறவுள்ளது. அவ் வைபவத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**இவ்வறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**அண்ணா குடும்பத்தினர்**
**இணுவில்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டமைப்பினால் செய்ய முடியாதவற்றை 100 நாட்களில் செய்துகாட்டியுள்ளோம்

### ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றில் பெரும்பான்மை பலத்துடன் இருந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினால் செய்ய முடியாதவற்றை நாம் 100 நாட்களில் செய்தோம் என அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

பெரும்பான்மை பலமில்லாத நிலையில் 100 நாட்களில் பல்வேறு விடயங்களை எம்மால் செய்ய முடிந்தது.


சில சட்ட மூலங்கள் மிகுந்த சிரமத்திற்கு மத்தியில் நிறைவேற்றிக் கொள்ளப்பட்டது.

மக்களுக்கு முக்கியமான சட்ட மூலங்களை நாம் நாடாளுமன்றில் கொண்டு வரும் போது, இன்று கூச்சலிடும் கூட்டமைப்பின் தலைவர்கள் நாடாளுமன்றில் போராட்டம் நடத்தினர்.

சட்ட மூலம் நிறைவேற்றப்படுவதனை தடுக்க முயற்சித்தனர்.

எனினும், நாம் மக்களுக்காக எமது கடமைகளை சரியான முறையில் செய்தோம் என அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற தேர்தல் பிசாரக் கூட்டமொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)




# ஜனாதிபதியின் அதிகாரங்களை கைப்பற்றும் ரணிலின் முயற்சியை தடுத்து நிறுத்தினோம்

### அமைச்சர் எஸ்.பி. கூறுகிறார்

(கொழும்பு)

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அதிகாரங்களை கைப்பற்றுவதற்கே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முயற்சித்தார். இதனை நாம் தடுத்து நிறுத்தினோம் என அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

கடந்த ஞாயிற்றுக்கிழமை கண்டியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே, அமைச்சரும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் கண்டி மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளருமான எஸ்.பி.திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றும் போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அதிகாரங்களை பறித்து அவையனைத்தையும் ரணில் கையிலெடுத்து ஜனாதிபதியை இந்நாட்டின் கோபல்லவாவாக மாற்ற முயற்சித்தார்.

இதனை நாம் தடுத்து நிறுத்தினோம். ஜனாதிபதியை எமது தலைவரை பாதுகாத்தோம். நிதிய மைச்சின் கீழ் இருக்க வேண்டிய மத்திய வங்கியின் நிர்வாகம் ரணிலுக்கு கீழே கொண்டு வரப்பட்டது. இதன் மூலம் பாரிய பிணை முறி மோசடி மேற்கொள்ள ப்பட்டது.

எமது கட்சி பிளவுபட்டு சீரழிந்து தேர்தலில் மாபெரும் தோல்வியை பெறும் என ஐ.தே.கட்சி கனவு கண்டது. மகிந்தவையும் மைத்திரியையும் பிரிக்க சதி செய்தது. ஆனால் ஐ.தே.கட்சியின் முயற்சி வெற்றிபெறவில்லை. இன்று எமது கட்சி ஒன்றுபட்டுள்ளது. மகிந்தவும் மைத்திரியும் இணைந்துள்ளனர். ஜனாதிபதித் தேர்தலில் நாம் தோல்வி கண்டோம். எனவே அத்தேர்தல் முடிந்த கையோடு மீண்டும் நாம் தேர்தலுக்கு சென்றால வெற்றி பெற முடியாது என்பதை தெரிந்து கொண் டோம்.

இந்த நிலையில் ஜனாதிபதி எமக்கு அழைப்புவிடுத்தார். அரசுடன் இணையுமாறு தேர்தலை ஒத்தி வைப்பதற்கு காலம் தாழ்த்துவதற்கு ஒரே மாற்று வழி இது என்பதை புரிந்து கொண்டு 100 நாள் ஆட்சிக்கு ஆதரவு வழங்கினோம்.

இந்த வியூகம் இன்று வெற்றி பெற்றுள்ளது. எமது கட்சி ஒன்று பட்டு தேர்தலுக்கு முகம் கொடுக்கின்றது. எமது கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்காக கிடைத்த நிதிகள் எமக்கு கிடைப்பதில்லை.

ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்திகள் நின்று போய்விட்டன. இதனால் மக்கள் மீண்டும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைகின்றனர். இன்று தேர்தலில் வெற்றி பெறும் எந்த விதமான சாதகத்தன்மையும் ஐ.தே. கட்சிக்கு இல்லை. எனவே எமது வெற்றி நிச்சயம் என்றும் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## போட்டியிடாத தேசியப் பட்டியலில் பெயரிடப்படாத எவருக்கும் நாடாளுமன்ற உறுப்புரிமை கிடையாது

### மஹிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

தேர்தலில் போட்டியிடாத மற்றும் தேசியப் பட்டியலில் பெயரிடப்படாதவர்கள் எவரும் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்படமாட்டார்கள் என தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். தேசியப் பட்டியலில் அந்தந்த கட்சிகளினால் பெயரிட்டு வெளியிடப்பட்டுள்ள உறுப்பினர்களைத் தவிர்ந்த வேறு எவரும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக தேசியப் பட்டியல் ஊடாக பதவி வகிக்க இம்முறை அனுமதிக்கப்படாது. தேர்தல் சட்டத்திற்கு அமைய இந்த விடயம் குறித்த சட்டங்கள் இம்முறை கடுமையாக அமுல்படுத் தப்படும்.

தேசியப்பட்டியலில் உள்ளடக்கப்படாத மற்றும் தேர்தலில் போட்டியிடாத சிலர் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இவ்வாறு தெரிவு செய்யப்படுவதனால், தேர்தல் ஆணையாளர் என்ற ரீதியில் பல்வேறு பிரசினைகளை எதிர் நோக்க நேரிட்டுள்ளது.

எனவே இம்முறை தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்யும் போது தேர்தல் சட்டங்கள் கடுமையாக அமுல்படுத்தப்படும் என தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார். (இ-7)

## கட்சியில் இருந்து விலக்கியமை கவலையளிக்கவில்லை-அர்ஜுன

(கொழும்பு)

தம்மை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து நீக்கிமை தொடர்பில் கவலை கொள்ளவில்லை என்று அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அவர்,

இதுவரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் ஒரு உறுப்பினராக இருந்தமைக்காக வருந்துவதாக தெரிவித்தார். தற்போது அந்த கட்சி ஒழுக்கமற்றவர்களால் கையேற்கப்பட்டுள்ளதாக ரணதுங்க தெரிவித்தார்.

சுசில் பிரேமஜயந்தவும் அநுர பிரியதர்சன யாப்பாவும் கொலையாளிகளுக்கும் போதைவஸ்து கடத்தல்காரர்களுக்கும் வேட்புரிமை வழங்கியுள்ள நிலையில் தாம் அந்தக்கட்சியில் இருந்து நீக்கப்பட்டமையானது சிறந்தது என்று ரணதுங்க தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இன்று பண்டாரநாயக்கவின் கொள்கைகளை பின்பற்றவில்லை. ஊழல் கொள்கைகளையே பின்பற்றுகிறது என்றும் அர்ஜுன குற்றம் சுமத்தினார். (இ-7)

## ஜனாதிபதியின் தீர்மானம் சரியானதே

### டிலான் பெரேரா தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தீர்மானம் சரியானதே என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஐந்து உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமையை இரத்து செய்ய எடுக்கப்பட்ட தீர்மானம் சரியானதே.

கட்சித் தலைவர் என்ற ரீதியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த தீர்மானத்தை எடுத்துள்ளார்.

கட்சியின் யாப்பு விதிகளுக்கு அமைய கட்சியின் தலைவரினால் கட்சி உறுப்பினர்களின் உறுப்புரிமையை ரத்து செய்ய முடியும்.

எனினும் கட்சியின் மத்திய செயற்குழு இந்த தீர்மானத்தை எடுத்திருந்தால், இந்த தீர்மானம் இன்னமும் ஜனநர்யக ரீதியானதாக அமைந்திருக்கும்.

மத்திய செயற்குழுவில் இது குறித்து யோசனை முன்வைக்கப்பட்டிருந்தால் நூற்றுக்கு 190 வீதம் ஏகமனதாக, ஐந்து பேரின் கட்சி உறுப்புரிமையை இரத்து செய்யுமாறு வலியுறுத்தப்பட்டிருக்கும்.

இதன்படி, ராஜித சேனாரட்ன, எம்.கே.டி.எஸ். குணவர்தன, அர்ஜுன ரணதுங்க, எஸ்.பி.நாவின்ன மற்றும் ஹிருனிகா பிரேமசந்திர ஆகியோர் கட்சியில் வகித்து வந்த



அனைத்து பதவிகளும் இரத்து செய்யப்பட்டுள்ளது என டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த ஐவரும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் போட்டியிடுகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 20ரூபா திருடிய நபருக்கு 50000 ரூபா ஆட்பிணை

20 ரூபா பணத்தை திருடிய நபர் ஒருவரை 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் நீதிமன்றம் விடுவித்துள்ளது. 20 ரூபா பணத்தை திருடிய நபர் ஒருவரை கொழும்பு கறுவாத் தோட்ட பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்து, கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பிலபிட் டிய எதிரில் நேற்று முன் தினம் முன்னிலைப்படுத்தினர். சந்தேக நபரை 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். 40 வயதான மொஹமட் பாரூக் மொஹமட் மிலான் என்ற சந்தேக நபரே இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கொழும்பு நகர மண்டபத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள தெவட்டகஹா பள்ளிவாசலின் உண்டியலில் 20 ரூபா பணத்தை திருடியுள்ளார்.

பள்ளியில் கடமையாற்றிய பாதுகாப்பு உத்தியோகத்தர் மொஹமட்னா பீர் என்பவர், சந்தேக நபரை பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

சந்தேக நபர் உண்டியலிலிருந்து பணத்தை களவாடும் காட்சிகள் சீ.சீ.ரீவி கமராவில் பதிவாகியுள்ளது.

சுவிங்கம் ஒன்றை ஈர்க்கில் ஒன்றில் குத்தி பணத்தை களவாடியுள்ளதாகவும், சந்தேக நபரிடமிருந்து 10 நாணயக் குற்றி ஒன்றையும் 10 ரூபா நாணயத்தாள் ஒன்றையும் மீட்டதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த திருட்டுச் சம்பவம் குறித்த வழக்கு ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி மீளவும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றவாளியாக இனங்காணப்பட்ட இளைஞனுக்கு மரணதண்டனை

## வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி தீர்ப்பளித்தார்

(குருமன்காடு)

**கடந்த 2006 ஆம் ஆண்டு இளைஞன் ஒருவனை சுட்டுக் கொலை செய்த குற்றத்திற்காக வவுனியா, செட்டிகுளத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவனுக்கு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிறேமசங்கர் மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.**

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் திகதி செட்டிகுளம், முகத்தான குளம் பகுதியில் உள்ள தனது வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த இளைஞன் ஒருவனின் வீட்டில் நுழைந்த சிலர் அதிகாலை 4.30 மணியளவில் துப்பாக்கி சூடு நடத்தி விட்டு தப்பிச் சென்றனர். இதனையடுத்து காயமடைந்த தியாகராசா திரிபுரதாசன் (பிரிவுராசன்- வயது 32) செட்டிகுளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மற்றும் அதனைத் தொடர்ந்து அநுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் கடந்த 2006 நவம்பர் மாதம் 29 ஆம் திகதி மரணமடைந்தார்.


இச் சம்பவத்தை நேரில் கண்ட மரணமடைந்த இளைஞனின் சகோதரி தியாகராசா மஞ்சுளா மற்றும் தாயார் தியாகராசா புனிதவதி ஆகியோர் வழங்கிய கண்ட சாட்சியத்தின் அடிப்படையிலும், மரணமடைந்த இளைஞனின் மரண வாக்கு மூலத்தின் அடிப்படையிலும் கைது செய்யப்பட்ட அழகன் சசிதரன், தியாகராசா குமார், தில்லையம்பலம் அருந்தவராசா ஆகியோருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டு வவுனியா நீதிவான் நீதிமன்றால் சட்டமாஅதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் 2009 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 16 ஆம் திகதி சட்டமா அதிபரினால் வவுனியா மேல் நீதிமன்றில் எதிரிகளுக்கு எதி ராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.


இவ் வழக்கில் இலங்கை சட்டகோவை 32 ஆம் பிரிவுடன் இணைத்து வாசிக்கப் படவேண்டிய 296 ஆம் பிரிவின் கீழ் கொலைக் குற்றம்சாட்டப்பட்டு வழக்கு இடம்பெற்று வந்தது.

இந்நிலையில் தியாகராசா குமார், தில்லையம்பலம் அருந்தவராசா ஆகிய 2ஆம், 3ஆம் எதிரிகள் வவுனியா மேல் நீதிமன்றினால் கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டதுடன், முதலாவது எதிரியாகிய அழகன் சசிதரன் (வயது-32) குற்றவாளியாக நேரில் கண்ட சாட்சியங்கள், மரண வாக்குமூலம் மற்றும் ஒப்புதல் வாக்குமூலங்கள் என்பவற்றினைக் கொண்டு குற்றவாளியாக இனங்காணப்பட்டு மரணதண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிறேமசங்கர் மரண தண்டனையை விதித்த போது நீதிமன்றத்தின் மின்விசிறிகள், மின்குமிழ்கள் அனைத்தும் அணைக்கப் பட்டு அனைவரும் எழுந்து நின்றனர். தீர்ப்பு எழுதி ஒப்பமிட்ட பேனாவை நீதிபதி முறித்து எறிந்தவுடன் நீதிமன்றம் கலைக்கப்பட்டு சிறிது நேரத்தின் பின் மீண்டும் வழக்கு விசாரணைகள் இடம்பெற்றது. மரணதண்டனை விதிக்கப்பட்டதும் குற்றவாளி நீதிமன்றில் கண்ணீர் விட்டு கதறியழுதார்.

இதேவேளை, இவ் வழக்கினை அரசு சார்பில் சட்டத்தரணி நிசாந் நாகரட்ணம் நெறிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-250)



ஞானம் பவுண்டேசன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகங்களுக்கு சென்ற 75 மாணவர்களுக்கு மாதாந்தம் 3 ஆயிரம் ரூபா உதவித் தொகை வழங்கும் நிகழ்வு அண்மையில் மேற்படி நிறுவனத்தின் கிளிநொச்சி திருநகரில் அமைந்துள்ள அலுவலகத்தில் நடைபெற்ற போது... (படங்கள்:-கிளிநொச்சி செய்தியாளர்-1)

## முன்பள்ளி விளையாட்டுவிழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அம்பாள் குளம் பகுதியில் அமைந்துள்ள அம்பாள் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுவிழா இன்று வியாழக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு பொது நோக்கு மண்டப மைதானத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட சிவில் பாதுகாப்பு திணைக்கள கட்டளை அதிகாரி மேஜர் சாகரவீரசிங்க கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளி/விவகானந்த வித்தியாலய அதிபர் திருமதி ஜெ.மாணிக்கவாசகம், கிளி/விக்னேஸ்வரா வித்தியாலய பிரதி அதிபர் தம்பு சேதுபதி, ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (2-271)

## சட்டவிரோத கசிப்பு உற்பத்தியால் குற்றச்செயல்கள் அதிகம்

### கட்டுப்படுத்துமாறு பொதுமக்கள் கோரிக்கை

கிளிநொச்சி அக்கராயன் குளம் பகுதியில் சட்டவிரோத கசிப்பு விற்பனை அதிகரித்து காணப்படும் நிலையில் இதனை கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி அக்கராயன்குளம் பிரதேசத் திற்குட்பட்ட சுபாஸ் குடியிருப்பு, கொங்காதரன் குடியிருப்பு, மணியங்குளம், அணைக்கட்டு வீதி ஆகிய பகுதிகளில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி, விற்பனை அதிகரித்து காணப்படுகின்றது.

இதனால் குறித்த கிராமங்களுக்கு வேறு இடங்களில் இருந்து மதுபானம் அருந்துவதற்கு அறிமுகமில்லாதவர்கள் வருவதுடன் இதனால் பல்வேறு குற்றச்செயல்கள் இடம் பெறும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, குறித்த விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனமெடுத்து சட்டவிரோத மதுபான உற்பத்தி, விற்பனைகளை தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2)

## குரு பூர்ணிமா தினம்

கிளிநொச்சி மாவட்ட சின்மய மிஷனின் ஏற்பாட்டில் குரு பூர்ணிமா தினம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு உழவனூர் பொது நோக்கு மண்டபத்தில் வதிவிட ஆச்சாரியார் சுவாமி சிவேந்திரஜி தலைமையில் கொண்டாடப்படவுள்ளது. இதில் சின்மய கிராமிய அபிவிருத்தி நிறுவனத்தினால் உதவி பெற்றுக் கொண்டிருக்கின்ற 98 மாணவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். இந் நிகழ்வில் குரு ஆராதனை, பஜனை, சத்சங்கம் ஆகியன நடைபெறும். அதனைத் தொடர்ந்து மாணவர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படுகின்ற சத்துணவுப் பொருட்களும் வழங்கப்பட்டு, மதிய போசனத்துடன் நிறைவுபெறும். (2)

## தரம்-5 மாணவர்களுக்கான முன்மாதிரிப் பரீட்சையும் விசேட செயலமர்வும்

(மல்லாவி)

தேசிய சேமிப்பு வங்கியின் மல்லாவி கிளையின் ஆதரவில் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் இருந்து நடப்பாண்டில் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான முன்மாதிரிப் பரீட்சை நாளை வெள்ளிக் கிழமை காலை 8.30 மணிக்கு மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலைகளில் நடைபெறும்.

இதேவேளை தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான விசேட செயலமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மு/அனிஞ்சியன் குளம் தமிழ் வித்தியாலயம், மு/ மயில் வாகனம் ஆரம்ப வித்தியாலயம், மு/கச்சிலைமடு அ.த.க.பாடசாலை, மு/மாங்குளம் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் நடைபெறவுள்ளதாகவும் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.எஸ்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார். (2-15)

## காட்டு யானைகள் தொல்லை; பயன்தரும் மரங்கள் நாசம்

முல்லைத்தீவு மாந்தை கிழக்குப்பிரதேசத்தின் மூன்று முறிப்பு, கொம்பு வைத்தகுளம் ஆகிய கிராமங்களில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதுடன் தமது பயிர்ச்செய்கைகளையும் அழித்து வருவதாகவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேசத் திற்குட்பட்ட மூன்று முறிப்பு, கொம்பு வைத்த குளம், வீரப்பிராயன்குளம், இளமருதன்குளம், மருதன்குளம் ஆகிய பகுதிகளில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்து காணப் படுகின்றது.

அத்துடன் ஊர்மனைகளுக்குள் புகும் காட்டு யானைகள் பெறுமதி வாய்ந்த பயன் தரு மரங்களையும் பயிர்ச்செய்கைகளையும் அழித்து வருவதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய போட்டிகள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் பொலிகை பாரதி விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியில் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள **பலாலி விண்மீன** விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து **நெடியகாடு இளைஞா** விளையாட்டுக்கழகமும் பி.ப 4.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் **திக்கம் இளைஞா** விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து **பாசையூர் சென் அன்ரனிஸ** விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

▬ ▬ ▬ ▬ ▬ ▬ ▬ ▬

யாழ்.உதைபந்தாட்ட லிக் அனுசரணையுடன் புத்தூர் ஸ்ரீ விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான காற்பந்து போட்டியில் இன்று வியாழக்கிழமை பி.ப3.45 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் **அரியாலை ஐக்கியம** விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து **றேஞ்சர்ஸ** விளையாட்டுக் கழகமும் மாலை 4.45 மணிக்கு நடைபெற்ற போட்டியில் **வல்வை** விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து **பாடுமீன** விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளது. (க)

# மாந்தை மேற்கு பிரதேச உதைபந்து கிண்ணத்தை சுவீகரித்தது விடத்தல்தீவு





மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட பிரதேசத்தின் கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்ட போட்டியில் விடத்தல் தீவு ஐக்கிய விளையாட்டுக் கழகமும் அந்தோனியார் புரம் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழகமும் இறுதிப் போட்டியில் மோதின.


கடந்ததிங்கட்கிழமைமாலை அடம்பன் பிரதேச சபை விளையாட்டுக் கழகம் 1:0 என்ற கோலின் அடிப்படையில் அந்தோனியார் புரம் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழகத்தை வெற்றியீட்டி இந்நடப்பாண்டுக்கான முதலாவது சிறந்த அணியாக தெரிவாகியுள்ளது.

இவ் இறுதியாட்டத்தில் விடத்தல் தீவு ஐக்கிய விளையாட்டுக்கழகம் சார்பாக ஸ். லிதர்சன் கோலினை பதிவாக்கினார். (க)

## விளையாட்டுப் போட்டிக்கான நிரல்படுத்தல் நிகழ்வு

உதய சூரியன் விளையாட்டு கழகத்தால் நடத்தப்படவிருக்கும் உதைபந்தாட்டம்,கரப்பந்தாட்டம் மற்றும் மென்பந்தாட்ட சுற்றுப் போட்டிகளுக்கான நிரலிடல்(றோ போடுதல்) நிகழ்வானது இன்று வியாழக்கிழமை மு.ப 10 மணிக்கு வத்திராயன் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது எனவே போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் கழகங்களை இதில் பங்குபற்றி கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (க)

# ரபேல் நடாலின் சாதனையை சமன் செய்தார் ஜோகோவிக்




களிமண் ஆடுகளத்தில் டென்னிஸ் ஆடுவதில் முடிசூடா மன்னனாக விளங்கியவர் ரபேல் நடால்.

இவர் 56 வாரங்கள் தொடர்ச்சியாக தரவரிசையில் முதலிடத்தில் இருந்தார். சமீப காலமாக நடால் ஆட்டத்தில் தொய்வு ஏற்பட்டுள்ளது. இதனால் முதல் இடத்தை செர்பியாவின் ஜோகோவிக் பிடித்துள்ளார்.

இவர் தற்போது 56 வாரங்கள் முதலிடத்தில் உள்ளார். இதன் மூலம் ரபேல் நடால் சாதனையை சமன் செய்துள்ளார். ஜோகோவிக்கின் அடுத்த இலக்கு 58 வாரங்கள் முதல் இடத்தில் இருந்த மெக் என்ரோயின் சாதனையை முறியடிப்பதுதான்.

ஜோகோவிக் சமீபத்தில் நடைபெற்ற விம்பிள்டன் டென்னிசில் பெடரரை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார். அதிக வாரங்கள் முதலிடத்தில் இருந்த வீரர்கள் பட்டியலில் ரோஜர் பெடரர் முதலிடத்தில் (237 வாரங்கள்) இருக்கிறார். 160 வாரங்களுடன் அமெரிக்காவின் ஜிம்மி கானர்ஸ் 2 ஆவது இடத்தில் உள்ளார். (க)

# தென்னாபிரிக்க அணியின் முன்னாள் தலைவர் கிளைவ் ரைஸ் மரணம்



தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் கிளைவ் ரைஸ் உடல் நலக் குறைவால் மரணமடைந்துள்ளார்.

66 வயதான கிளைவ் ரைஸ் மூளை,புற்றுநோயால் பாதிக்கப்பட்டு வந்தார். இதற்கு சிகிச்சை பெற கடந்த மார்ச் மாதம் இந்தியா சென்றிருந்தார்.


தொடர்ந்து புற்று நோயால் பாதிக்கப்பட்டு வந்த அணித்தலைவர் கிளைவ் ரைஸ் கடந்த செவ்வாய்க்கிழமை கேப்டவுன் வைத்தியசாலையில் மரணமடைந்தார்.

சிறந்த சலகதுறை ஆட்டக்காரரான கிளைவ் ரைஸ் இனவெறி காரணமாக தென்னாபிரிக்கா அணிக்கு தடைவிதிக்கப்பட்டிருந்த காலத்தில் தான் கிரிக்கெட்டில் அறிமுகமானார். இதனால் தென்னாபிரிக்க அணிக்காக மூன்று ஒரு நாள் போட்டிகளில் மட்டுமே விளையாடியுள்ளார்.

ஆனால் அவர் 482 முதல்தர போட்டிகளில் விளையாடியுள்ளார்.

டிரான்ஸ்வால், நடால் மற்றும் நாட்டிங்காம்ஷைர் அணிக்காக விளையாடி 26331 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

மேலும், 930 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார். (க)









அரியாலை சனசமூக நிலைய 66 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு அமரர். மாணிக்கம் துரையப்பா ஞாபார்த்தமாக குடும்பத்தினர் அனுசரணையில் இடம்பெற்ற வடமாகாண ரீதியிலான பெண்களுக்கான 10 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டியின் நிகழ்வுகள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஏமாற்றாதே ஏமாற்றாதே
ஏமாறாதே ஏமாறாதே.
- கண்ணதாசன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# இனப்பிரச்சினைச் சீவியத்தில் இலங்கையின் அரசியல் வாழ்வு

இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து இனவாதம் என்பதே முதன்மைப் பொருளாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

மக்களைக் கல்வி, பொருளாதாரத் துறைகளில் முன்னேற்றி அதனூடாக நாட்டை அபிவிருத்தி செய்தல் என்பதை விடுத்து,

இனவாதத்தின் ஊடாக மக்களை உசுப்பேத்தி அதனூடாக அரசியல் அதிகாரங்களை அனுபவிக்கின்ற கலாசாரம் இந்த நாட்டுக்கு மிகப்பெரிய சாபக்கேடு.

இலங்கையின் தென்பகுதியைப் பொறுத்தவரை, பேரினவாத அரசியல்வாதிகள் சிங்கள மக்களின் மனங்களில் தமிழர்கள் தொடர்பில் எதிர்மாறான கருத்துக்களையே விதைத்துள்ளனர்.

இந்த விதைப்பு காலத்துக்குக்காலம் நடைபெறும் தேர்தல்கள் மூலமாக வளர்க்கப்பட்டு வருகிறது.

ஒட்டுமொத்த இலங்கையிலும் தமிழர்களுக்கு உரிமை கொடுக்கக் கூடாது என்ற வாதங்களால் சிங்கள மக்களும்; சிங்களவர்கள் எந்த உரிமையும் தர மாட்டார்கள் என்றவாறு தமிழர் பிரதேசங்களிலும் விவாதம் நடக்கின்றது.

இந்த விவாதம் 67 வருடங்களாகத் தொடர்ந்து நீடிப்பதற்குள் அரசியல்வாதிகளின் உசுப்பேத்தல் மிக உச்சமாக நடைபெறுவது உறுதியாகின்றது.

தென்பகுதியில் தமிழ் மக்களுக்கு எதிரான கருத்துக்களை சிங்கள அரசியல்வாதிகள் விதைக்கும் அதேநேரம், தமிழர் பிரதேசங்களில் தத்தம் அரசியல் இலாபங்களுக்காக தமிழ் அரசியல்வாதிகள் மக்கள் நம்பக்கூடிய வகையில் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆக, இலங்கை பூராகவும் இனப்பிரச்சினையை மையமாக வைத்த அரசியலே; அரசியல்வாதிகளின் சீவியத்துக்கு உதவுகிறது. இந்நிலைமை இருக்கும் வரை இலங்கைத் திருநாட்டுக்கு எந்த விமோசனமும் கிடையாது.

அப்படியானால் இலங்கைக்கு விமோசனமே இல்லையா? என்ற கேள்வி எழும். இங்குதான் அறிவியல் பிரவாகம் என்ற விடயம் முன்எழுகிறது.

அதாவது அரசியல்வாதிகள் யாராக இருந்தாலும் அவர் சொல்வது என்ன? முன்னர் சொன்னது என்ன? செய்தது என்ன? செய்ய இருப்பது என்ன? என்று ஆராய்வது மக்களின் முதற்கடமையாகிறது.

நேர்மையற்றவர்களை அரசியலுக்கு அனுப்பினால் நிலைமை என்னவாகும் என்பதை மக்கள் முதலில் புரிந்து கொள்ளவேண்டும். இந்தச் செய்தி தனித்து தமிழ் மக்களுக்கானதல்ல. இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அனைத்துக் குடிமக்களுக்கும் ஆனதாகும்.

மக்கள் அரசியலில் தெளிவு பெறாதவரை அரசியல்வாதிகள் தங்களது ஏமாற்று நாடகத்தை தொடர்ந்து அரங்கேற்றிக் கொண்டே இருப்பர். அவர்களின் நாடகங்கள் வெவ்வேறு வழிகளில் அரங்கேறினாலும் நாடகத்தின் முழுமையான நோக்கம் மக்களை ஏமாற்றுவதாகும்.

ஆக, அரசியல் சார்ந்த அறிவுப் பிரவாகத்தில் மக்களை வழிப்படுத்த நாட்டின் புத்திஜீவிகள் முன்வர வேண்டும். இது புத்திஜீவிகளின் தலையாய கடமை என்பதை அவர்கள் ஒருபோதும் மறந்து விடக்கூடாது.

நவீன உலகின் பயணம்; விஞ்ஞான, தகவல் தொழில்நுட்ப, புத்துருவாக்கத்தின் உச்சத்தைத் தொடுவதற்கானதாக இருக்க, இலங்கையில் இனவாதமும் மதவாதமுமே இன்னமும் பேசுபொருள் என்பதாக இருந்தால் பாவம் இலங்கை மக்கள் என்று மட்டுமே மற்றைய நாட்டு மக்கள் கூறிக்கொள்வர்.

ஆகையால் இனப்பிரச்சினையில் அரசியல் சீவியம் நடத்துவதை முற்றாகத் தடுக்கக்கூடியவர்கள் இலங்கை மக்கள் மட்டுமே என்பதை இவ்விடத்தில் கூறித்தானாக வேண்டும்.

# மீற்றர் வட்டி வழங்குபவர்கள் மீது கடும் சட்டநடவடிக்கைக்கு பணிப்பு

## நீதிபதி கணேசராஜா பிறப்பிப்பு

(பருத்தித்துறை)

மீற்றர் வட்டி வழங்குபவர்கள்மீது கடுமையான சட்டநடவடிக்கை எடுக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி மா.கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

மீற்றர் வட்டிக்காரர்களினால் பல்வேறு தொல்லைகளுக்குள்ளாகி ஊரையும் வீட்டையும் கைவிட்டு வேறு இடங்களில் குடியிருக்க நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள் தொடர்பாக நீதிமன்றுக்கு தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

இதில் முக்கிய வங்கிகளில் பணிபுரியும் உத்தியோகத்தர்களும் சம்பந்தப்பட்டிருக்கின்றனர். அவர்களின் தொலைபேசி இலக்கங்கள் உட்பட ஏனைய விபரங்கள் நீதிமன்றுக்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

அத்துடன் சில மீற்றர் வட்டிக்காரர்கள் தரக்குறைவாக நடப்பதுடன் உயிரச்சுறுத்தலையும் விடுத்துள்ளனர்.

இதனால் சட்டவிரோதமான இந்த மீற்றர்வட்டி வழங்கும் செயற்பாட்டை உடனடியாககட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருமாறு பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி மா. கணேசராஜா உத்தரவிட்டுள்ளார். (இ-3)

# உரிமை கோரப்படாத சடலம் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் உரிமை கோரப்படாத நிலையில் சடலம் ஒன்று காணப்படுவதாக யாழ்.வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி கே.நந்தகுமாரன் தெரிவித்துள்ளார்.

நெல்லியடி வடக்கைச் சேர்ந்த அ. நீக்கிலாப்பிள்ளை தோமஸ் (வயது 70) என்பவரது சடலமே இவ்வாறு உரிமை கோரப்படாத நிலையிலுள்ளது.

கடந்த ஜூன் மாதம் 19ஆம் திகதி குறித்த நபர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்துள்ள நிலையில் இதுவரை இச்சடலமானது உரிமை கோரப்படவில்லை.

எனவே இச்சடலத்துக்கு உரித்துடைய உறவினர்கள் சடலத்தைப் பொறுப்பேற்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-5)

# மெல்லத் தேர் நகருதம்மா...

வண்ணத்தேர் அசைந்துவர
அன்னையவள் அமர்ந்துவர
அடியவர்கள் இருபுறமும்
அருள்வேண்டி வடம் பிடிக்க
வேப்பந்திடல் வீதியிலே
மெல்லத்தேர் நகருதம்மா
தேரோடி வருகையிலே
மாரியவள் அருள்கூடும்
நாடிவந்த பக்தர்களுக்கு
நாளும் வரம் கூடிவரும்
பார்த்துக்களித்திடவே
பாவவினை ஓடிவிடும்

-சிரபுரத்தான்: மண்டைதீவு

*(மண்டைதீவு வேப்பந்திடல் ஸ்ரீ முத்து மாரி அம்மனின் தேர்த்திருவிழாவை ஒட்டி இக் கவிதை வெளிவருகிறது.)*

# அறநெறிப் பாடசாலைகளுக்கு இலவச அப்பியாசப் புத்தகங்கள்

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் 60வது ஆண்டு நிறைவையொட்டி யாழ்மாவட்டத்தைச் சேர்ந்த மாமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு அழைக்கப்பட்டுள்ள 60 அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு மாமன்றம் இலவசமாக அப்பியாசப் புத்தகங்களை விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

நல்லூர் கோயில் வீதியில் அமைந்துள்ள யாழ்.பணிமனையில் இந்நிகழ்வு நாளை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தியாவிலிருந்து மாமன்றத்தின் இந்து ஆராய்ச்சி மாநாட்டுக்காக விசேடமாக வருகை தரும் தருமபுர ஆதீன குரு முதல்வர் ஸ்ரீமத் மௌனகுமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசப் புத்தகங்களை வழங்குவார்.

இந்நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)

# இறுதிக்கூட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான இறுதிக்கூட்டம் இன்று வியாழக்கிழமை தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

தேர்தல் ஆணையாளர் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் உதவி தெரிவத்தாட்சி அலுவலர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-9)

# சத்திய தரிசனம்



## எல்லாம் தெரிந்தவர் இல்லை

❖ பிறர் கூறும் பாராட்டு மொழிக்காக ஏங்குவதும், பழிச் சொல்லுக்காக வருந்துவதும் உயர்ந்த பண்புகள் அல்ல.

❖ எல்லாம் தெரிந்தவர் என்று ஒருவர் உலகில் யாரும் கிடையாது. ஒவ்வொருவருக்கும் ஒரு திறமை இருக்கவே செய்யும்.

❖ கடமையே கடவுள். அதற்காகப் பணியாற்றுவதே வழிபாடு. வாழ்வில் ஒரு விநாடியைக் கூட வீணாக்காமல் கடமையாற்றுங்கள்.

❖ கடவுளை மனக்கண் முன் நிறுத்தி, அன்புடன் பிரார்த்தனை செய்யுங்கள். நிச்சயம் உங்களுக்காக அவர் செவி சாய்ப்பார்.

# ஆரம்ப நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வட்டு கிழக்கு சித்தன்கேணிப் பகுதியில் அமைந்துள்ள அந்திரான் ஜன சக்தி தோற்பொருள் உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் இறப்பர் பாதணிகள் உற்பத்தி செய்யும் ஆரம்பநிகழ்வு இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (இ-5)



# அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத்தகவல்கள்

## தட்சிணாமூர்த்தியின் ஐந்து விரல்களில் தத்துவ வித்தைகள் என்னென்ன?

கட்டைவிரல்– கடவுள். கையைப் பற்றி கொஞ்சம் யோசிப்போம். ஐந்து விரல்கள் இருக்கின்றன. கட்டைவிரல் தனியாக இருக்கிறது. கையில் கட்டைவிரலே முக்கியம். இயக்கத்துக்கு இது அவசியம். இது ஈசனைக்குறிக்கும் விரல். இறைவனின் அடையாளம். கட்டைவிரல் இல்லாவிட்டால் இயக்கமில்லை. கடவுள் இல்லாவிட்டாலும் எதுவுமில்லை.

ஆட்காட்டிவிரல்– அடுத்த மூன்று மலங்களைக் குறிக்கும்.உயிரைப் (ஆன்மாவை) பிடித்திருக்கும் அழுக்குகள் அவை. செம்பிலே களிம்பு இருக்கும். எது முதலில் வந்தது? செம்பு என்ற உலோகம் உருவாகும்போதே களிம்பு வந்துவிடுகிறது. இதுபோலவே ஆன்மாவுடன் மலமும் இருக்கிறது. ஆணவம், கன்மம்,மாயை என்பவை மும்மலங்கள்.

அமெரிக்க நகரமொன்றில் ஒருநாள் ஒரு கணக்கெடுப்பு எடுத்தார்களாம். மக்கள் அதிகமாகப் பயன்படுத்தும் வார்த்தை எது? என்பதே ஆய்வுப் பொருள். தொலைபேசிப் பேச்சுக்கள் பதிவு செய்யப்பட்டன. ஆய்வு நடந்தது. அதிகம் பயன்படுத்தியதாக அறியப்பட்ட சொல் நான் என்ற சொல்தான். அமெரிக்காவில் மட்டுமல்ல அச்சிறுப்பாக்கத்தில் ஆய்வு இருந்தாலும் அதிகம் பேசப்படுவது நான், நான் நான்தான். நான் என்பதே ஆணவமலம். இது அகந்தை மலங்களில் மூத்தது. அதனால்தான் அந்த விரல் உயர்ந்திருக்கிறது.

இது மூல (அடிப்படை) மலம். எனவே முதன்மையான மலம் என்பார்கள். நான் என்னும் அகப்பற்று எனது என்னும் புறப்பற்றும் ஆணவ மலமாகும்.

மோதிரவிரலும் சுண்டு விரலும்– கடவுள் கருணையாளன் அல்லவா? ஏனைய மலங்களாலேயே மூல மலத்தை அகற்ற வழிகாட்டுகிறான். நல்ல காரியங்கள் செய்தாலும் அசுப காரியமானாலும் தர்ப்பை தரிக்கும் விரல்தான் மோதிரவிரல். இது கன்மமலத்தின் அடையாளம்.

மூன்றாவது விரல் சுண்டுவிரல். இது மாயையின் அடையாளம். கல்யாண நிகழ்வுகளில் மணப்பெண்ணை சுண்டுவிரல் பற்றி மாப்பிள்ளை அழைப்பான் மாயையினைக் குறிப்பதனைக் காட்டுவதாகும்.

சிவபோகமாம் சாரம்–ஆன்மா, ஆணவம் முதலானவற்றில் இருந்து நீங்கி சிவானந்தப் பெருங்கடலில் திளைத்துச் சிவத்தோடு ஒன்றிய நிலையில் விளைவது சிவபோகமாகும். இதனை உள்ள மலம் நீங்கிச் சிவானந்த வெள்ளம் திளைத்து அதுவாய் ஓங்கும் ன்று முத்திரிச்சம் விளங்கும். இதனைச் சிவசாரம்,பரசுகம், சிவானந்தம் என்ற பெயர்களால் ஞானநூல்கள் குறிக்கும். சிவபோகமாகிய சாரத்தைக் கூறும் நூல் சிவபோகசாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாமின் இறுதிக்கிரியை இன்று இலட்சக்கணக்கானோர் பங்கேற்பு

## பிரதமர் மோடி பங்கேற்கிறார்

(டில்லி)

**மாரடைப்பால் உயிரிழந்த இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் இறுதிச் சடங்கு அவரது சொந்த ஊரான இராமேஸ்வரத்தில் இன்று காலை நடைபெறவுள்ளது. இவ்விறுதிச் சடங்கில் பிரதமர் நரேந்திரமோடி உட்பட அயல் நாடுகளிலிலிருந்தும் அரசியல் பிரமுகர்கள் கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அப்துல்கலாமின் இறுதிச் சடங்கு இன்று நடைபெறுவதையொட்டி தமிழக்தில் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.**



மாணவர்கள் அஞ்சலி


ஜனாதிபதி அஞ்சலி

நேற்று டில்லிக்கு கொண்டு செல்லப்பட்ட அப்துல் கலாமின் பூதவுடலுக்கு குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி, பிரதமர் நரேந்திர மோடி, துணை குடியரசுத் தலைவர் ஹமீது அன்சாரி, டில்லி முதல்வர் அர்விந்த் கேஜ்ரிவால், துணை முதல்வர் மணீஷ் சிசோடியா ஆகியோர் பாலம் விமான தளத்துக்குச் சென்று கலாமின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர். டில்லி பொலிஸ் கமிஷனர் பி.எஸ். பாஸி, விமானப் படை தளபதி அரூப் ரஹா, கடற்படைத் தளபதி ஆர்.கே.தோவல், இராணுவ தலைமைத் தளபதி தல்பீர் சிங் ஆகியோர் மலர்வளையம் வைத்து வீரவணக்கம் செலுத்தினர்.

அதேவேளை, கலாமின் உடல் ராணுவ வாகனத்தில் ஏற்றப்பட்டு, பாலம் விமான நிலையத்தில் இருந்து 12 கி.மீ. தொலைவில் எண் 10 ராஜாஜி மார்க்கில் உள்ள அவரது வீட்டுக்கு கொண்டு செல்லப்பட்டது. வழிநெடுகிலும் ஆயிரக் கணக்கான மக்கள் சாலையின் இருபுற மும் கூடி நின்று கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

**பிரபலங்கள் இறுதி அஞ்சலி**

மேலும் வீட்டில் வைக்கப்பட்டிருந்த கலாமின் உடலுக்கு முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, துணைத் தலைவர் ராகுல் காந்தி, சமாஜ்வாதி தலைவர் முலாயம் சிங், உத்தரப் பிரதேச முதல்வர் அகிலேஷ் யாதவ், மத்திய அமைச்சர்கள் ராஜ்நாத் சிங், மனோகர் பாரிக்கர், ஹர்ஷவர்தன், ஜிதேந்திர சிங், ரவிசங்கர் பிரசாத், பாஜக தலைவர் அமித்ஷா, மூத்த தலைவர் அத்வானி, கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர், முன்னாள் பிரதமர் தேவகௌவுடா மற்றும் எம்.பிக்கள் உட்பட ஏராளமான முக்கிய பிரமுகர்கள் மலரஞ்சலி செலுத்தினர்.

மாலை 4 மணி முதல் கலாமின் உடலுக்கு பொதுமக்கள் அஞ்சலி செலுத்த அனுமதிக்கப்பட்டனர். ஆயிரக்கணக்கான மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து அந்த மாமனிதருக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

**இன்று இறுதிச் சடங்கு**

அப்துல் கலாமின் உறவினர்களின் கோரிக்கையை ஏற்று, அவரது சொந்த ஊரான ராமேஸ்வரத்தில் இறுதிச் சடங்குகளை நடத்த மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி, கலாமின் உடல் டில்லியில் இருந்து நேற்று பிற்பகல் விமானம் மூலம் இராமேஸ்வரம் கொண்டு வரபபட்டது. இராமேஸ்வரம் பேருந்து நிலையம் அருகில் உள்ள தனியார் மைதானத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக கலாமின் உடல் வைக்கப்பட்டது. நேற்று பிற்பகல் 2 மணி முதல் இரவு 8 மணி வரை பொதுமக்கள் அஞ்சலி செலு த்தினர்.

இதைத் தொடர்ந்து இன்று காலை 10.30 மணி அளவில் இறுதிச் சடங்கு நடைபெறுகிறது. இராமேஸ்வரத்தில் இறுதிச் சடங்குக்கான ஏற்பாடுகளை ராமநாதபுரம் மாவட்ட நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது. இறுதிச் சடங்கில் பிரதமர் பங்கேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், முக்கிய பிரமுகர்கள் பலர் வரக் கூடும் என்பதால் பாதுகாப்பு உள்ளிட்ட ஏற்பாடுகளும் தீவிரமாக செய்யப்பட்டு வருகின்றன.

**மோடி வருகிறாரா?**

அப்துல் கலாமின் உடலுக்கு டில்லியிலேயே பிரதமரும், குடியரசுத் தலைவரும் அஞ்சலி செலுத்திவிட்டனர். இருப்பினும் இறுதி நிகழ்ச்சியில் பங்கேற்க மோடி இராமேஸ்வரம் வருவார் என்று கூறப்படுகிறது. இதை கலாமின் பேரன் ஷேக் சலீமும் உறுதிப்படுத்தியுள்ளார். இதுகுறித்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தெரிவிக்கையில், "முக்கிய பிரமுகர்கள் பலர் வருகை தர உள்ளனர். எனவே, அங்கு 5 ஹெலி இறங்கும் தளங்கள் தயார் நிலையில் வைக்கப்படும். 3 நாட்களுக்கு இராமேஸ்வரம் தீவில் மட்டும் ஆயிரம் பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படுவர்'' என்றார்.

**தமிழகத்தில் இன்று பொது விடுமுறை**

தமிழக பொதுத் துறை வெளியிட்டுள்ள அரசாணையில் முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் ஷில்லாங்கில் 27 ஆம் திகதி மரணமடைந்தார். அவரது உடல் இராமேஸ்வரத்தில் அடக்கம் செய்யுப்படும் 30 ஆம் திகதி பொது விடுமுறை அளிக்க அரசு முடிவெடுத்துள்ளது. இதன்படி, 30 ஆம் திகதி அனைத்து கல்வி நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுக்கும் பொது விடுமுறை அளிக்கப்படுகிறது.

**இஸ்லாமிய முறைப்படி இறுதிச் சடங்கு:**

அப்துல் கலாமின் உடல், இராமேஸ்வரத்தில் இஸ்லாமிய முறைப்படி இன்று வியாழக்கிழமை நல்லடக்கம் செய்யப்படவுள்ளது. (3-7)

பாரதச் செய்தி

# அப்துல்கலாம் இறப்பதற்கு முன்னரே படத்திற்கு மாலை அணிவித்ததால் சர்ச்சை

(டில்லி)

இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவரான அப்துல் கலாம் காலமாவதற்கு கடந்த சில தினங்களுக்கு முன்னர் அவருடைய புகைப்படத்திற்கு ஜார்க்கண்ட் மாநிலத்தின் கல்வி அமைச்சரான நீரா யாதவ் மாலை அணிவித்து சர்ச்சையில் சிக்கிக் கொண்டுள்ளார்.

அவர் மாலை போட்ட நேரமோ என்னவோ உண்மையிலேயே அப்துல் கலாம் இறக்க நேரிட்டுள்ளது. ஜார்க்கண்ட் மாநிலம் கோதர்மா என்ற இடத்தில் நடந்த நிகழ்ச்சியில்தான் இப்படி நடந்து கொண்டார் அமைச்சர் நீரா யாதவ்.

சம்பந்தப்பட்ட நிகழ்ச்சியானது ஒரு பாடசாலையின் ஸ்மார்ட்



வகுப்புகள் தொடக்க விழாவாகும்.

இதற்கு சிறப்பு விருந்தினராக நீராயாதவ் அழைக்கப்பட்டிருந்தார். நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்பு அவர் அப்துல் கலாமின் படத்திற்கு மாலை போட்டு வணங்கினார். அவர் மட்டுமல்ல, பாஜக எம். எல்.ஏ மனீஷ் ஜெய்ஸ்வால், பாடசாலை முதல்வர் ஆகியோரும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு படத்தை வணங்கினர். யாருமே இந்த செயல் தவறு என்று எடுத்துச் சொல்லவில்லை என்பது தான் வேதனையானது. இந்த சம்பவம் பெரும் கண்டனத்தை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து நீரா யாதவ், "பெரிய மனிதர்கள், மக்களால் மதிக்கப்படும் தலைவர்களுக்கு இது போல மரியாதை செலுத்தப்படுவது வழக்கம்தான்.

கலாம் மாபெரும் விஞ்ஞானி. எனவேதான் அவருக்கு மாலை அணிவித்து வணங்கினேன்" என்று விளக்கம் அளித்திருந்தார்.

இந்நிலையில் அச்சம்பவத்தின் சர்ச்சை அடங்காத நிலையில், நிஜமாகவே அப்துல் கலாம் இவ்வுலகை விட்டு பிரிந்து சென்ற சம்பவம் எல்லோரையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. (3-7)

# ஐரோ.ஒன்றிய பாராளுமன்றை அசர வைத்த அப்துல் கலாம்

இந்திய குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் ஒரு தடவை ஐரோப்பிய பாராளுமன்றில் உரையாற்றுவதற்காக அழைக்கப்பட்டிருந்தார்.

ஐரோப்பிய பாராளுமன்றின் வெள்ளி விழாவில் பங்கேற்று உரையாற்றிய அப்துல்கலாம் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று விழித்து இன்றைக்கு 3 ஆயிரம் ஆண்டுகளிற்கு முன்னர் தமிழுலகம்உவந்தளித்த புறநானூறின் வரிகளை விளக்கிக் கூறினார். அதில் அவர் எல்லா ஊரும் எமது ஊரே எல்லா மக்களும் எமது உற்றாரும் உறவினருமே. இது எம்மை ஒரு குடும்ப அங்கத்தவர்கள் என்ற வரையறைக்குள் கொண்டு வந்து விடுகிறது.

ஒரு குடும்பத்தில் நிலவுகின்ற அமைதி சமூகத்தின் அமைதிக்கு வழிவகுக்கிறது. ஒரு சமூகத்தின் அமைதி ஒரு நாட்டின் அமைதிக்கு வழிவகுக்கிறது. நாடுகளின் அமைதி நிலை உலகம் அமைதியில் திளைக்க வழிகோலுகிறது என்றும் தொடர்ந்தும் யாதும் ஊரே யாவரும் கேளீர் என்று கூறி அப்துல் கலாம் தனது உரையை முடித்துக்கொண்டார்.

பாராளுமன்றில் பலத்த கரகோசம். அது அடங்குவதற்கு நீண்ட நேரம் எடுத்தது. அறிவிப்பாளர் நாங்கள் இது பற்றி ஒரு போதும் கேள்விப்பட்டதில்லையே (We have ever heard like this) என்று வியப்பில் ஆழ்ந்தவராக திரும்பத் திரும்ப கூறிய வண்ணமிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை வருகிறார்...

தபுரம் மற்றும் தென்பகுதி கரையோர பிரதேசங்களுக்கு பயணம் செய்ய உள்ளனர்.

ரொனி பிளேயர் ஓகஸ்ட் மாதம் 24ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ஆகியோரை சந்திக்க உள்ளார்.

அன்றைய தினம் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் 10 ஆவது சிரார்த்த தினத்தை முன்னிட்டு, கதிர்காமர் நிலையத்தில் நடைபெறும் நிகழ்வில் பிளேயர் சொற்பொழிவு ஆற்றவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (செ-11)

## சம்பந்தன் உட்பட...

நான்கு வேட்பாளர்களுக்கு இந்த விசேட சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி இத்தேர்தலில் போட்டியிடும் அரசியல் அமைப்புப் பேரவையின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு உத்தியோக பூர்வ வாகனங்கள், பாதுகாப்பு ஆகியனவற்றை வழங்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் உத்தரவிட்டுள்ளார்.

இதன் பிரகாரம் அரசியல் அமைப்புப் பேரவையின் தலைவர் சமல் ராஜபக்ஷ, உறுப்பினர்களான சம்பந்தன், முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா மற்றும் ஜோன் செனவிரட்ன ஆகியோருக்கு பாதுகாப்பு மற்றும் வாகனங்கள் வழங்கப்படவுள்ளது.

அதேவேளை, இத்தேர்தலில் போட்டியிடும் முன்னாள் ஜனாதிபதி, அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் உள்ளிட்டவர்களைத் தவிர்ந்த ஏனைய வேட்பாளர்களுக்கு பாதுகாப்போ வாகன்ங்களோ வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## யாழ்.பரீட்சை...

முறைகேடுகள் மற்றும் வன்முறை சம்பவங்கள் இடம்பெறாது தடுப்பதற்காக பாடசாலைகளுக்கு 24 மணிநேர பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது.

அதேபோல பரீட்சைக்கான வினாத்தாள்களை எடுத்து வரும்போதும் பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுவர்.

அத்துடன் குறித்த காலப்பகுதியில் பரீட்சை எழுதும் மாணவர்களை குழப்பும் வகையில் வேட்பாளர்கள் பிரசாரத்தை மேற்கொள்ளல் மற்றும் ஒலிஎழுப்புதல் தடைசெய்யப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-11)

## அமெரிக்க முகாம்...

கவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவராக வரவுள்ளவரும், அமெரிக்க படைகளில் ஆசிய பசுபிக் பிராந்திய கட்டளை தளபதியும் பிராந்தியத்தில் உள்ள முகாம்களை பாதுகாக்க இலங்கையுடன் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் நிலைமை வந்துள்ளதாக கூறியுள்ளார்.

திருகோணமலையில் அமெரிக்க இராணுவ முகாம் ஒன்றை ஏற்படுத்த ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் இணக்கத்தை ஏற்படுத்தியிருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் காரணமாக தெறகில் அடிப்படைவாதத்துக்கு வாய்ப்பு கிடைக்கும் எனவும் அவர் கூறியுள்ளார். (செ-11)

## ஆதரவு வழங்க...

மேற்படி அறிவிப்பு குறித்து முதலமைச்சர் வெளியிட்டுள்ள அறிகையின் முக்கிய பகுதிகள் வருமாறு,

என் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே!

நான் வெளிநாடுகள் சென்றசமயத்தில் தான் பொதுத் தேர்தல் நியமிக்கப்பட்டது. நான் தற்பொழுது திரும்பி வந்துள்ளேன். தேர்தலில் உங்கள் பங்களிப்பு என்ன என்று பலரும் என்னைக் கேட்கின்றார்கள். யாழ் தேர்தல் தொகுதியில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இருந்து பத்துப் பேர் ஏழு ஆசனங்களுக்காகவும் வன்னியில் ஒன்பதுபேர் ஆறு ஆசனங்களுக்காகவும் போட்டியிடுகின்றனர். தற்போதையதேர்தல் முறைமையின் கீழ் ஒரே கட்சிக்குள்ளேயே விருப்பு வாக்குகளைப் பெற போட்டியாளர்களிடையே முரண்பாடுகள் எழுவது எதிர்பார்க்கப்படுவதொன்றே.

வடமாகாணசபைத் தேர்தலில் முதலமைச்சர் பதவிக்காக 2013ஆம் ஆண்டில் பொதுவேட்பாளராக நான் நிறுத்தப்பட்டேன். நான் பதவிக்கு வந்ததும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் பல நான் பக்கச் சார்பற்று நடுவு நிலைவகிக்கவில்லையே என்றுஎன் மீது குறைபட்டுக் கொண்டனர். நான் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குப் பக்கச் சார்பாகநடந்து கொள்வதாக என்னை விமர்சித்தனர். முதலமைச்சர் என்பவர் எல்லோருக்கும் பொதுவானவர் என்ற முறையில் பக்கச் சார்பற்று நடந்து கொள்ளவேண்டும் என்றார்கள்.

என்னைக் கூட்டமைப்பினர் வட மாகாண முதலமைச்சராகத் தேர்ந்தெடுத்திருப்பினும் அவர்களின் தேர்தல் களங்களில் பக்கச்சார்பாக இறங்கி அக்கட்சி அபேட்சகர்களுக்காக ஆதரித்துப் பேசுவது எனக்கழகல்ல என்பதே எனது கருத்து.

என்னைப் பொறுத்த வரையில் மக்கள் யார் யாரைத் தேர்ந்தெடுக்கின்றார்களோ அவர்கள் யாராக இருப்பினும் அவர்களுடன் சேர்ந்து அன்னியோன்யமாக இயங்குவது எனக்கு ஒரு பிரச்சினையல்ல. ஆனால் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் யாராக இரு ந்தாலும் அவர்கள் மக்கள் நலனுக்காக அர்ப் பணிப்புடனும் ஐக்கியத்துடனும் கடமையா ற்றக் கூடியவர்களாக,

இருக்கவேண்டும். கட்சிகளின் நலனை விட எமது மக்களின் நலனும் நலவுரித்துக்களுமே முதன்மை பெறவேண்டும் என்பது எனது கருத்து. மக்களுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றுபவர்களை எதிர் வரும் பொதுத்தேர்தலில் எம்நாட்டில் வாழும் எமதுமக்கள் தெரிவுசெய்ய வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பு. தமிழ்ப் பிரதிநிதிகளைப் பொறுத்த வரையில் வள்ளுவன் வாக்கிற்கிணங்க,நேர்மையான அரசியல், கொள்கையில் உறுதி, மக்களுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றக்கூடிய மனோபாவம், தூர நோக்குப் பார்வை, எந்தக் கட்டத்திலும் எந்தக் காரணத்துக்காகவும் விலைபோகாதமனோதிடம் கொண்டஅரசியல் வாதிகளே எமக்குத் தேவைப்படுகின்றார்கள். அத்துடன் தமிழர்களின் தனித்துவத்தை

உறுதிப்படுத்தி, அவர்களின் சுயநிர்ணய உரிமையை உறு திப்படுத்தி, எமது மக்களுக்கான உரிமையை யும் நீதியையும் பெற்றுக் கொள்ளக்கூடிய வர்களே எமது மண்ணுக்கும் மக்களுக்கு மாக இன்றைய காலத்தில் தேவையாக இரு க்கின்றார்கள். அதனை உணர்ந்து அவர்கள் தமக்குள்ள வரலாற்றுப் பொறுப்பை, தார்மீகக் கடமையைச் சரிவரச் செய்வதற்கு நான் துணையாக நிற்பேன்.

நீங்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டிய ஒரு கடப்பாட்டில் உள்ளீர்கள். இவ்வாறான சூழலிலே நான் குறிப்பிட்டதற்கிணங்கவே எமது பிரதிநிதிகளை நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டியது அத்தியாவசியமென்று எனக்குப்படுகிறது. நான் குறிப்பிட்ட சவால்களுக்கு முகம் கொடுக்கும் விதத்தில் உங்களுள் சிறந்த பிரதிநிதிகளை நீங்கள் தேர்ந்தெடுத்து பாராளுமன்றத்துக்கு அனுப்புவது உங்கள் தலையாய கடமையாக விளங்குகின்றது.

தேர்தல் முடிந்ததும் எமது மிக முக்கிய சவாலானஅரசியல் தீர்வுகளுக்காக ஒருமனதுடன் அரசியல் ரீதியாக ஒத்துழைக்கக் கூடிய பிரதிநிதிகளையே நீங்கள் தேர்ந்தெடுத்து அனுப்பவேண்டும் என முதலமைச்சர் அவ் அறிக்கையில் தெரிவித்துள்ளார். (செ-12)

## பயணப் பொதிக்குள்...

இருந்து இளம் பெண்ணின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட சடலம் குருதி உறைந்த நிலையில், ஆடைகளுக்குள் மறைக்கப்பட்டு காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிரேத பரிசோதனையின் பொருட்டு சடலம கொழும்பு தேசிய மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இதேவேளை, புறக்கோட்டை பெஸ்டியன் மாவத்தை தனியார் பேருந்து தரிப்பிடத்தில் இருந்து மீட்கப்பட்ட பெண்ணின் சடலத்தை அடையாளம் காண்பதற்காக பொலிஸார் பொது மக்களின் உதவியை நாடியுள்ளனர்.

குறித்த பெண்ணின் சில புகைப்படங்களை பொலிஸ் ஊடகப் பேச்சாளர் காரியாலயம் ஊடகங்களுக்கு வெளியிட்டிருந்தது.

அத்துடன் இக்கொலை தொடர்பான தீவிர வசாரணைகளையும் பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர். (செ-12)

## தம்பிராசாவின் மகன் மீட்பு!

(யாழ்ப்பாணம்)

காணாமல் போனதாக முறைப்பாடு செய்யப்பட்ட, அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பின் தலைவர் மு.தம்பிராசாவின் மகன் திருவளவன் (வயது 19) நேற்று மீட்கப்பட்டுள்ளார்.

கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றிலிருந்தே திருவளவன் தம்பிராசாவை பொலிஸார் மீட்டுள்ளனர்.

யாழ்ப்பாணப் பொலிஸாரும் வெள்ளவத்தைப் பொலிஸாரும் இணைந்தே இந் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

மேலும் திருவளவன் கடத்தப்பட்டரா? அல்லது காணாமல் போகச் செய்யப்பட்டாரா? என்பன குறித்து விசாரணைகளை அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர். (செ-12)

## நாளை முடிவுத் திகதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கலாசாரப் பேரவையின் ஆற்றுகைப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் பிரதேச செயலகப் பிரிவு ரீதியாக கோரப்பட்டிருந்தன. இதேவேளை இதன் முடிவுத் திகதி நாளை வெள்ளிக்கிழமை என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே கலைமன்றங்கள், குழுக்கள் தங்கள் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை மிக விரைவில் சமர்ப்பிக்குமாறு யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பா. செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். (இ-5)

## சுதந்திரக்...

தனது மனுவில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து தன்னை நீக்குவதற்கு மகிந்த ராஜபக்ஷ தரப்பினர் மேற கொண்ட முயற்சிகளை முறியடிக்கவே, ராஜித சேனாரத்ன உள்ளிட்ட ஐந்து பேரை கட்சியின் உறுப்புரிமையில் இருந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நீக்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின் றன. (செ-11)


## கட்டாக்காலி மாடு ஏல விற்பனை

இடம் : அத்தாய் விநாயகர் முன்பள்ளி
காலம் : 30-07-2015 (வியாழன்) மு:ப 10.30 மணி
பொருள் : பசு மாடு - நிறம் வெள்ளை

பெரும்பாக உத்தியோகத்தர் தலைமையில் நடைபெறும் ஏலத்தில் வெற்றிபெறும் கோரிக்கையாளர் ஏலத் தொகையை உடன் செலுத்தி ஏலம் விடப்பட்ட இடத்திலிருந்து மாட்டினை அப்புறப்படுத்த வேண்டும். (C-1693)

பெரும்பாக உத்தியோகத்தர்
கம. சேவை. நிலையம்
கரவெட்டி

தலைவர்
கமக்காரர் அமைப்பு
அத்தாய்.


## மரண அறிவித்தல்

தோற்றம்
11 - 07 - 1984



மறைவு
27 - 07 - 2015

அமரர்
**ஜேசுதாசன் ஜெயதீபன் (சூட்டி)**
(வைத்தியசாலை அருகாமை அக்கராயன்)

27-07-2015 அன்று காலமான எமதருமை நண்பன் ஜேசுதாசன் ஜெயதீபன் (சூட்டி) அவர்களின் இறுதிக்கிரியைகள் 30-07-2015 இன்று காலை 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம். (C-1695)

தகவல் :
ஸ்கந்தபுரம், அக்கராயன்
நண்பர்கள்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### பொ.வியாகேசு

(வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபைத் தலைவர்)

பிறதேசம் போல் எங்கள்
பிரதேசம் ஆகிவிட
அறநேசம் கொண்டு உழைத்த
அருந்தலைவ! உன்
பணிகொண்டு துணிவெய்தி
பலநன்மை கொண்டோம்!
அணிசெய்த உம் ஆளுமை
அழகுரைக்க வார்த்தையில்லை



சந்தையும் பஸ் நிலையமும் உன்
சாதனையின் சரித்திரங்கள்
விந்தை கண்டு சிலிர்த்திடவே
விதி செய்த வியாகேசு
தந்தையென நின்றார் அவருள்
தாயன்பும் மண்ணில் கண்டோம்
சிந்தை நெகிழ்ந்து அவர்வாழ்வு என்றும்
சிறக்க வாழ்த்துகின்றோம்

மீண்டும் உம் பணி காண
மிடுக்குடன் உம் பணி காண
தூண்டும் ஆர்வமுடன் உள்ளோம்
தூய உன் கரம் கொடுத்து வாழ்த்துகின்றோம். (C-1692)

வாழ்த்துவோர்
நண்பர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நாவின் நீதி சந்...

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் இருந்து தமக்கு கிடைத்துள்ள இந்த விசாரணைகள் தொடர்பிலான ஆவணம் ஒன்றை அடிப்படையாக வைத்தே சனல் 4 ஊடகம் இவ்வாறு கவலை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் இவ்வூடகம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித வுரிமை சட்டங்களுக்கு எதிரான சம்பவங்கள் தொடர்பிலான ஐ.நாவின் விசாரணை குறித்து எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஜெனிவாவில் நடத்தப்படவுள்ள விவாதத்தை பலவீனப்படுத்தக் கூடும் என்று விமர்சிக்கப்படக் கூடிய ஆவணம் ஒன்று சனல் 4 க்கு கிடைத்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது பத்தாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டதாக ஐ.நா தெரிவிக்கின்றது.

இலங்கைப் படைத்தரப்பினர் நெரிசலான பாதுகாப்பு வலயங்களை இலக்கு வைத்து மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலிலேயே பெரும்பாலான தமிழ் மக்கள் கொல்லப்பட்டதாக ஐ.நா அறிக்கை சுட்டிக் காட்டுகின்றது.

அதேபோன்று தமிழீழ விடுதலைப் புலிகளும் தற்கொலைத் தாக்குதல்கள் மற்றும் பொதுமக்களை மனித கேடயங்களாகப் பயன்படுத்தியமை போன்ற மோசமான மீறல்களில் ஈடுபட்டதாகவும் ஐ.நா கூறுகின்றது.

இத்தகைய மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள ஐ.நாவுடன் இணைந்து, இலங்கை அரசாங்கம் உள்நாட்டு விசாரணை ஒன்றை ஐ.நாவின் தொழில்நுட்ப உதவிகளுடன் நடத்துவதற்கான திட்டவரைவு ஒன்றைக் கொண்டிருப்பதாக இந்த ஆவணங்களில் இருந்து தோன்றுகிறது.

அதேவேளை, இந்தப் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்த உள்நாட்டுப் பொறிமுறையை அமைக்கும் திட்டங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என பெரும்பாலான மனிதவுரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில், கசிந்துள்ள ஐ.நாவின் ஆவணத்தின்படி இந்தத் திட்டத்தை இலங்கை அரசாங்கமும், வடமாகாண சபையும் இணைந்து நடைமுறைப்படுத்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இவ்விடயம் தொடர்பில் தன்னுடன் ஐ.நா எவ்வித கலந்துரையாடலையும் நடத்தவில்லை என்று வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சனல் 4 க்கு தெரிவித்துள்ளார்.

இப்போரின் போது மேற்கொள்ளப்பட்ட சர்வதேச மனிதாபிமான மற்றும் மனிதவுரிமை சட்டங்களுக்கு எதிரான சம்பவங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் உள்ளிட்ட உலகத் தலைவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

ஜெனிவாவில் செப்ரெம்பர் மாதம் இடம்பெறவுள்ள ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் வெளியிடப்படவுள்ள இலங்கை மீதான அறிக்கை தொடர்பிலான எதிர்பார்ப்பு அதிகமாக காணப்படுகின்றது.

இந்த மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் உள்நாட்டு விசாரணையை நடத்துவதாக மைத்திரிபால சிறிசேன தலைமையிலான இலங்கையின் தற்போதைய அரசாங்கம் கூறினாலும், சர்வதேச விசாரணையையே தமிழ் செயற்பாட்டாளர்கள் கோருகின்றனர்.

இதனிடையில் இலங்கையில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போட்டியிடுகின்றார்.

இலங்கை மீதான போர்க் குற்றச்சாட்டுக்களை நிராகரித்துள்ள மகிந்த ராஜபக்ஷ, சர்வதேச விசாரணைக்கும் முற்றான எதிர்ப்பை வெளியிட்டுள்ளார் என்று சனல் 4 மேலும் தெரிவித்துள்ளது. (செ-12)

# பேரறிவாளன், முருகன், சாந்தனின்...

இரத்துச் செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பாரதிய ஜனதாக் கட்சி தலைமையிலான மத்திய அரசு கடந்த ஞாயிற்றுக்கிழமை தாக்கல் செய்த மறுசீராய்வு மனுவை உச்ச நீதிமன்றத்தின் அரசியலமைப்பு அமர்வு நேற்று நிராகரித்துள்ளது.

இது தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணையில் மரண தண்டனையை இரத்துச் செய்து வழங்கப்பட்ட தீர்ப்பு சரியானதே என்று நீதிபதி ஹெச்.எல்.தத்து தலைமையிலான அரசியலமைப்பு அமர்வு நேற்று தீர்ப்பு வழங்கியுள்ளது.

இவ்வழக்கில் மேற்குறிப்பிட்ட மூவரும் தாக்கல் செய்த கருணை மனு தொடர்பில் அப்போதைய இந்திய ஜனாதிபதி முடிவு எடுப்பதில் ஏற்பட்ட காலதாமதத்தை காரணம் காட்டி இவர்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்து கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது.

இதைத் தொடர்ந்து இவ்வழக்கில் தண்டனை விதிக்கப்பட்ட 7 பேரையும் விடுதலை செய்வதற்கான தீர்மானத்தை தமிழக சட்டசபையில் முதலமைச்சர் ஜெயலலிதா கொண்டு வந்து நிறைவேற்றினார். அதேவேளை, உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையே மறுபரிசீலனை செய்யக்கோரி உச்ச நீதிமன்றத்தில் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் அப்போதைய காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு மனுத்தாக்கல் செய்தது.

இம்மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட மூன்று நீதிபதிகள் அடங்கிய அமர்வு கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதி இம்மனுவை தள்ளுபடி செய்திருந்தது.

இதனையடுத்து காங்கிரஸ் கட்சி தலைமையிலான மத்திய அரசு தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவை அடுத்து, இந்த ஏழு பேரின் விடுதலைக்கு இடைக்காலத் தடைவிதிக்கப்பட்டதுடன், இவ்வழக்கின் விசாரணைகள் அரசியல் சாசன அமர்வுக்கு மாற்றப்பட்டது.

இவ்வழக்கின் விசாரணைகள் அரசியல் சாசன அமர்வால் கடந்த 15ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட போது, இவ்வழக்கில் தமிழகம் உள்ளிட்ட மாநிலங்கள் தங்களது தரப்பு வாதத்தைத் தாக்கல் செய்ய உத்தரவிட்டிருந்தது. இதனடிப்படையில் தமிழக அரசு 7 தமிழரையும் விடுதலை செய்தது சரியே என தமது தரப்பு வாதத்தை முன்வைத்தது.

இந்நிலையில் கடந்த 21 ஆம் திகதி 5 நீதிபதிகளைக் கொண்ட அமர்வின் முன் பாரதிய ஜனதாக் கட்சி தலைமையிலான மத்திய அரசு மறுசீராய்வு மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தது.

இம்மனுவில் மேற்குறிப்பிட்ட மூவரின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்தது தவறு எனவும் அது தவறான முன்னுதாரணமாகிவிடும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே, மத்திய அரசு தாக்கல் செய்திருந்த மறுசீராய்வு மனுவை உச்சநீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.

அதேவேளை, ராஜிவ் காந்தி கொலை வழக்கில் சிறைத் தண்டனை பெற்ற 7 பேரை விடுதலை செய்யும் மாநில அரசின் அதிகார வரம்பு குறித்த வழக்கு தொடர்ந்தும் விசாரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# தேர்தல் வன்முறைகள்...

வந்துள்ளன என்று கபேயின் தேசிய அமைப்பாளர் அஹமட் மனாஸ் மகீன் தெரிவித்தார்.

இந்தச் சம்பவங்கள் குறித்து பொலிஸார் விசாரணைகளை நடத்துவதாகவும் சட்டவிரோதமான வகையில் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளை நீக்கும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் அவர் கூறினார்.

தேர்தல் வன்முறைகளை பொறுத்தவரை ஆதரவாளர்கள் மீதான தாக்குதல்கள், தேர்தல் பிரசார அலுவலகங்கள் மீதான தாக்குதல்களே கூடுதலாக இடம்பெற்றுள்ளன என்றும் மகீன் தெரிவித்தார்.

விருப்புவாக்குகளை பெற்றுக்கொள்வது தொடர்பில் ஒரே கட்சியினர் பல இடங்களில் மோதிக்கொள்கிறார்கள் எனவும் கபேயின் அதிகாரி கூறுகிறார்.

கடந்த சில தினங்களில் கிழக்கு மாகாணத்திலிருந்து கூடுதல் முறைபாடுகள் கிடைத்திருந்தாலும், இதுவரை கொழும்பு தேர்தல் மாவட்டத்திலேயே அதிகூடிய விதி மீறல்களும் வன்முறைகளும் இடம்பெற்றுள்ளதாக முறைப்பாடுகள் வந்துள்ளன எனவும் தெரிவித்தார். (செ-11)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.07.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.